ஒரே நேரத்தில் ஆறு நாடுகளில் வெளியாகும் ஒரே ஒரு தமிழ்ப் பத்திரிகை

பீற்றர் ஜோசப்
அன்ட் அசோசியேட்ஸ்

- TRAFFIC TICKETS
- ACCIDENT CLAIMS
- IMMIGRATION

2425 Eglinton Ave. East, Suite 212
*(Kennedy & Eglinton)*
416 757-7707 • 416 537-7737
Fax: 416 757-7709

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: எஸ்.எஸ்.குகநாதன் கனடா பதிப்பு: பரமேஸ்வரன்

பல் வைத்தியர்கள்
DR. ILLANGO & ASSOCIATES
Dr. இளங்கோ
Dr. இரவீந்திரன்
Dr. ஜானகி
Dr. கோபால்
SCARBOROUGH (416) 292-7004
MISSISSAUGA (905) 270-7844

02 ஜுலை 2002 விலை 1.25 டொலர், EEZHANADU மலர் 09. இதழ் 30

# கிழக்கிலங்கை தமிழ் – முஸ்லிம் பிரச்சனையின் பின்னணியில் சிங்களப் பேரினவாதம்! மூதூர் வாழைச்சேனை வன்முறையில் 38 முஸ்லிம் 79 தமிழ் வர்த்தக நிலையங்கள் தீ வைப்பு! 47 முஸ்லிம்கள் 138 தமிழர்கள் காயம்! 10 தமிழ் பெண்கள் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவு! வீடுகள் வாகனங்கள் அழிப்பு

# 8 முஸ்லிம் 20 தமிழர்கள் பலி!

நமது திருகோணமலை மட்டக்களப்பு செய்தியாளரின்
விசேட செய்திகள் 05,06,07,08 பக்கங்களில்

# மூன்று அணியாகி விட்ட தமிழர் கூட்டணி மூன்று பெண்களை எதிர் கொள்ளும் ரணில்

## ஈழவேந்தன் – அனிதா தொடர் கட்டுரைகள்

# வேலணையில் விடுதலைப்புலிகள் தாக்கப்பட்ட சம்பவம்: ஈ.பி.டி.பி. சமூகமளிக்காத நிலையில் விசாரணைகள் ஆரம்பம்!

விடுதலைப்புலிகளின் தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், உறுப்பினர் தயாளன் ஆகியோர் வேலணையில் வைத்து கடந்த 20ம் திகதி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த பாதுகாப்பு அமைச்சு நியமித்த உயர்மட்டக்கு தீவகத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை 28ம்திகதி வருகை தந்தது. இக்குழுவின் விசாரணைகள் வேலணை, சாட்டி பனித சிக்காத்திரை மாதா ஆலயத்தில் இடம் பெற்றது. இந்த விசாரணைக்கு கடற்படையினர், விடுதலைப்புலிகள், ஈ.பி.டி.பி. ஆகிய தரப்புக்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர். கடற்படையின் சார்பில் ஊர்காவற்றுறை கட்டளை அதிகாரி நிஹால் சந்திரசிறி சமூகமளித்திருந்தார். விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தீவகப் பொறுப்பாளர் செம்மணன், உறுப்பினர் தயாளன் ஆகியோரும் அங்கு பிரசன்னமாயிருந்தனர். ஈ.பி.டி.பி.யின் சார்பில் எவரும் சமூகமளிக்கவில்லை. முதல்நாள் விசாரணைகளில் செம்மணன், தயாளன் (3ம் பக்கம் பார்க்க)

வாகன விபத்தா?
இலவச ஆலோசனை
வாகன விபத்துக்கள் பற்றிய முழுமையான இலவச ஆலோசனைகளைத் தமிழில் அளித்திடும் ஒரே நிறுவனம்.

நீண்ட காலமாக
ஒரே இடத்தில்
இயங்கும் நிறுவனம்

Tel: (416) 631-6464
(416) 630-7788
Fax: (416) 631-9703

- சம்பள இழப்பீடுகள்
- வணிக இழப்பீடுகள்
- எதிர்கால சம்பள இழப்பீடுகள்
- கல்விக்கான இழப்பீடுகள்
- மறுதொழில் பயிற்சித்தல்
- சட்ட உரிமைகள்
- வீட்டுப் பராமரிப்புச் செலவுகள்
- குழந்தைகள் பராமரிப்புச் செலவுகள்
- சிறப்பு மருத்துவச் செலவுகள்

THE INSURANCE CLAIMS SPECIALISTS

தொடர்புகளுக்கு:
KILLY & BALA
1110-A Wilson Ave., Suite 211, Downsview, ON M3M 1G7

எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடு ஈழநாடு

**ஈழநாடு வாசகர்கள், வர்த்தகர்கள் விளம்பரம் செய்வோர் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும்.

பிறந்தநாள், மரணஅறிவித்தல்கள், நினைவஞ்சலிகள் மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டும் ஞாயிறு இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சமூகநல விளம்பரங்கள் சனிக்கிழமை மாலை 6.30 மணி வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். தங்கள் ஆதரவிற்கு நன்றி

**வாசகர்களே! விளம்பரதாரர்களே!**

ஈழநாட்டில் விளம்பரம், அறிவித்தல்கள் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் உங்கள் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம்.

SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

A.R.K.MARKET
31 - 35 ST.DENNIS DRIVE
(DONMILLS / EGLINTON)

DAILY NEEDS
2537A PHARMACY AVE
(FINCH / PHARMACY)

JAFFNA SUPER STORES
1221 MARKHAM RD # 14
(MARKHAM / EELESMERE)

KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

AGP MART
4A WADE AVE
TORONTO

UTHAYA'S SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

**மிஸிசாகா:**

THARSHNA'S SUPER MARKET
27 DUNDAS ST EAST
MISSISSAUGA

**மொன்றியல்:**

MARCHE THURGA
444 JEANTALON WEST
(514) 276 - 9262

**மேலதிக தொடர்புகளுக்கு:
பரமேஸ்: (416)266 - 9919**

**வாசகர்களின் கவனத்திற்கு!**

ஈழநாட்டில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்களும் ஐரோப்பிய மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வெளியாகும் பதிப்புக்களிலும் இடம் பெறும் என்பதையும் ஐரோப்பிய வானொலியில் உடனுக்குடன் இலவசமாக ஒலிபரப்பாகும் என்பதையும் அறியத் தருகின்றோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும். (905) 653 - 3000 (416) 266 - 9919

# தமிழ் –முஸ்லிம் இனக்கலவரம் மூளும் ஆபத்து: மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில் ஊரடங்கு

வன்செயல்கள் பரவுவதைத் தடுக்க கிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் வசிக்கும் பகுதிகளில் வன்செயல்கள் கட்டுக்கடங்காது தலையெடுத்துப் பரவி வருவதையடுத்து மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள் முழுவதிலும் காலவரையற்ற ஊரடங்குச் சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தியிருக்கின்றது. ஊரடங்கு உத்தரவு தொடர்பான விசேட அறிவித்தல்கள் கடந்த வெள்ளிக்கிழமை 26ம்திகதி அரச வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் விடுக்கப்பட்டது.

வன்செயல்களைக் கட்டுப்படுத்த முதலில் ஆங்காங்கே உத்தியோகப்பற்றற்ற முறையில் ஊரடங்கு உத்தரவைப் பொலிசார் நடைமுறைப்படுத்தினர். ஆனால் வன்செயல்கள் கட்டுக்கடங்காமல் பரவியதையடுத்து அரசு இந்த அவசர நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

தற்போதைய வன்செயல் தமிழ் முஸ்லிம் இனங்களுக்கிடையிலான இனக்கலவரமாக மாறிவிடும் பேராபத்தைத் தவிர்க்கவே அரசு இரு மாவட்டங்களிலும் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியிருக்கின்றது.

வன்முறைக் கும்பல்கள் கிரனேட்டுக்கள் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் நிலைமை பாரதூரமான கட்டத்தை எட்டியிருக்கின்றது. வெள்ளிக்கிழமை 28ம்திகதி மாலை வரை ஆறுபேர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பெரும் எண்ணிக்கையான கடைகள், வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன.

மூதூரில் கடந்த செவ்வாயன்று ஆரம்பித்த தமிழ் – முஸ்லிம் வன்முறைகள் தொடர்கின்றது. வன்செயல்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து இரு சமூகங்களும் ஹர்த்தால் மற்றும் கண்டனப் போராட்டங்களை முன்னெடுத்த போது வன்செயல்கள் மேலும் தீவிரமடைந்தனஎன்பது குறிப்பிடத்தக்கது

# கிழக்கில் அமைதியை நிலைநாட்ட 20 பேர் கொண்ட சமாதானக்குழு

மட்டக்களப்பில் பூரண அமைதியை நிலைநாட்டுவதற்கு தமிழ் -முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த இருபது பேர் கொண்ட சமாதானக்குழு ஒன்றை உருவாக்க மேல்மட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

வாழைச்சேனைக்கு கடந்த வெள்ளிக்கிழமை விஜயம் செய்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலகத்தில் பிற்பகல் நடத்திய ஒரு மாநாட்டிலேயே சமாதானக்குழு அமைக்கப்பட்டது.

கலவரங்களால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வாழைச்சேனை நகரையும் ஏனைய பகுதிகளையும் அமைச்சர்கள் குழுவினர் சுற்றிப் பார்வையிட்டனர்.

நெடுஞ்சாலைகள் பிரதிஅமைச்சர் அதாவுல்லா, வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர், கடற்தொழில் பிரதி அமைச்சர் மொகிதீன் அப்துல்காதர், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம், தங்கவடிவேல், ஆகியோரே வாழைச்சேனைக்குச் சென்றோராவார்.

பதில் பொலிஸ்மாஅதிபர் ஆனந்தராஜா, கிழக்கு மாகாண பிரதிபொலிஸ் மாஅதிபர், கண்காணிப்புக்குழு உறுப்பினரான [illegible]மான், அரசாங்க அதிபர் சண்முகம் ஆகியோரும் அமைச்சர்கள் குழுவுடன் சென்றிருந்தனர். வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற பொலிஸ்மாஅதிபரும் அமைச்சர்களும் அங்கு கூட்டம் ஒன்றை நடத்தினர்.

மீண்டும் அமைதியை ஏற்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து அவர்கள் ஆராய்ந்தனர். பின்னர் பாதிக்கப்பட்ட கடைத்தொகுதிகளைச் சென்று அவர்கள் பார்வையிட்டனர். அசம்பாவிதங்களினால் 66 கடைகள் சேதமாக்கப்பட்டன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஓட்டமாவடியில் பிரதிஅமைச்சரின் இல்லம் தாக்கி எரிக்கப்பட்டது

மட்டக்களப்பு ஓட்டமாவடியில் மீன்பிடி அமைச்சர் மொஹைதீன் அப்துல்காதரின் இல்லம் தாக்கி அழிக்கப்பட்டது. கலவரங்களால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட அங்கு சென்ற அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் குழு அங்கிருந்து திரும்பிய சிறு நேரத்தில் இச்சம்பவம் நடைபெற்றிருக்கின்றது.

அமைச்சர்கள் குழு சென்ற பின்னர் பல்லாயிரக்கணக்கான மக்கள் நகரில் ஒன்று திரண்டனர். பின்னர் அவர்கள் ஓட்டமாவடியில் உள்ள கடற்தொழில் பிரதிஅமைச்சர் அப்துல் காதரின் இல்லத்தைத் தாக்கத் தொடங்கினர். தாக்குதலையடுத்து இல்லத்தின் முன்பகுதி எரியத் தொடங்கியது.

பொலிசார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த போதும் அவர்களால் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இராணுவ வாகனம் ஒன்று அங்கு கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருந்தது. இச்சம்பவம் நடை-பெற்ற போது குறிப்பிட்ட வீட்டில் எவரும் இருக்கவில்லை. காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த ஓரிருவரும் அங்கு காணப்படவில்லை. அமைச்சர்கள் தங்களைச் சந்திக்காமல் சென்றதால் மக்கள் ஆத்திரமடைந்தனர் என்று கூறப்படுகின்றது. இதற்கிடையில் செம்மண்ஓடை என்ற இடத்தில் நடைபெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் ஆறு பேர் காயமடைந்தனர். அவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## அமைச்சர் ஹக்கீமுடன தமிழ்செல்வன் தொலைபேசியில் தொடர்பு

கிழக்கில் இடம்பெற்றுவரும் கலவரங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்கும்படி விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீமிடம் கோரியிருக்கின்றார். தமிழ்ச்செல்வன் தொலைபேசி மூலம் அமைச்சர் ஹக்கீமுடன் தொடர்பு கொண்டு இந்தக் கோரிக்கையை விடுத்தார் என்று புலிகளின் வானொலி தெரிவித்திருக்கிறது. கிழக்கில் இடம் பெறும் வன்முறைகளை கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவருவது பற்றிபேசினார்

**ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்**



தொடர்புகளுக்கு: **சுவாமி சோமேஸ்வரக் குருக்கள்**
(பிரதம குருக்கள், தலைவர், ஜோதிடர், திருமணப் பதிவாளர்)

3057 Universal Drive, Mississauga, ON L4X2E2
TEL: (905) 602-2068/629-2050 FAX: (905) 629-4428

**பூசை நேரம்**
காலை 8.00 மணி
பகல் 12.00 மணி
மாலை 7.00 மணி
செவ்வாய் - வெள்ளி
மாலை 7.30 மணி

Website:
www.homestead.com/smma/temple.html

**கோயில் திறந்திருக்கும் நேரம்**
காலை 7.00 முதல்- 01.00 வரை
மாலை 6.00 முதல்- 9.00 வரை
விசேட நாட்களில் நேரங்கள் மாற்றியமைக்கப்படும்

# ஈழநாடு

EEZHANADU
P.O.BOX 878
STATION 'Q'
TORONTO - ONT
CANADA - M4T 2N7

**தொலைபேசி:**
**(905) 653 - 3000**
**(416) 266 - 9919**
**(416) 528 - 1867**
**தொலைநகல்:**
**(905) 653 - 4031**

**தலைமையகம்:**
EEZHANADU
19 BD DE LA CHAPELLE
FRANCE
TEL: (1) 53 26 59 21

**பிரதம நிர்வாகி:**
**எஸ்.பாலச்சந்திரன்**

**பிரதம ஆசிரியர்:**
**எஸ்.எஸ்.குகநாதன்**

**கனடா பதிப்பு:**
**பிரதம ஆசிரியர்**
T.K.பரமேஸ்வரன்

**சுவிஸ்சர்லாந்து**
EELANADU
POST FACH 60
CH 4302 AUGST
ABO CHF 130
TEL: 061 /813 1552

**ஜேர்மனி**
EELANADU
GROLITZE STR 6
41460 NEUSS
TEL: 02131 / 101748

**அவுஸ்திரேலியா**
EELANADU
170 HOTHLYN DRIVE
CRAIGLEBURN
VICTORIO 3064
TEL: (03) 3056246

**லண்டன்**
EELANADU
38 MOFFAT ROAD
LONDON - U.K
SW 177 EZ


ஈழநாட்டில்பிரசுரமாகும் அனைத்து விடயங்களும் முன் அனுமதியின்றி மீள் பிரசுரம் செய்ய முடியாது.

# வேலணையில் விடுதலைப்புலிகள் தாக்கப்பட்ட சம்பவம்: ஈ.பி.டி.பி. சமூகமளிக்காத நிலையில் விசாரணைகள் ஆரம்பம்!

விடுதலைப்புலிகளின் தீவக அரசியல்துறைப்பொறுப்பாளர் செம்மணன், உறுப்பினர் தயாளன் ஆகியோர் வேலணையில் வைத்து கடந்த 20ம் திகதி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த பாதுகாப்பு அமைச்சு நியமித்த உயர்மட்டக்கு தீவகத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை 28ம்திகதி வருகை தந்தது.

இக்குழுவின் விசாரணைகள் வேலணை, சாட்டி புனித சித்தாத்திரை மாதா ஆலயத்தில் இடம் பெற்றது. இந்த விசாரணைக்கு கடற்படையினர், விடுதலைப்புலிகள், ஈ.பி.டி.பி. ஆகிய தரப்புக்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர். கடற்படையின் சார்பில் ஊர்காவற்றுறை கட்டளை அதிகாரி நிஹால் சந்திரசிறி சமூகமளித்திருந்தார். விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தீவகப் பொறுப்பாளர் செம்மணன், உறுப்பினர் தயாளன் ஆகியோரும் அங்கு பிரசன்னமாயிருந்தனர். ஈ.பி.டி.பி.யின் சார்பில் எவரும் சமூகமளிக்கவில்லை. முதல்நாள் விசாரணைகளில் செம்மணன், தயாளன் ஆகியோரும் சம்பவம் நடந்த இடத்தில் உள்ள வீட்டின் உரிமையாளர், அவரது மனைவி, அயல்வீட்டுக்காரர் இருவர் ஆகியோரும் தமது சாட்சியங்களை அளித்தனர். இரு தினங்கள் இங்கு விசாரணைகளை நடத்த இக்குழு திட்டமிட்டிருந்ததாகவும் எனினும் சாட்சியங்கள் ஒரே நாளிலேயே பதிவு செய்யப்பட்டதால் குழு மறு நாள் சனி கொழும்பு திரும்பினர்.

# வாழைச்சேனை தமிழ் –முஸ்லிம் மக்கள் இடம்பெயர்வு! உணவுப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு

வாழைச்சேனையில் இடம்பெற்ற சம்பவங்களையடுத்து அச்சம் காரணமாக தமிழ் - முஸ்லிம் மக்கள் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

மயிலங்கரச்சை, தியா, வட்டவான், புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை எல்லைப்பகுதி, கறுவாக்கேணி எல்லை,? மீறாவோடை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தமிழ் - முஸ்லிம் மக்களே இடம் பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை கடைகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதால் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது

இது தொடர்பாக மட்டக்களப்பு வர்த்தக சங்கத்துடன் தொடர்பு கொண்டதையடுத்து சனிக்கிழமை மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தினரால் இப்பகுதி உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டன.

இதேவேளை வாகரைப் பிரதேச மக்கள் உணவு, வைத்திய வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாது பெரும் அவலநிலையை எதிர்கொண்டுள்ளனர். வாழைச்சேனையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அசம்பாவித சம்பவம் மற்றும் வெள்ளிக்கிழமை அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு என்பவற்றால் வாகரைப் பிரதேச மக்கள் வாழைச்சேனைப் பகுதிக்கு வர முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

அதே சமயம் வாகரைப் பிரதேசத்தில் இருந்த வைத்தியசாலை இராணுவத்தினரால் குண்டு வீச்சுக்கு இலக்கானதைத் தொடர்ந்து அனைத்துத் தேவைகளையும் வாழைச்சேனைக்கு வந்து பூர்த்தி செய்வது குறிப்பிடத்தக்கது.

# கண்காணிப்புக்குழுத்தலைவர் தமிழ்ச்செல்வனுடன் வன்னியில் சந்திப்பு

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கடந்த வெள்ளிக்கிழமை 28ம்திகதி வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் வரை பேச்சுவார்த்தை நடத்தியதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்போதைய நிலவரம், கிழக்கு மாகாணத்திற்கான விடுதலைப்புலிகளின் கடல் வழிப் போக்குவரத்து, யாழ்.தீவகப் பிரச்சனை ஆகியன குறித்து தமிழ்ச்செல்வனுடன் கண்காணிப்புக்குழுத் தலைவர் பேச்சு நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேச்சுக்களின் போது விடுதலைப்புலிகளின் கிழக்கிற்கான கடல் வழிப் போக்குவரத்து குறித்த இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கின்றது.

# சமாதானத்தை விரும்பாத சக்திகளே இன வன்முறையை தூண்டுகின்றன என்கிறார் அன்வர்

கடந்த சில தினங்களாக கிழக்கிலே இடம்பெற்று வரும் இன வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் இங்கு வாழும் தமிழ் - முஸ்லிம் மக்கள் மிகவும் நிதானத்தோடு கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கையில் நிரந்தரச் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவ்வப்போது செய்து கொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தங்களின் பின்னரும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைக்கு தீர்வாக மாவட்ட அபிவிருத்தி சபைகள் தீர்வாக அறிவிக்கப்பட்ட போதும் அவ்வாறே 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் இலங்கை - இந்திய உடன்படிக்கை அமுலாக்கப்பட்ட போதும் இரத்தம் தோய்ந்த வன்முறைச் சம்பவங்களை பேரினவாத சக்திகளின் முகவர்கள் ஏற்படுத்திய வரலாறுகளை நாம் மறைத்து விட முடியாது.

தமிழ் –முஸ்லிம் சமூகங்கள் ஒன்றுபட வேண்டும் என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடாக பிரபா - ஹக்கீம் ஒப்பந்தம் அமைந்தது. இன்று தமிழ் - முஸ்லிம் வன்முறையைத் தூண்டி இம்மண்ணிலே அப்பாவிகளின் இரத்தங்களினை தெருவிலே தெளிப்பதற்கு வரிந்து கட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகையதொரு சந்ர்ப்பத்தில் முஸ்லிம் மக்கள் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்தின் கரத்தை பலப்படுத்தவும் ஹக்கீம் - பிரபா உடன்படிக்கையை வெற்றிகரமாக அமுல்படுத்தி ஒரு சமூகத்தை இன்னொரு சமூகம் அடக்கி ஆள முடியாது என்ற கோட்பாட்டை அடைந்து கொள்ளுவதற்காக அமைதி பேணி நிதானமாகவும் பக்குவமாகவும் இன்றைய காலகட்டத்தில் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# திருகேதீஸ்வரம் ஆலயப் பிரதேசம் புனித நகராகப் பிரகடனம் அமைச்சர் மகேஸ்வரன் தகவல்

பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரம் ஆலயப்பகுதி புனித நகராகப் பிரகடனம் செய்யப்பட இருக்கின்றது. இது தொடர்பான வர்த்தகமானி அறிவித்தல் விரைவில் வெளியாகும். இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

தமது அமைச்சு அலுவலகத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது

அமைச்சு செயலாளர் சகிதம் பிரதமரைச் சந்தித்து வடக்கு கிழக்கு ஆலயப் புனரமைப்புத் தொடர்பாகக் கலந்துரையாடினோம். திருக்கேதீஸ்வரம் ஆலயப் பகுதியைப் புதின நகராகப் பிரகடனம் செய்யப் பிரதமர் இணங்கியுள்ளார். விரைவில் அது தொடர்பான வர்த்தகமானியை பிரதமர் வெளியிடுவார்.

வடக்கு கிழக்கு ஆலயங்களைப் புனரமைக்க 929 கோடி ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளதாகப் பிரதமரிடம் தெரிவித்தோம். இந்த நிதியைப் படிப்படியாக வழங்கப் போவதாகப் பிரதமர் உறுதியளித்தார்.

கீரிமலை புனித கேணிக்கு மக்கள் சென்று வர விசேட ஏற்பாடு செய்து தருவதாகப் பிரதமர் உறுதியளித்துள்ளார் என்றும் அமைச்சர் மகேஸ்வரன் பத்திரிகையாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.


**TORONTO - COLOMBO RETURN TRIP**

**ONLY**
**1285.00**
*(Tax included)*

**SkyRoute**
TRAVEL SERVICES INC.

1200 MARKHAM ROAD, SUITE 106
SCARBOROUGH, ONTARIO, M1H 3C3
TEL: 416-439-4000 FAX: 416-439-6463
TOLL FREE: 1-877-468-6759 - 1-877-GO TO SKY
E-mail: contact@skyroutetravel.net

CHENNAI - 1260.00
LONDON - 460.00
AMSTERDAM - 520.00
ZURICH - 550.00
OSLO - 675.00
PARIS - 520.00
CHICAGO - 183.00
LOS ANGELES - 355.00
PHOENIX - 355.00

*(Taxes are extra and the fares are subject to change without notice)*

**416-439-4000**

IATA
Reg: 04488805 / 04652780
TICO

# அர்த்தமற்ற ஹர்த்தால்கள் நிறுத்தப்பட வேண்டும் அம்பாறை பள்ளிவாசல்கள் சம்மேளனம் கோரிக்கை

அர்த்தமற்ற ஹர்த்தால்கள் நிறுத்தப்பட வேண்டும். சமூகத் தலைவர்களால் அழைக்கப்படாத ஹர்த்தாலுக்கு எதிர்காலத்தில் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கக்கூடாது. முஸ்லிம்கள் பிரபா - ஹக்கீம் ஒப்பந்தத்தைக் கௌரவிக்க வேண்டும்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனப் பொதுச்செயலாளர் மஜீத் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளார். சம்மேளனம் சார்பில் இந்த அறிக்கையை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

சமாதான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் பத்து ஹர்த்தால்கள் நடந்துள்ளன. இவற்றால் ஆன பலன்கள் எதுவுமில்லை. மாறாக அன்றாடம் கூலி வேலை செய்த பிழைப்பவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நடாத்த பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

மனிதஉழைப்பும், சக்தியும் அவமே முடக்கப்பட்டு நாட்டின் பொருளாதாரத்தில் மேலும் ஒரு பின்னடைவு ஏற்படுகின்றது. வீதிகளில் ஆங்காங்கே ரயர்கள் எரிக்கப்படுவதால் பெருமளவில் சூழல் மாசுபடுகின்றது. மக்கள் தான் திட்டமிட்டபடி தமது கடமைகளை நிறைவேற்ற முடியாமல் தவிக்கின்றனர். அரசாங்க அலுவலகங்களும் பாடசாலைகளும் வீணாக மூடப்படுகின்றன. எனவே தான் ஹர்த்தால் நடத்தக்கூடாது. ஹர்த்தாலை ஆரம்பிப்பவர்கள் அல்லது இனங்களுக்கிடையே வன் முறையைத் தூண்டுபவர்கள் சமாதானத்தின் துரோகிகள் என அடையாளப்படுத்த வேண்டும்.

விடுதலைப்புலிகளின் காரியாலயம் மூதூரில் தகர்க்கப்பட்டது துரதிஷ்ட சம்பவமாகும். அடாவடித்தனத்தில் ஈடுபட்டவர்கள் இனங் காணப்பட்டு நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

மூதூர் சம்பவத்தையடுத்து முஸ்லிம் கிராமங்களிலும் தமிழ்க் கிராமங்களிலும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. உறவிலும் விரிசல் ஏற்பட்டுள்ளது. வாழைச்சேனை, ஓட்டமாவடி, பிரதேசங்களில் வன்முறை உக்கிரமடைந்து கொலைகளும் கடை எரிப்புக்களும் நடந்துள்ளன. வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் சமூகத் தலைவர்களால் அழைக்கப்படாத எந்தக் ஹர்த்தாலுக்கும் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கக்கூடாது. முஸ்லிம்கள் பிரபா- ஹக்கீம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கௌரவிக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

## திருமலையில் தமிழர் – முஸ்லிம்கள் பிரிந்து வாழ முடியாது என்கிறார் சம்பந்தர்

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம்கள் ஒருகாலமும் பிரிந்து வாழமுடியாது. பொருளாதார ரீதியில் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலை தான் உள்ளது. இதனை உணர்ந்து இரு இனங்களைச் சேர்ந்த மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும். இதனை அனைத்துத் தரப்பினரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மூதூர் பிரதேச செயலகத்தில் பேசும் போது தெரிவித்தார். அவர் மேலும் சொன்னதாவது திருகோணமலை மாவடட்டத்தில் தெற்கு தொடக்கம். வடக்கு புல்மோட்டை வரை தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றாகத் தான் வாழ்ந்து வருகின்றார்கள். அனைவரும் மகிழ்ச்சியாகவும் புரிந்துணர்வுடனும் வாழ்ந்து வந்த இவ்வேளையில் மூதூரில் மட்டும் அசம்பாவிதம் ஏற்படுவதற்குரிய காரணத்தை நாம் பார்க்க வேண்டும். எத்தனையோ தியாகங்களுக்குப் பின்னர் உருவாகியுள்ள சமாதான முயற்சியைக் குழப்புவதில் சிலர் திட்டமிட்டுச் செயற்படுவது போன்ற தோற்றம் தான் மூதூர் சம்பவங்களின் பின்னணியில் இருக்கிறது என்றார்.

## மூதூர் தமிழ்மக்களுக்கு மீண்டும் பிரதிநிதித்துவம்

கூட்டமைத் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக மூதூர் கிழக்குக் கட்டைப்பறிச்சான் ஊரைச் சேர்ந்த திரு துரைரத்தின சிங்கத்தை தமிழர் விடுதலைக்கூட்டணி தெரிவு செய்ததையடுத்து திருமலை மாவட்டத்திற்கு மேலதிக தமிழர் பிரதிநிதித்துவம் கிடைப்பதுடன் மூதூர் தொகுதித் தமிழ்மக்களுக்கு இழந்து போன பிரதிநிதித்துவம் மீண்டும் கிடைக்கவுள்ளது.

1947 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மூதூர் தேர்தல் தொகுதியில் 54 சத வீதம் முஸ்லிம்களும் 36 சதவீதம் தமிழர்களும் இருந்தனர். தேர்தலில் அபுபக்கர் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டு தமிழர்களின் ஆதரவுடன் எம்.பி.யானார். 1952, 1956 தேர்தல்களில் முகம்மது அலி தமிழரசுக்கட்சி ஆதரவுடன் சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1960 ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்காக மூதூர் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப்பட்டது. 1960 மார்ச், ஜூலை தேர்தல்களில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஏகாம்பரம் மூதூர் தொகுதியின் முதல் எம்.பி. யாகத் தெரிவு செய்யப்பட்டார். முஸ்லிம்களை விட குறைவாகத் தமிழர்களின் எண்ணிக்கை இருந்த போதிலும் அவர்களின் ஒற்றுமை இந்த வெற்றியை ஈட்டித் தந்தது.

1961ம் ஆண்டு சத்தியாக்கிரகத்தில் இராணுவத்தடியடியால் காயமடைந்த உடல் நலிவுற்ற ஏகாம்பரம் 1962 ஆம் ஆண்டு மரணமடைய இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில் முகம்மது அலி தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1965 தேர்தலில் தமிழர்கள் ஆதரவுடன் முகம்மது அலி தமிழரசுக் கட்சி சார்பில் வெற்றியீட்டினார். மஜீத் சுதந்திரக்கட்சி சார்பில் வெற்றி பெற்றார்.

1969 ஆம்ஆண்டு தமிழரசுக் கட்சியை விட்டுப் பிரிந்த முகம்மது அலி ஐ.தே.கட்சியில் சேர்ந்து அதன் வேட்பாளராக 1970 தேர்தலில் போட்டியிட்டார். தமிழரசுக் கட்சி சார்பில் தங்கத்துரை போட்டியிட்டு இரண்டாவது எம்.பி.யாக மூதூரில் தெரிவு செய்யப்பட்டார்.

1977 மூதூர் தொகுதி இரண்டாக உடைக்கப்பட்டு மீண்டும் ஒற்றை அங்கத்தவர் தொகுதியானது. கூட்டணி சார்பில் மக்கின் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். முகம்மது அலியின் தம்பி மறாப் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டு வெற்றியடைந்தார்.

புதிய விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மூதூர் தொகுதி திருகோணமலை மாவட்டத்தில் சங்கமமாகியது. ஈரோஸ் இயக்கம் முன் வைத்த சுயேட்சைக்குழுப் பட்டியலில் இரண்டு பேர் திருமலை மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர்.

1994 பொதுத்தேர்தலில் மீண்டும் தங்கத்துரை திருகோணமலை மாவட்டத்தில் வெற்றி பெற்றார். இவருக்கு மூதூர் தமிழர்களின் பூரண ஆதரவு இருந்தது. (2000 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழர்கள் எவரும் திருமலையில் வெற்றி பெறவில்லை)

2002ம் ஆண்டு தேர்தலில் ஒற்றுமைப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சார்பில் சம்பந்தன் சுமார் 40ஆயிரம் விருப்பு வாக்குகளுடன் திருமலையில் வெற்றி பெற்றார். இவருக்கு அடுத்தபடியான (ஆம் பக்கம் பார்க்க)

## தயாள சிந்தை கொண்டோரே இந்தச் சிறுவனின் உயிர் காக்க உங்கள் கரங்கள் நீளட்டும்



கனடாவாழ் ஈழத்தமிழினமே! வணக்கம்!

நான் ஈழத்தைச் சேர்ந்தவர். எனது மகன் காண்டீபன் வயது 12. இரத்தப்புற்று நோயால் அவதிப் படுகின்றான். கடந்த இரண்டு வருட காலமாக காஞ்சி காமகோடி குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். புற்றுநோய்க் கிருமிகளை அளிப்பதற்கு உறீமோதிரபி சிகிச்சை அளிக்கப்பட்டாலும் கிருமி மீண்டும் தொற்றுகினறது.

இதை இல்லாமல் செய்து குணபடுத்துவதற்கு எலும்பு மச்சை மாற்றுச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென்று டாக்டர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இச்சிகிச்சை ஏறத்தாழ நான்கு லட்சத்திலிருந்து ஆறு லட்சம் ரூபா வரை தேவைப்படுகின்றது என டாக்டர்கள் கூறியுள்ளனர். இப்பெருந்தொகையை என்னால் பெற முடியாதுள்ளது.

எனது கணவர் இலங்கையில் மின்சார சபையில் மாதம் ஆறாயிரம் ரூபா சம்பளத்தில் வேலை செய்கின்றார். இப்பணம் எனது அன்றாட சீவியத்திற்கே போதுமானதாக இல்லை. வேறு வருமானம் இல்லை. எனது மகள் வயது 20, மகன் வயது 17 இவர்கள் இருவரும் படிக்கின்றார்கள். இதுவரையில் இவரின் சிகிச்சைக்காக மூன்று லட்சத்திற்கு மேல் செலவாகியுள்ளது.

இப்பணம் எமது உறவினர்கள் உதவியுள்ளார்கள். அவர்களிடமிருந்து மேலும் எதிர்பார்க்க முடியாதுள்ளது. இப்பெருந்தொகைப் பணத்தை நல்கி எமது மகன் உயிரைக் காப்பதற்கு உதவுமாறு கனடா வாழ் தமிழீழ நல்லிதயங்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தங்கள் நன்றியுள்ள

ச.கமலாதேவி

(கனடா தொடர்புகளுக்கு (416) 588 - 7932

S.Kandeepan /
S.Kamalathey
Indin bank
Valasaravakkam
Chennai - 87 - INDIA
A/C NO - 11903


ROYAL ACCIDENT BENEFITS

நீங்கள் வாகன விபத்துக்களினால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?
இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்!
வாகன விபத்தால் பாதிப்பானவர்களுக்குரிய
- உரிமைகள்
- நன்மைகள்
- பாதுகாப்புகள்

உங்களுக்குரிய
- தற்போதைய / எதிர்காலச் சம்பள இழப்புகள்
- கல்வி /வணிக இழப்புகள்
- வீட்டு /குழந்தைப் பராமரிப்புச் செலவுகள்
- மருத்துவ வசதிகள்

போன்றவற்றை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள அழையுங்கள்
குமார்

To claim proper compensation for your damages, wage loss and all insurance benefits you are legally entitled to.
"We Fight For Your Right"
Call: KUMAR
TEL: (416) 283-8000
FAX: (416) 283-3567
1200 Markham Road, Suite 105
Scarborough, ON M1H 3C3
(Markham & Ellesmere)

# கிழக்கிலங்கை தமிழ் - முஸ்லிம் பிரச்சனையின் பின்னணியில் சிங்களப் பேரினவாதம்! மூதூர் வாழைச்சேனை வன்முறையில் 38 முஸ்லிம் 79 தமிழ் வர்த்தக நிலையங்கள் தீ வைப்பு! 47 முஸ்லிம்கள் 138 தமிழர்கள் காயம்! 10 தமிழ் பெண்கள் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவு! வீடுகள் வாகனங்கள் அழிப்பு 8 முஸ்லிம் 20 தமிழர்கள் பலி!

கடந்த சில தினங்களாகக் கிழக்கிலங்கை என்று தற்போது வழங்கப்படும் தென்தமிழ் ஈழப்பகுதிகளான திருகோணமலை மாவட்டத்தின் தென்பகுதியிலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபகுதியிலும் நடைபெற்ற தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலான வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் சிங்களப் பேரினவாதிகளின் இரகசியக் கரம் இருந்து வந்துள்ள ரகசியம் தற்போது பட்டவர்த்தனமாக அம்பலத்துக்கு வந்துள்ளது.

தற்போதைய சமாதானச் சூழலைச் சீர்குலைத்து தமிழ் - முஸ்லிம் உறவுகளைச் சீரழித்துத் தமிழ்ஈழ விடுதலைப்புலிகளை சிக்கலான சூழ்நிலைக்குத் தள்ளும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்திற்குச் சிங்களப் பேரினவாத ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நெருக்கமான முப்படை அதிகாரிகள் சிலரின் பங்களிப்பு இருந்தது என்பதும் பகிரங்க இரகசியமாகியுள்ளது.

இதேவேளை மேற்படி சதித்திட்டத்திற்கு உடந்தையாக முஸ்லிம் காங்கிரஸில் உள்ள ரவூப் ஹக்கீம் எதிர்ப்பணியைச் சேர்ந்த சில முஸ்லிம்களும் முன்னாள் வடக்குகிழக்கு மாகாண சபையின் பொம்மை முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். அணிக்குக் கீழ்ப்பட்ட ராசிக் குழுவைச் சேர்ந்தவர்கள் சிலரும் கையூட்டுப் பெற்றுக் கருவிகளாகச் செயற்பட்ட விதம் பற்றிய தகவல்களும் தற்போது கசியத் தொடங்கியுள்ளன.

நடைபெற்ற சம்பவங்கள் பற்றியும் அதன் பின்னணி பற்றியும் எந்தவொரு ஊடகமும் சரியான செய்திகளைத் தரத் தவறியுள்ள தற்போதைய சூழ்நிலையில் எந்தச் செய்தியானாலும் அதனை முந்தித் தருகின்ற உங்கள் அபிமான ஈழநாடு சமீபத்திய வன்முறைகள் பற்றிய ஆதாரபூர்வமான செய்தியைத் தருவதில் மகிழ்ச்சியடைகின்றது.

அதே சமயம் இந்த வன்முறையில் பாதிக்கப்பட்ட நம் தமிழ்பேசும் உடன்பிறப்புக்கள் அனைவர்க்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்ற உங்கள் அபிமான ஈழநாடு தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் தோற்றுவிக்கப்பட்டுள்ள குரோத உணர்வுகள் நீங்கிச் சாந்தியும் சமாதானமும் கிழக்கில் நிலவ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வேண்டுகின்றது.

மேற்படி வன்முறைகள் பற்றியும் அவற்றின் பின்னணி பற்றியும் கிடைக்கப் பெற்ற தகவல்கள் பின்வருமாறு சமாதான எதிரிகள் ஶ்ரீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டு நான்கு மாதங்களுக்கு மேலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற யுத்தநிறுத்தமானது சிங்களப் பேரினவாதிகளுக்கு பெரும் கசப்பை ஏற்படுத்தி வருகின்றது.

இந்தக் கசப்புணர்வுகளுக்கு பல்வேறு காரணங்கள் உண்டு. சந்திரிகா குமாரதுங்க மற்றும் அவரது கட்சியைச் சேர்ந்த



பலருக்கு நிரந்தர சமாதானம் ஏற்பட்டால் தமது அரசியல் எதிர்காலம் சூனியமாகி விடும் என்ற அச்ச உணர்வுண்டு.

முப்படைகளுக்குப் பொறுத்தவரையில் அவர்களில் பலருக்கு இயல்பாக உள்ள தமிழ்இன விரோதப் போக்குடன் போரின் பின்னணியில் சாதாரண லஞ்சம் முதல் ஆயுதக் கொள்வனவில் கிடைக்கும் கமிசன் வரை லாபம் சம்பாதிக்க முடியாத சூழல் வரப்போகின்றதே என்ற அங்கலாய்ப்பு.

இதையொட்டிய விதத்தில் ஆயுத இறக்குமதி மூலம் கோடானுகோடி ரூபா லாபம் சம்பாதித்து வருகின்ற ஆயுத வியாபாரிகள், இடைத்தரகர்களுக்கும் சமாதானத்தைக் குழப்ப வேண்டிய நிர்ப்பந்தம். இத்தகைய ஆயுத வியாபாரிகள் அளித்த நிதியுதவியைக் கொண்டே சமாதானத்தை எதிர்க்கும் ஜே.வி.பி .தன் நடவடிக்கையை முடுக்கி விட்டுள்ளது என்று கருதப்படுகின்றது.

## தீய சக்திகள

இவ்வாறு இயல்பு நிலைமைகள் தமிழ்ப் பகுதிகளில் ஏற்படுவதைத் தடுத்து சமாதானச் சூழலை எப்பாடு பட்டாவது சீர்குலைக்க வேண்டும் என்பதே இந்தத் தீய சக்திகளின் நோக்கமாக உள்ளது. இந்த அடிப்படையில் சந்திரிகாவின் எண்ணங்களை நன்குணர்ந்த அவர் காலால் இட்ட வேலையை தன் தலையால் செய்யக் காத்திருக்கும் படைத்துறை அதிகாரிகள் பலர் ஏற்கனவே சமாதானத்தைச் சீர்குலைக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். யுத்த நிறுத்த விதிகளை மீறுவது யுத்த நிறுத்த ஏற்பாடுகளைத் தாமதப்படுத்துவது விடுதலைப்புலிகளுக்கு ஆத்திரமூட்டுவது. அப்பாவிப் பொதுமக்களைத் துன்புறுத்துவது போன்ற செயல்கள் வடக்குகிழக்கில் பரவலாகச் செய்து இப்படைத்துறையினர் யுத்த நிறுத்தத்தை முறியடிக்கும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தொடர் சதித் திட்டத்தின் ஓர் அம்சமாகப் புதிய விதத்தில் சில நாசகார வேலைகளைச் செய்யும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்படி தமிழ் முஸ்லிம் உறவுகளைச் சீர்குலைத்துக் கிழக்கில் இனவிரோத வன்முறைகளைத் தோற்றுவிக்கக் கூடிய திட்டம் வகுக்கப்பட்டது.

## சதித்திட்டம்

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களுக்கும் இடையில் கடந்த ஏப்ரல் 13ம்திகதியன்று கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தையடுத்துத் தமிழ் - முஸ்லிம் உறவுகள் பெருமளவில் சீரடைய ஆரம்பித்தன. இத்தகைய போக்குத் தொடர்ந்தும் விருத்தியடைந்து சென்றால் பலமான தமிழ் முஸ்லிம் ஒற்றுமை ஏற்படுதவத்குச் சாதகமான சூழல் நிலவியது.

கடந்த காலங்களில் தமிழ் முஸ்லிம் வேற்றுமை உணர்வுகளைப் பாவித்துத் தமிழ மக்களின் நியாயமான உரிமை மீட்புப் போருக்குக் குந்தகங்கள் பலவற்றை ஏற்படுத்தி வந்த சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு வளர்ந்து வரும் நல்லுறை நசுக்க ஆரம்பித்திருந்தது. இதே போக்குத் தொடர்ந்தால் எதிர்காலத்தில் தமிழ்மக்கள் தம் அரசியல் இலட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ள முஸ்லிம் மக்களும் உறுதுணையாக விளங்கப் போகின்றார்களோ ( [illegible]ம் பக்கம் பார்க்க




BUYING - SELLING

NADA G. NADARAJAH B.V.Se
*Sales Representative*
*Gold Award Winner 2000*
5200 Finch Ave. East,
Suite 206, Scarborough,
ON M1S 4Z4



Bus: (416) 293-5093
Fax: (416) 293-5237
Res: (905) 472-8703

HOMELIFE
HomeLife Metro
Realty Inc.
*Real Estate Broker*

வீடுகள் வாங்க அல்லது விற்க, அதற்கான இலவச ஆலோசனைகள் பெற்றிட, குறைவான வட்டி விகிதத்தில் அடமான ஒழுங்குகள் செய்திட இன்றே அழையுங்கள்

நடா. ஜி. நடராசா

# கிழக்கிலங்கை தமிழ் – முஸ்லிம் பிரச்சனையின் பின்னணியில் சிங்களப் பேரினவாதம்!

(5ம் பக்கத் தொடர்ச்சி) என்ற அச்ச உணர்வு தலைதூக்கியது.

## தமிழ் -முஸ்லிம் பகைமை

இத்தகைய பின்னணியில் கிழக்கிலங்கையில் எப்படியாவது தமிழ் - முஸ்லிம் பகைமையை ஏற்படுத்துவது என்ற முடிவு எடுக்கப்பட்டிருந்தது. இனவிரோமத உரசல்களைத் திட்டமிட்ட முறையில் ஏறுபடுத்தினால் இரு சமூகங்கள் மத்தியிலும் குரோதத் தீ மூண்டெழும் என்றே கணக்கிடப்பட்டிருந்தது.

ஏனெனில் மேதகு பிரபாகரன் - திரு ஹக்கீம் மத்தியில் ஏற்பட்டிருந்த இணக்கம் இன்றும் கிழக்கிலங்கை மக்கள் மத்தியில் பரவலாக வேரூன்ற ஆரம்பிக்கவில்லை.

கடந்த காலக் கசப்புணர்வுகளால் இரு சமூகங்கள் மத்தியிலும் ஏற்பட்டிருந்த பரஸ்பர பகையுணர்வு தீர இன்னும் காலம் தேவை. எனவே சில பகையுணர்வுகள் முற்றாக மாறியிருக்கவில்லை. இது ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்குக்கூட பொருத்தமாக இருந்தது.

இத தவிர பேரியல் அஷ்ரப், ஹிஸ்புல்லா போன்றவர்களின் ஆதரவாளர்களான முஸ்லிம்கள், மூதூர் நஜிப் அப்துல் மஜித் போன்ற சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களின் கோஷ்டியைச் சேர்ந்த முஸ்லிம்கள் அரசபடைகளுடன் சேர்ந்தியங்கும் ஊர்காவற்படைகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் போன்றவர்களும் சமாதானத்தை எதிர்க்கும் தமிழ்விரோதிகளாக இருந்தனர்.

## ஊர்காவற்படை

அரசாங்கத்திடம் கொழுத்த சம்பளம் வாங்கும் முஸ்லிம் ஊர்காவல்படையைப் பொறுத்தவரை நிரந்தர சமாதானம் ஏற்பட்டால் தம் தொழில்களை இழந்து வருமானத்தை இழக்கும் பிரச்சனையும் இருக்கு

மேலும் கிழக்கில் உள்ள முஸ்லிம் வர்த்தகர்கள் பலர் போர்ச்சூழலைப் பயன்படுத்தியும் சிங்களப் படையினரின் ஆதரவுடனும் கொள்ளை லாபம் அடைந்திருந்தனர். சமாதான சூழலில் தமிழ் வர்த்தகர்கள் மீண்டும் தலைதூக்குவதை விரும்பாத அவர்களில் பலரும் சமாதானம் சீர்குலைவதை விரும்பினர்.

இதேவேளை பாதிக்கப்பட்ட தமிழ்மக்களிடையே கடந்த காலங்களில் தமக்குத் தீங்கு செய்த முஸ்லிம் தீய சக்திகள் சுதந்திரமாக உலா வருவது மனவருத்தத்தை அளித்தது. ஹக்கீமுடன் செய்து கொண்ட ஒப்பநத்தைப் பிரபாகரன் நேர்மையாகக் கடைப்பிடித்துக் கொண்டு வருகின்றமையால் தம்மைச் சுரண்டிய முஸ்லிம் வர்த்தகர்கள் பலர் எதுவித பிரச்சனையும் இன்றி மேலும் லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கும் பாங்கு அவர்களுக்கு மன உலைச்சலை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

இத்தகைய உணர்வுகளின் பின்னணியில் திட்டமிடப்பட்ட முறையில் தமிழ் - முஸ்லிம் உறவுகளை சீர்குலைக்க ஆரம்பித்தால் அது மிகவிரைவில் பரவிப் பாரிய அளவில் விஸ்வரூபம் எடுக்கும் என்றும் கணக்கிடப்பட்டிருந்தது.

## தப்புக்கணக்கு

அத்துடன் பல விதங்களுலும் வீராவேசமான தலைமைத்துவத்தைக் கிழக்கு மாகாணத்திற்கு அளித்து வருகின்ற விடுதலைப்புலிகளின் பிராந்தியத் தளபதிகளான கருணா, கரிகாலன், பதுமன், ஜங்கரன், ரூபன், விசு, துரை போன்றவர்கள் இத்தகைய சம்பவங்கள் நடந்தால் யுத்தநிறுத்த விதிகளை காற்றிலே பறக்க விடுவார்கள் என்ற தப்புக் கணக்கும் போடப்பட்டிருந்தது.

ஆனால் விடுதலைப்புலிகள் போன்றவொரு அதிசிறந்த விடுதலை இயக்கத்தில் நிலவுகின்ற ஒழுக்கக் கட்டுப்பாடுகளும் தலைவர் பிரபாகரனின் ஆளுமையை மீறாமல் நடக்கின்ற தளபதிகளின் போக்கும் சிங்களப் பேரினவாதச் சதியாளர்களின் மனக்கணக்கில் இடம்பெறவில்லை.

தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையைக் குலைப்பதன் மூலம் ஏற்படக்கூடிய அரசியல் சாதகங்களுடன் யுத்தநிறுத்த விதிகளின்படி படிப்படியாக தம் பிரசன்னத்தைக் குறைக்க வேண்டியுள்ள சிங்கள இராணுவம் அவ்வாறு விலக்கிக் கொள்ளப்படுவதைத் தவிர்த்து இழுத்தடிக்கக்கூடிய சூழ்நிலை ஒன்று ஏற்பட்டிருந்தது.

## சிங்கள இராணுவம்

பாதிக்கப்பட்ட தமிழ் - முஸ்லிம் உறவுகளின் மத்தியில் இரு தரப்பினருக்கும் பொதுவான சிங்கள இராணுவமே தொடர்ந்து எல்லா இடங்களிலும் இருக்க வேண்டும் என்ற கோரிக்கை பலம் பெறும் அதே சமயம் இடைக்கால நிர்வாகசபை ஒன்று உருவாகும் போது விடுதலைப்புலிகளின் காவல்துறை தொடர்ந்தும் இயங்கக் கூடாது என்ற கோரிக்கை எழக்கூடிய வாய்ப்பினையும் இந்த வன்முறை ஏற்டுத்தியது. எனவே சிங்களப் பேரினவாதத் தரப்பு தானாக தான் நேரடியாகச் சம்பந்தப்படாமல் பின்னணியில் நின்று கொண்டு தமிழ் முஸ்லிம் கலவரங்களைத் தூண்டி விட்டுச் சமாதானச் சூழலைச் சீர்குலைக்க சதித்திட்டம் உருவாக்கியது.

## முதற் கட்டம்

இதன்படி முதற் கட்டமாக மூதூரில் ஆலையடிப் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனை முஸ்லிம் கோஷ்டி ஒன்றினால் அடித்து நொருக்கப்பட்டது.

முஸ்லிம் ஊர்காவல்படையினர், சிவில் படையில் இருந்த சில முஸ்லிம் பொலிசார், முன்னாள் எம்.பி. நஜிப் அப்துல் மஜித்தின ஆதரவாளர்கள், ஹக்கீமுக்கு விரோதமானவர்கள் கொண்ட குழுவொன்றே இந்த மோசமான காரியத்தைச் செய்தது.

இதில் உள்ள விபரீதம் கலந்த வேடிக்கை என்னவென்றால் சிங்களப் பேரினவாதச் சதியாளர்களின் பணிப்புரையின் பேரில் இக்குழுவினர் தமக்குச் சூட்டிக் கொண்ட பெயர் தான் தம்மை ஜிகாத் குழுவின் ஒசாமா அணியினர் என்று இவர்கள் அழைத்துக் கொண்டனர்.

## ஒசாமா அணி

அமெரிக்காவில் ஏற்பட்ட செப் 11 அனர்த்தங்களின் பின்னணியில் உள்ளதாகக் கருதப்படும் அல்கேய்தா அமைப்பின் தலைவர் தான் ஒசாமா பின்லாடன். ஆப்கானிஸ்தான் போருக்குப் பின்னர் தலைமறைவாகப் போயுள்ள இவர் அமெரிக்கர்களைப் பொறுத்தவரை விரும்பத்தகாத ஒரு சிம்ம சொப்பனம். அதே சமயம் பல இளைய முஸ்லிம்களுக்கு இவர் ஒரு ஆதர்சபுருஷர் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இத்தகைய ஒசாமாபின் லாடனின் பெயரைச் சுவீகரித்து ஒசாமா அணி என்ற பெயரைத் தமக்குத் தாமே சூட்டிக் கொண்டு முஸ்லிம் தீவிரவாத அணி வன்முறையில் ஈடுபட்டதை சிங்களச் சதியாளர்கள் ஊக்குவித்ததில் ஒரு உட்காரணம் இருந்தது.

இத்தகைய பெயரைப் பாவிப்பது முஸ்லிம்களுக்குக் கிளர்ச்சியை ஊட்டும். தமிழர்களுக்கு திகில் உணர்வை தரக்கூடும். ஆனால் சிங்களச் சதியாளர்களின் மிகப்பெரிய நோக்கம் இத்தகைய பெயர் கொண்ட முஸ்லிம் குழுவின் நடவடிக்கை மூலம் உலக வல்லரசான அமெரிக்காவை இலங்கைத் தீவுக்குள் வரவழைப்பது தான்.

இவ்வாறான ஒர காரணத்தை முன்வைத்து அமெரிக்கா இலங்கைத்தீவுக்குள் குறிப்பாக வடகிழக்கு மாகாணப்பகுதிக்குள் நுழையுமானால் அதன் நீண்டகால பக்கவிளைவு விடுதலைப்புலிகள் ஒடுக்கப்படுவது தான் இந்தச் சிங்களப் பேரினவாதிகளின் பகற்கனவு.

## அமெரிக்க ஊடுருவல்

இத்தகைய காரணத்துக்காக அமெரிக்கா உள்நுழையுமா என்பது கேள்விக்குறி தான். அத்துடன் அவ்வாறு வருவது எடுத்த எடுப்பிலேயே விடுதலைப்புலிகளை ஒடுக்கத்தான் என்பதும் சந்தேகத்திற்குரியதே. இது தவிர இத்தகைய போக்க பிராந்திய வல்லரசான இந்தியா மீது எத்தகைய விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்பது நன்கு ஆராயப்பட வேண்டிய விடயமே.

ஆனால் இத்தகைய ஆழமான யோசனைகளுக்கு இடம் கொடுக்காமல் ஒசாமா என்ற பெயரை முஸ்லிம் குழுவினர் சூட்டிக் கொள்ளச் செய்தது சதி நடவடிக்கையின் பின்னணியில் செயற்பட்ட சிங்கள உளவுத் துறையினருக்கு இருக்கவில்லை. அதை விடப் பரிதாபம் என்னவென்றால் எடுத்த எடுப்பில் ஒசாமா பெயரைச் சூட்டிக் கொண்ட முஸ்லிம் கோஷ்டிக்கும் இந்தப் பெயரின் பின்னால் இருந்த சதிநோக்கு புரியவில்லை என்பதாகும்.

ஆயினும் ஒசாமா என்ற பெயரைப் பாவித்து ஒரு வரையறுக்கப்பட்ட வெற்றியை சதியாளர்களுக்குச் சம்பாதித்துக் கொடுத்துள்ளது என்பதில் உண்மை இல்லாமல் இல்லை.

சென்றவார ஈழநாடு பத்திரிகையில் "ஒசாமா என்ற பெயரில் வன்முறைக்குழு பற்றி கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் விசேட அக்கறைகாட்டியது பற்றிக் குறிப்பிட்டிருந்தது. இது பற்றிய ஒரு மேலதிகமான சுவையான தகவல் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக உள்ளது.

## அமெரிக்கத்தூதுவர் இல்லம்

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரின் உத்தியோகபூர்வ இல்லம் கொழும்பு 7 பகுதியில் உள்ள ஹோட்டன்பிளேசில் உள்ள ஜெர்பற்சன் ஹவுஸ் இல்லமாகும். தற்போதைய அமெரிக்கத் தூதர் தலைமையில் இந்த இல்லத்தில் விருந்துபசாரம் ஒன்று நடத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் தான் மூதூர் சம்பவம் பற்றிய முதல்நாள் தகவல் தூதர் ஆர்ஸிலி வில்ஸ்சிற்கு கிட்டியது.

மூன்று ஆண்டுகளாக அமெரிக்கத் தூதரின் பாதுகாப்பு அதிகாரியாக இருந்த லெப. கேணல் பிராங்க் றின்டோன் இடமாற்றம் பெற்றுச் செல்ல அவருக்குப் பதிலாக லெப்.கேணல் றிச்சர்ட் கிர்வன் என்பவர் புதிய பாதுகாப்பு அதிகாரியாக ஜுலை 1ம்திகதி முதல் கடமையேற்றுள்ளார்.

இதில் பழையவருக்கு பிரிவு உபசாரமும் புதியவருக்கு வரவேற்புபசாரமும் என்ற ரீதியில் வைபவம் நடந்து கொண்டிருக்கையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ தரைப்படைத் தளபதி லயனல் பலகல்ல, கடற்படைத்தளபதி தயா சந்தகிரி ஆகியோர் இந்த விருந்தில் கலந்து கொண்டிருந்தனர்.

அச்சமயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிழக்கில் வெடித்த கலவரம் பற்றி தகவல் அறிந்து அவசரஅவசரமாக (7ம் பக்கம்)



# மூதூர் வாழைச்சேனை வன்முறையில் 38 முஸ்லிம் 79 தமிழ் வர்த்தக நிலையங்கள் தீ வைப்பு!

(6ஆம் பக்கத் தொடர்ச்சி) உயர் மட்டப் பாதுகாப்பு மகாநாடு ஒன்றை தன் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகையில் கூட்டினார்.

இதற்கு அவசர அவசரமாக பெர்னாண்டோ. பலகல்ல, சந்தகிரி ஆகியோர் வரவழைக்கப்பட்டனர். இதையடுத்துக் காரணம் கூறி விடை பெற்ற இம்மூவரும் அமெரிக்க தூதருக்கு ஓசாமா அணி பற்றிக் கூறினர். உடனடியாகப் பரபரப்பாகிய ஆர்மி வில்ஸ் விபரங்களைக்கேட்டறிந்தார். அதன்பின்னர் ஒவ்வொரு நாளும் பிரதமர். பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு கிழக்கு நிலைமைகள் பற்றியும் ஓசாமா அணி பற்றியும் விசாரித்துத் தகவல் அறிந்து வருகிறார் அமெரிக்கதூதுவர்.

## அலுவலகம் சேதம்

மூதூர் பகுதியில் கலவரத்தை மூட்ட முதலில் விடுதலைப்புலிகளின் அரசியல் பணிமனை சேதப்படுத்தப்பட்டுத் தளபாடங்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

இந்த இழிசெயல் நடந்து கொண்டிருக்கும் போது திட்டமிட்ட முறையில் அப்பகுதிக்கு மின்சாரம் தடைப்படுத்தப்பட்டது. அத்துடன் புலிகள் அலுவலகம் அமைந்திருந்த ஆளையடிக்கு மிக அருகாமையிலேயே பொலிஸ் நிலையம் உள்ளது. அத்துடன் இராணுவச்சாவடியும் அண்மையிலேயே உள்ளன.

இத்தகைய சூழலில் ஓசாமா அணிக் கோஷ்டி அதிகார வர்க்கத்தின் பங்களிப்பின்றி இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருக்க முடியாது என்பது தெளிவாகின்றது. சம்பவத்தைப் பற்றிப் புலிகள் முறைப்பாடு தெரிவித்து அதிகாரத்தரப்பிடம் விளக்கம் கோரிய போது மழுப்பலான பதில்களே வந்தன.

அதே போல் உள்ளூர் முஸ்லிம் அரசியல்வாதிகளின் உதவியை நாடிய போது அவர்களும் ஒத்துழைக்க மறுத்துச் சாக்குப் போக்குச் சொன்னார்கள். ஒரு குறிப்பிட்ட கோஸ்டியே வன்முறையைச் செய்த போதிலும் கைது செய்ய எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை.

## கண்டன ஹர்த்தால்

இத்தகைய போக்கினை அதிகார வர்க்கமும் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் கடைப்பிடித்த போதிலும் விடுதலைப்புலிகள் பொறுமை காத்தனர். நிதானம் தவறவில்லை. எதிரிகள் தரப்பு எதிர்பார்த்தது போல் வன்முறை எதிலும் இறங்காமல் சாத்வீகமான முறையில் தம் எதிர்ப்பினை வெளிக்காட்ட முனைந்தனர்.

தீவுப்பகுதியில் மூத்த புலிகள் உறுப்பினரான செம்மணன் மீது ஈ.பி.டி.பி.யும் கடற்படையும் இணைந்து நடத்திய மோசமான தாக்குதலைக் கண்டித்து வடகிழக்கு எங்கும் கண்டன ஹர்த்தால் ஒன்று ஏற்பாடாகியிருந்தது. மேற்படி ஹர்த்தாலின் காரணங்களுடன் மூதூர் அலுவலகத் தாக்குதல் சம்பவத்தையும் விடுதலைப்புலிகள் சாதுரியமாக இணைத்துக் கொண்டனர்.

இதனால் தமது அலுவலகம் மீது நடைபெற்ற கோழைத்தனமான தாக்குதலுக்கு எதிரிகள் தரப்பு எதிர்பார்த்தது போல் வன்முறையால் பதில் சொல்லாமல் சாத்வீகமான முறையில் மக்கள் சக்தியைத் திரட்டிக் கண்டன நடவடிக்கையை மேற்கொண்டனர் புலிகள்.

மேற்படி கண்டன ஹர்த்தால் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. ஹர்த்தாலின் நியாயத்தை உணர்ந்த கிழக்கின் பல முஸ்லிம் வர்த்தகர்களும் தம் நிலையங்களைக் கடையடைப்புச் செய்து ஹர்த்தாலின் வெற்றிக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கினர்.

## சிலுவை எரிப்பு

தமது சதித்திட்டத்தின் முதல் கட்டம் எதிர்பார்த்த பலனைக் கொடுக்காததால் ஆத்திரமடைந்த ஓசாமா கோஷ்டி தம் சிங்கள எஜமானர்களின் துணையுடன் அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்கியது.

மூதூர் பாலையூற்று பகுதியில் உள்ள சிறிய குன்றின் மேல் தமிழ் கிறிஸ்தவர்கள் சில மாதங்களுக்கு முன் பெரிய வெள்ளிக் கிழமையை முன்னிட்டுச் சிலுவை ஒன்றை நிறுவியிருந்தனர்.

பெரிய வெள்ளிக்கிழமை கழிந்த பின்னர் மேற்படி மலையை "இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட கொட்கொதா மலையாகப் பாவித்து தொடர்ந்து வழிபாடுகள் நடத்தினர் தமிழ் கிறிஸ்தவர்கள்.

கிளிவெட்டிப் பாதையில் உள்ள இம்மலையில் நடந்த வழிபாடுகள் கடந்த பல வருடங்களாக ஏனைய இந்துக்களையோ முஸ்லிம்களையோ பாதிக்கவில்லை. அத்துடன் இங்கு வழிபாடு செய்ய தமிழ் கிறிஸ்தவர்களுடன் பருவகால மீனவர்களான சிங்களக் கத்தோலிக்கர்களும் வருவது வழக்கமாக இருந்தது.

வேண்டுமென்றே பிரச்சனையை ஏற்படுத்தும் நோக்குடன் ஓசாமா கோஷ்டி இரவோடிரவாக 64ம் கட்டையடியில் உள்ள இந்தச் சிலுவையை உடைத்து எரித்தனர்.

## பதில் ஹர்த்தால்

இவ்வாறு சிலுவை எரியூட்டப்பட்டு பதட்ட நிலைமை ஏற்பட்ட அதே நேரம் தமிழர் தரப்பு நடத்திய ஹர்த்தாலுக்குப் பதில் ஹர்த்தால் ஒன்று முஸ்லிம் தரப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

மிக அவசரமாக எந்தவித நியாயமான காரணமின்றி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முஸ்லிம் ஹர்த்தால் போதிய அளவு ஆயத்தமோ முன் ஏற்பாடோ இல்லாததால் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை.

பரவலாகக் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பலர் கடையடைப்புச் செய்த போதிலும் பலர் சிறிதளவு நேரத்தின் பின் வியாபாரத்தைத் தொடர்ந்ததால் ஹர்த்தால் பிசுபிசுத்துப் போனது. அத்துடன் தமிழ் வர்த்தகர்களும் பெருமளவில் இந்த அர்த்தமற்ற ஹர்த்தாலுக்கு ஒத்துழைக்கவில்லை.

எவ்வித நியாயமுமின்றி இந்த ஹர்த்தால் நடைபெற்ற போதிலும் சிங்கள ஊடகவியலாளர்களைக் கொண்ட ஊடகங்கள் பலவும் வேண்டுமென்றே நிலைமையைத் திரித்து விடுதலைப்புலிகள் தம்மிடம் கப்பம் வாங்குவதை எதிர்த்து முஸ்லிம் மக்கள் கிழக்கில் ஹர்த்தால் நடத்தினர் என்று அபாண்டமாகப் புலிகள் மீது குற்றம் சுமத்தி பொய்ச்செய்திகளை இட்டுக்கட்டியுள்ளன.

பிரபாகரன் -ஹக்கீம் ஒப்பந்தத்திற்குப் பின்னர் முஸ்லிம் மக்களிடம் எவ்வித நன்கொடையும் புலிகளால் வசூலிக்கப்படாமல் இருக்க இத்தகைய விதத்தில் அபாண்டமான பொய்க் குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டு ஊடகச் செய்தியாவது விடுதலைப்புலிகளைச் சீண்டி வன்முறையைத் தூண்டும் கபட நோக்கத்துடன் மேற் கொள்ளப்பட்ட ஒன்றாகவே கொள்ள வேண்டியுள்ளது.

ஆனால் தலைமைப்பீடத்தின் வழிநடத்துதலில் கீழ் கட்டுப்பாடான பொறுமை காத்த விடுதலைப்புலிகள் பதில் வன்முறையில் ஈடுபடவில்லை. நிலைமையை விளக்கி அறிக்கை ஒன்றை மாத்திரம் வெளியிட்டனர்.

## தேவாலயம் சேதம்

இதேவேளை சுலுவை எரிக்கப்பட்டதையிட்டு வேதனை அடைந்த தமிழ்க்கிறிஸ்தவர்கள் இதையொட்டிய தம் மனவருத்தத்தை வெளிப்படுத்த விசேட வியாகூல ஆராதனை ஒன்றை நடத்தினர். தேவாலய முன்னறில் இருந்து ஆரம்பித்து மௌன ஊர்வலமாக சிலுவை இருந்த மலையடிவாரத்துக்கு வந்து இந்த ஆராதனை நடைபெற்றது.

ஆராதனை நடக்கும் போது அங்கே வந்த ஓசாமா கோஷ்டி வழிபாடு செய்த கிறிஸ்தவர்களைத் தாக்கி ஊர்வலத்தைக் கலைத்தது. பதட்டமான சூழலில் நிராயுதபாணிகளான தமிழ்கிறிஸ்தவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

ஆனாலும் ஒரு குறிப்பிட்ட சில தமிழ் கிறிஸ்தவ இளைஞர்கள் அணிதிரண்டு கை. கால் கொண்ட பதில் தாக்குதலில் ஈடுபட்ட போது ஓசாமா அணி சிதறியோடியது. பின் தமிழ்கிறிஸ்தவர்கள் தேவாலயம் திரும்பி ஆராதனை மேற்கொண்ட போது பயங்கர ஆயுதங்களுடன் வாகனங்களில் வந்த ஓசாமா கோஷ்டி சுட ஆரம்பித்தது. இதில் பலர் காயமடைந்தனர்.

இதனால் தேவாலயத்தில் இருந்தவர்கள் பயந்து ஓடினார்கள். இதேவேளை ஓசாமா கோஷ்டி இராணுவம் பாவிக்கும் எறிகணை ஒன்றையும் தேவாலயம் மீது எறிந்தனர். இதனால் தேவாலயம் சேதமடைந்தது. இதன்பின் வெறிஞ்சோடிப் போயிருந்த தேவாலயத்திற்குள் நுழைந்த ஓசாமா கோஷ்டி அங்கிருந்த தளபாடங்களை அடைத்துத் தள்ளியது. பின்னர் தேவாலயத்தை நெருப்புக்கு இரையாக்க முற்பட்டது. இச்சமயத்தில் புலிகள் பதிலடி கொடுக்க வர இருக்கின்றார்கள் என்ற வதந்தி பரவவே பயப்பீதியில் வாலைச் சுருட்டிக் கொண்டு ஓசாமா கோஷ்டி தேவாலயத்தை விட்டு ஓடித்தப்பியது.

இதன்பின் ஓடோடி வந்த தமிழ்கிறிஸ்தவர்கள் தீயை அணைத்து தேவாலயம் முற்றாகச் சாம்பலாவதைத் தடுத்தனர்.

## பள்ளிவாசல் எரிப்பு

மேற்படி சம்பவத்தையடுத்து ஆத்திரமடைந்த தமிழ்கிறிஸ்தவ இளைஞர்கள் அணிதிரண்டு அப்பகுதியில் உள்ள பள்ளிவாசலை நோக்கிச் சென்றனர். தமது சிலுவை. தேவாலயம் மீது நடந்த தாக்குதலுக்கு நியாயம் கேட்கச் சென்ற இளைஞர்களுக்கு பள்ளிவாசலில் உள்ள முஸ்லிம் பெரியாக்கள் நல்ல பதில் சொல்லவில்லை.

மாறாக கோபமூட்டும் வார்த்தைகளை மிரட்டும் பாணியில் தெரிவித்தனர். இதனால் பலத்த வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதையடுத்து முஸ்லிம் இளைஞர்களுடன் கைகலப்பு ஏற்பட்டது. அப்போது முஸ்லிம் தரப்பினர் துப்பாக்கிகளால் தமிழர்களைச் சுட்டனர்.

ஆனால் வெகுண்டெழுந்த தமிழ்இளைஞர்கள் ஓடிப்போய் துணிச்சலுடன் துப்பாக்கி வைத்திருந்த முஸ்லிம் இளைஞர் கோஷ்டியுடன் மோதி துப்பாக்கிகளைப் பறித்தெடுத்தனர். வானத்தை நோக்கிச் சுட்டனர். உடனே முஸ்லிம்கள் இடத்தை விட்டு பறந்தோடினர். ஆத்திரமடைந்த தமிழர்கள் பள்ளிவாசலுக்கு தீ வைத்து விட்டு திரும்பினர்.

## பரவலான மோதல்கள்

இவ்வாறு தேவாலயமும் பள்ளிவாவசலும் தீக்கிரையாக்கப்பட்டதையடுத்துப் பரவலாக மோதல்கள் மூதூர் பகுதியெங்கும் வெடித்தன.

முஸ்லிம் கோஷ்டிகள் எல்லை ஓதுக்குப்புறமாக இருந்த தமிழ்வீடுகள் கடைகளை தாக்கியழிக்க முற்பட்டனர். பலரைக் கடத்திச் சென்றனர். அத்துடன் வீரகேசரி பத்திரிகையின் மூதூர் நிருபர் சறசிவானந்தன் இல்லத்தைத் தாக்கித் தீக்கிரையாக்கினர். அருகில் இருந்த இளைஞர் நற்பணி மன்றக் கட்டிடத்தையும் அழித்தனர். வேறு இரண்டு ஆலயங்களும் சேதப்படுத்தப்பட்டன. தமிழருக்குச் சொந்தமான ஆறு கடைகளும் 45 வீடுகள் சேதப்படுத்தப்பட்டன. ஆலிஞ்சசேனையில் உள்ள தமிழ்க் குடிசைகள் எல்லாம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. அங்கிருந்த பெண்கள். பிள்ளைகள் தாக்கப்பட்டனர். இது தவிர தமிழ் மக்களுக்குச் ([illegible]ஆம் பக்கம் பார்க்க)

MARCHE
THURGA
444 Jean Talon Ave West
Montreal, Quebec
(514) 276-9262

இலங்கை, இந்தியா, ஆபிரிக்கா, கரிபியன் மற்றும் கனடிய நாட்டு உணவுப் பொருட்களுக்கும் அதி துரித பணமாற்றுச் சேவைக்கும் வாரத்தில் 7 நாட்களும் சேவை ஆற்றும் ஸ்தாபனம்.
மார்ஷே துர்க்கா
இலவச விநியோகமும் செய்து தரப்படும்.

உங்கள் சகல வைபவங்களுக்கும் சிற்றுண்டி வகைகளையும் உணவு வகைகளையும் பதிவு செய்து பெற்றிட எம்மை அழையுங்கள்
மொமோய் வெதுப்பகம்
BOULANGERIE BAKERY
MOMOI
இலங்கை முறையில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட
• பாண்
• பணிஸ்
• ரொட்டி

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
6953 Victoria Ave., Montreal, QUE
(514) 736-1925

# கிழக்கிலங்கை தமிழ் – முஸ்லிம் பிரச்சனையின் பின்னணியில் சிங்களப் பேரினவாதம்

# 38 முஸ்லிம் 79 தமிழ் வர்த்தக நிலையங்கள் தீ வைப்பு!47 முஸ்லிம்கள் 138 தமிழர்கள் காயம்! 10 தமிழ் பெண்கள் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவு!

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இது தவிர தமிழ் மக்களுக்குச் சொந்தமான வயல்கள், தோட்டங்களும் எண்ணெய் ஊற்றப்பட்டு நெருப்பு வைக்கப்பட்டன. பயங்கரமான நவீன ஆயுதங்களுடன் பரவல–ாகச் சுற்றித்திரிந்த முஸ்லிம் கோஸ்டிக்கு தலைமை ஒசாமா என்றும் ஜிகாத் என்றும் ஹிஸ்புல்லா என்றும் கூறிக் கொண்டு இந்தப் படுபாதகச் செயலில் ஈடுபட்டனர்.

## தமிழர் பதிலடி

இவ்வாறு முஸ்லிம் குழுக்களின் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் ஆலயங்கள், தேவாலயங்கள், பாடசாலைகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட தமி குடும்பங்களின் பாதுகாப்பை உறுதி செய்த தமிழ் இளைஞர்கள் பதில் தாக்குதல்களில் ஈடுபடத் தொடங்கினர்.

பாரம்பரியமான தமிழ்ப்பகுதிகளில் அத்துமீறிக் குடியேற்றப்பட்ட முஸ்லிம் பகுதிகள் மீது தமிழ்இளைஞர்கள் பதில் தாக்குதல் நடத்த முற்பட்டனர். இதனால் ஆலிம்நகர், ஜபல்நகர், ஹரிய்யா நகர் ஆகிய குடியிருப்புத் திட்டங்கள் மற்றும் பெரியபாலம் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் அச்சத்தால் தம் இடங்களை விட்டு வெளியேறி மூதூர் நகர்பகுதியில் தஞ்சம் தேடினர்.

தமிழர் மீது முஸ்லிம்கள் தாக்குதல்கள் நடத்திய போது மௌனம் காத்த பொலிசாரும் இராணுவத்தினரும் தமிழ்இளைஞர்கள் பதில் தாக்குதலில் ஈடுபடத் தொடங்கியதும் படிப்படியாக நடவடிக்கைகளைத் தொடங்கினர்.

## சாரதா இல்லம்

தமிழ்இளைஞர்களிடம் இருந்து முஸ்லிம் வன்முறையாளர்களைக் காப்பாற்றவே பொலிசாரும் இராணுவத்தினரும் நடவடிக்கை எடுக்க முற்பட்ட போதிலும் பாரதூரமான அசம்பாவிதம் ஒன்றைத் தடுக்க அவர்கள் பங்களிப்பு பெரிதும் உதவி செய்தது.

இராமகிருஷ்ணமிசனால் நடத்தப்படும் சாரதா இல்லம் அமைந்துள்ள இடத்தை நோக்கிச் சென்ற முஸ்லிம் கோஷ்டி ஒன்று அங்கிருந்த பெண்கள் மீது வலோத்காரமான பாலியல் உறவு கொள்ள எத்தணித்தது.

அப்போது அங்கு வந்து வானத்தை நோக்கிச் சுட்ட சீருடையினர் இந்தக் காடையர் கூட்டத்தைத் துரத்தினர். அத்துடன் நிரந்தரக் காவலுக்கு சில பொலிசார் சாரதா இல்லத்தில் நிறுத்தப்பட்டனர். இவ்வாறு தம் தகாத நோக்கம் பூர்த்தி செய்யப்பட முடியாத நிலையில் துரத்தியடிக்கப்பட்ட முஸ்லிம் கோஷ்டி திரும்பிய போது தன் ஆத்திரத்தை முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யான "திடீர்" தௌவீக் என்றழைக்கப்படும் தௌவீங்கின் மூதூர் இல்லம் மீது காண்பித்தது.

வீட்டைத் தாக்கிச் சேதப்படுத்தியது. அச்சமயம் எம்.பி. குடும்பமும் அங்கு இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பரவிய மோதல்கள் படிப்படியாக மூதூரில் தணிய ஆரம்பித்தது.

## ரூபன் அறிக்கை

இவ்வாறு மூதூர் பகுதியில் மோதல்கள் படிபடியாகக் குறைந்தமைக்குப் பிரதான காரணம் விடுதலைப்புலிகள் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ரூபன் விடுத்த காட்டமான அறிக்கையாகும். நடைபெற்ற வன்முறையின் பின்னணியைத் தெளிவாக விளக்கிய ரூபன் விடுதலைப்புலிகளைச் சீண்டிய போதிலும் தாம் பொறுமை காத்ததை எடுத்துக்கூறி பொறுமைக்கும் ஓர் எல்லை இருப்பதைக் கூறாமல் கூறினார். இதன் உள்பொருள் சென்றடைய வேண்டியவர்களைச் சென்றடைந்ததும் ஒசாமா கோஸ்டியினர் தம்மை விடுதலைப்புலிகள் குறிவைத்து விடுவார்களோ என்று திகில் கொண்டனர்.

விடுதலைப்புலிகளை சீண்டி யுத்தநிறுத்தத்தை மீற வைத்துச் சமாதான சூழலைச் சிதறடிப்பதே ஒசாமா குழுவின் நோக்கமாக இருந்த போதிலும் புலிகள் தம் பொறுமையைக் கைவிட்டு நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்ற பெரும் அச்ச உணர்வே ஒசாமா கோஷ்டியைப் பயப்படுத்தக்கூடியதாக இருந்தது.

அத்துடன் நிராயுதபாணிகளான விடுதலைப் புலிகள் மூதூர் பகுதியில் தம் பிரசன்னத்தை அதிகரித்துப் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டதும் கஷ்டப்பட்ட தமிழ் சமூகத்திற்கு சமூக சேவையாற்ற முற்பட்டதும் தமிழ் - முஸ்லிம் குடியிப்புக்களின் எல்லைப்பகுதியில் தம் நடமாட்டத்தை அதிகரித்ததும் பொலிஸ் இராணுவத்தரப்புடன் அடிக்கடி தொடர்பு கொண்டு நிலைமைகள் பற்றி விசாரித்ததும் விடுதலைப் புலிகளை பிம்பத்தை விஸ்வரூபமெடுக்கச் செய்து விட்டது. இந்நிலையில் ஒசாமா குழுவினர் தாமாகவே வன்முறைகளைக் கைவிடத் தலைப்பட்டனர்.

## அமைச்சர்கள் வருகை

இக்கட்டத்தில் எரிபொருள் மின்சக்தி அமைச்சர் கரு ஜெயசூரியா மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஹக்கீம் ஆகியோரும் மூதூர் வந்தனர். மேலும் மட்டக்களப்பு திருமலை மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் அதிவண கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மற்றும் திருமலை பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், புதிய கூட்டணியின் தேசியப் பட்டியல் எம்.பி துரைரத்தினசிங்கம், மற்றும் முஸ்லிம் எம்.பி.க்களான மறூப், ஆகியோரும் கலவரம் நடந்த இடத்துக்கு வந்து நிலைமைகளைப் பார்வையிட்டு மக்களை அமைதிப்படுத்தினர். மேலும் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரிகளும் தம் கடமைகளை மீண்டும் செய்யத் தொடங்கிப் பிரச்சனைகளுக்குப் பெருமளவு பொறுப்பான முஸ்லிம் வன்முறைக் கோஷ்டிகளைக் கட்டுப்பாட்டில் வைக்க முற்பட்டனர்.

## சேத விபரங்கள்

பல நாட்களாகத் தொடர்ந்த வனமுறையில் ஒப்பீட்டளவில் சேத விபரங்கள் குறைவாகவே உள்ளன. அத்துடன் முழுமையான விபரங்கள் இன்னும் சரியாக கிடைக்கப் பெறவில்லை.

ஆனால் மூதூர் பகுதியில் ஒரு முஸ்லிம் கொல்லப்பட்டுள்ளார். 9 முஸ்லிம் காயமடைந்தனர். 7 தமிழர்கள் கொல்லப்பட்டு 43 பேர காயமடைந்தனர். 6 பெரிய கடைகள், 4 சிறிய கடைகளும் 40 க்கு அதிகமான வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் தமிழர்களுக்குச் சொந்தமானவை.

மேலும் பொதுக்கட்டிடங்கள் மூன்று, பள்ளிவாசல் ஒன்று, தேவாலயம் மூன்று, முஸ்லிம் வீடுகள் 20, ஆகியன தேசமடைந்துள்ளன. தமிழருக்குச் சொந்தமான 700 ஏக்கர் விவசாய நிலமும் சேதப்படுத்தப்பட்டுள்ளது. காயப்பட்டவர்கள் திருமலை, மூதூர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர்.

## மட்டக்களப்பு மாவட்டம்

இவ்வாறு திருமலை மாவட்டத்தின் தென் பகுதியான மூதூரில் கலவரம்தணிந்த அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபகுதியில் உள்ள வாழைச்சேனை ஓட்டமாவடி பகுதியில் வன்முறை வெடித்தது.

மூதூர் பகுதியில் நடந்தது போலவே இங்கேயும் தம்மை ஒசாமா குழுவினர் என்று வர்ணித்துக் கொண்ட முஸ்லிம் வன்முறைக் கோஷ்டி ஒன்றே பிரச்சனையைத் தோற்றுவித்தது. ஆனால் இந்தக் கோஷ்டிக்குப் பக்கபலமாக இப்பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் பொலிசார் சிலர் செயற்பட்டனர்.

## பொலிஸ் உடந்தை

அப்பகுதியின் உதவிப் பொலிஸ் அதிபரான ஜமால்தீன் என்பவர் ஊக்குவிப்புடன் தான் இந்தத் தமிழர் விரோத வன்முறைகள் வெடித்தன. இதற்கு வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த புலனாய்வு அதிகாரிகளான மஸ்தன், பாயிஸ், ரமீஸ், உவயிஸ் ஆகியோர் தீவிர ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

குறிப்பாக பொலிஸ்காரரான பாயிஸ் என்பவன் சில தமிழர்கள் மீது நேரடியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தமிழ்ப் பொதுமக்கள் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எம்.பி.க்களிடம் புகார் தெரிவித்துள்ளனர். மேலும் வாழைச்சேனை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியான பியசேன என்ற சிங்களவர் தமிழருக்கு எதிரா[illegible] வன்முறையை ஊக்குவித்ததுடன் முஸ்லிம் வன்முறையாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பதைத் தடுத்தும் உள்ளார்.

குறிப்பாகத் தமது உடமைகளைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்ல தமிழ் வர்த்தகர்கள் முனைந்தபோது அதனைத் தடுத்துள்ளனர் ஜமால்தீனும் பியசேனவும்.

## ஓட்டமாவடியில்

வாழைச்சேனையை அண்டிய முஸ்லிம் மக்களைப் பெருவாரியாகக் கொண்ட ஓட்டமாவடிப் பகுதியிலேயே வன்முறை ஆரம்பித்தது. மட்டக்களப்ப திருகோணமலை வீதிவழியாக போக்குவரத்துச் செய்யும் தமிழருக்குச் சொந்தமான தனியார் பஸ் வண்டிகள் மூன்றும், மினிவான்கள் இரண்டும் அரசுக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் தம்மை ஒசாமா அணி என்று கூறிக் கொண்ட முஸ்லிம் கும்பலினால் நிறுத்தப்பட்டு நெருப்ப மூட்டப்பட்டது. அதிலிருந்த தமிழ்ஊழியர்களும் பயணிகளும் தாக்கப்பட்டனர்.

இதன்பின்னர் அந்த வன்முறைக் கோஷ்டி ஹர்த்தால் என்று கூறிக்கொண்டு அனைவரையும் கடையடைப்புச்செய்யும்படி கூக்குரலிட்டுக் கொண்டு வாழைச்சேனை நோக்கு நகர்ந்தது. இடையில் அகப்பட்ட ஓரிரு தமிழர்களை படுமோசமாகத் தாக்கிப் படுகொலை செய்தது.

## வாழைச்சேனை நகர்

ஒப்பீட்டளவில் நகர் பகுதியான வாழைச்சேனையில் சுமார் 75 வீதமான மக்கள் தமிழர்கள். 25 வீதமானவர்கள் முஸ்லிம்கள். ஆனால் சந்தைப்பகுதி மற்றும் வர்த்தக நிலையங்களைப் பொறுத்தவரை சுமார் மூன்றில் இரண்டு பங்கு தமிழர்களுக்கும் மூன்றில் ஒரு பங்கு முஸ்லிம்களுக்கும் சொந்தம்.

ஓட்டமாவடியில் இருந்து பெருந்திரளாக வந்த முஸ்லிம் கோஷ்டி, வாழைச்சேனை நகர் பகுதியில் இருந்த தமிழ் வர்த்தக நிலையங்களையும் வீடுகளையும் தாக்கத் தொடங்கியது. அத்துடன் தமிழர்களுக்குச் சொந்தமான வான், பஸ், கார், கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட வாகனங்களையும் உடைத்து நொருக்கித் தீவைக்கத் தொடங்கியது.

இத்தனைக்கும் அருகில் இருந்த பொலிசார் சும்மா பார்த்துக் கொண்டிருந்தனர். தமிழருக்குச் சொந்தமான சுமார் 25 கடைகள் கொள்ளையடிக்கப்பட்டு சேதமாக்கப்பட்டன. தமிழர்களின் 15 வீடுகளும் எரிக்கப்பட்டன. அத்துடன் பிரதேச சபை அலுவலகம் தீ வைக்கப்பட்டது. இச்செயற்பாடுகளுக்கு முஸ்லிம் பொலிஸ் அதிகாரிகள் பக்கபலமாகச் செயற்பட்டனர்.

## ஊரடங்குச்சட்டம்

இதன்பின் அப்பகுதியில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் ஊரடங்கு இருந்த வேளையில் வாழைச்சேனையின் சந்தைப்பகுதியில் இருந்த கடைத்தொகுதிகள் திட்டமிட்டமுறையில் கொளுத்தப்பட்டன.

இதில் தமிழருக்குச் சொந்தமான கடைகளே அதிகம். ஆனால் அருகருகே இருந்த முஸ்லிம் கடைகளும் நெருப்புக்கு இரையாகின. அத்துடன் மக்களால் கைவிடபட்டிருந்த வாகனங்கள், சைக்கிள்கள் நெருப்பு வைக்கப்பட்டன. இவ்வாறு வாழைச் சேனைப்பகுதியில் ஊரடங்கு வேளையில் நடைபெற்ற தமிழர் விரோத வன்செயல்களையடுத்து அப்பகுதித் தமிழ்மக்கள் கொதித்தெழுந்தனர்.

## புலிகள் அமைதி

கொதித்தெழுந்த தமிழ்மக்கள் கிரானில் உள்ள விடுதலைப்புலி அலுவலகத்திற்குச் சென்று தம் உள்ளக் குமுறலைக் கொட்டித் தீர்த்தனர்.

மட்டக்களப்புத் தளபதி கருணாவின் சொந்த ஊர் கிரான் ஆகும். கருணாவைச் சூழ்ந்து கொண்ட தமிழ்மக்கள் "நீங்கள் யுத்தநிறுத்தம் செய்து முஸ்லிம் காங்கிரசுடன் ஒப்பந்தம் செய்ததால் தான் முஸ்லிம் கோஷ்டி இப்படித் துள்ளாட்டம் போடுகின்றன. உங்கள் ஆயுதங்களைப் பாவியுங்கள். அல்லது எங்களுக்கு ஆயுதங்கள் தாருங்கள் என்று மன்றாட்டமாகக் கேட்டனர்.

ஆனால் தன் தலைவர் பிரபாகரனது கட்டளைக்குக் கட்டுப்பட்ட தளபதி கருணா விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை விளக்கி தம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று கூறினார். "எங்களை கோபமடைச் செய்து யுத்தநிறுத்தத்தைக் குழப்பவதே இவர்களின் நோக்கம் எனவே நாம் ஒன்றும் செய்ய முடியாது. தலைமைப்பீடத்திடம் கூறுகின்றோம் என்று பரிதாபமாகக் கையை விரித்து விட்டார் கருணா.

## தமிழ்ச்செல்வன் தொலைபேசி

இவ்வாறு மட்டக்களப்பு புலிப்படைத்தளபதிகள் வன்னியில் உள்ள தலைமைப் பீடத்துடன் தொடர்பு கொண்டு நிலைமையை எடுத்துக் கூறினர். தமக்குப் பொறுமையாக இருப்பது பெரும் பிரச்சனையாக இருப்பதாக கூறினார்கள் கிழக்குத் தளபதிகள். பொறுமையாக இருக்கும்படி தலைமைப்பீடம் கூறியது.

அதேவேளை லண்டனில் உள்ள அரசியல் ஆலோசகர் கலாநிதி பாலசிங்கம் மத்தியஸ்தம் வகிக்கும்(அடுத்த வாரம் தொடரும்)

# மூன்று பெண்களை எதிர்கொள்ளும் ரணில்

பெண்கள் வீட்டின் கண்கள் என்பது முதுமொழி. பெண்கள் நாட்டின் தூண்கள் என்பது புதுமொழி. அந்தளவிற்கு உலக அரசியலில் செல்வாக்கு செலுத்தும் பெண்கள் நாடுகளின் தலைமைத்துவங்களை அலங்கரிப்பதோடு ஒரு நாட்டின் தலைவிதியையும் தீர்மானிக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளனர்.

பெண்களால் சாம்ராயங்கள் அழிந்தது மட்டுமல்ல உருவாகியுள்ளதையும் வரலாற்று உண்மைகள் நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

நமது நாட்டிலும் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்னையைத் தீர்ப்பதில் மூன்று பெண் அரசியல் தலைவிகளை சமாதானப் படுத்த வேண்டிய நிலைமைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தள்ளப்பட்டுள்ளார். நாட்டிற்குள்ளும் நாட்டிற்கு வெளியேயும் உள்ள இந்த தலைவிகளை சமாதானப்படுத்திக் கொண்டு சமாதான காய்களை நகர்த்தவேண்டிய நிலை பிரதமருக்கு ஏற்பட்டுள்ளது.

இதே போன்றதொரு நிலைமை தான் அன்று பிரதமரின் மாமனாரான மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் ஏற்பட்டது.

ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் இந்தியப் பிரதமராக இந்திரா காந்தியை சமாதானப்படுத்திக் கொண்டு தான் இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டிய நிலையேற்பட்டது. காரணம் இந்திரா காந்தியின் நெருங்கிய நண்பியான சிறிமாவோ பண்டாரநாயக்கா இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். இதனை மிக லாவகமாக ஜே.ஆர். கையாண்டார்.

இன்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் சமாதான நடவடிக்கைகள் இடையூறில்லாது இடம் பெற மூன்று பெண்களை சமாதானப்படுத்தவேண்டியுள்ளது. உள்நாட்டில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அயல்நாட்டில் தமிழ்நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரையே சமாதானப்படுத்தவேண்டியுள்ளது.

2. இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் ஜனாதிபதியின் இணக்கப்பாட்டுடன் செயற்படுவது. இது விடயத்தில் ஜனாதிபதி பிரேரித்த குழு முறை நிராகரிக்கப்பட்டதோடு இறுதித் தீர்மானம் எடுக்கும் பலத்தையும் இல்லாது செய்தது.

3. சர்வதேச அழுத்தங்கள் மூலம் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண இணக்கமுடன் செயற்படவேண்டுமென்ற நிலைக்கு ஜனாதிபதியைத் தள்ளியது.

புலிகள் இயக்கத் தடை நீக்கம் விடயத்தில் அதன் செயற்பாடுகள் தற்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ளன. தடைநீக்கம் தொடர்பில் ஆரம்பத்தில் ஜனாதிபதி கொண்டிருந்த இறுக்கமான நிலைப்பாட்டில் தற்போது தளர்வு ஏற்பட்டுள்ளது. இதற்கு சர்வதேச அழுத்தங்களே காரணமாகும். சர்வதேச சமூகத்தின் ஊடாக சந்திரிகாவைக் கட்டுப்படுத்த ரணில் பயன்படுத்துவது அவரது ஜனாதிபதி பதவியையே ஆகும்.

ஜனாதிபதியை கட்டுப்படுத்துவதோடு தீர்வை எட்டமுடியாது. இதற்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் ஆசீர்வாதமும் தேவை என்பதை உணர்ந்து கொண்டுள்ள பிரதமர் அண்மையில் அவரையும் சந்தித்துப் பேச்சுக்களை மேற்கொண்டதோடு தனது நடவடிக்கைகளுக்கு சாதகமான பதிலையும் ஜெயலலிதாவிடமிருந்து பெற்றுக்கொண்டார். இந்திய மத்திய அரசாங்கத்துடன் மட்டுமல்ல தமிழ்நாடு மாநிலத்துடனும் உறவுகளைப் பேணவேண்டியது அவசியம் என்பது இலங்கை அரசிற்கு தெளிவானது.

இலங்கையின் இன்றைய யுத்த நிலைக்கு தமிழ்நாடும் உதவியது தெட்டத்தெளிவாகும். ஆனால் அன்று



இந்த மூன்று அரசியல் தலைவிகளும் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் மீது கொண்டிருக்கும் கோபத்தையும் வைராக்கியத்தையும் களையவேண்டும் இல்லாவிடின் சமாதானத்தை அது பதம் பார்த்துவிடும். மூன்று பெண்களுக்கும் பிரபாகரனுக்கும் இடையில் நின்று ரணில் சிக்கிக்கொண்டுள்ளார்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த புலிகள் இயக்கத்தை சாந்தப்படுத்துவதோடு நாட்டின் தலைவியையும் கட்டுப் படுத்த வேண்டிய நிலை ரணிலுக்கு ஏற்பட்டுள்ளது. இல்லாவிடின் சமாதான முன்னெடுப்புக்களுக்கு ஜனாதிபதியின் அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டு தகர்த் தெறியப்படும். இதனால் தான் தனது கட்சியை பயன்படுத்தி புலிகள் மீதான தடை பேச்சுவார்த்தைக்கு முன்னர் நீக்கப்படக்கூடாது என்ற கோஷத்தை முன்வைத்துள்ளார். அத்தோடு பேச்சுக்கு முன்னர் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுவதையும் எதிர்க்கின்றார்கள். காரணம் இடைக்கால நிர்வாகத்திற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் தேவையில்லை.

இன்னொன்று இடைக்கால நிர்வாகம் உருவானால் பிரபாகரன் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கமாட்டார். இது போன்றதொரு நிர்வாகம் இரண்டு வருடம் சுமுகமாக நடந்தேறினால் ஜனாதிபதி பதவியும் காலாவதியாகிவிடும். அதன் பின்னர் புலிகளுடன் நிரந்தரமானதொரு இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு ரணிலுக்கு எந்தத் தடையும் இருக்காது. ஏனெனில் அதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் தேவையில்லை.

ஆகவே பேச்சுவார்த்தைகளின் ஆரம்பத்திலேயே அடிப்படைப் பிரச்னைகள் தொடர்பில் பேசினால் பேச்சுவார்த்தை முறிந்துவிடும் என்பதை ஜனாதிபதி அறிவார். ஏனெனில் ஒரேயடியாக ஈழக்கோரிக்கையை கைவிட பிரபாகரன் விரும்பமாட்டார். படிப்படியாக தமது அங்கத்தவர்களை இடைக்கால நிர்வாகம் தொடர்பில் பழக்கப்படுத்திப் பின்னர் ஈழத்திற்கு மாற்றீடான தீர்வை அவர்களுக்கு வழங்கவே முயற்சிக்கின்றார். எனவே அடிப்படைப் பிரச்னைகள் தொடர்பாக எடுத்த எடுப்பிலேயே பேச்சுக்களை ஆரம்பித்தால் பிரபாகரனைப் போல் தாமும் சிக்கலில் மாட்டிக்கொள்வோம் என்பது அரசுக்குத் தெரியும். ஆகவே தான் ஆரம்பக்காரணிகள் தொடர்பாக பேச்சுக்களை நடத்துமாறு ஜனாதிபதி வலியுறுத்தி வருகின்றார்.

இது தொடர்பில் ஜனாதிபதியைக் கட்டுப்படுத்த ரணில் மூன்று வியூகங்களை வகுத்துள்ளார்.

1. ஐ.தே.முன்னணி தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடைக்கால நிர்வாகம் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்காக தமக்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளதென்பதை நிரூபிக்க முடிந்தது.

அம்மாநிலத்துடன் இலங்கைக்கு நல்லுறவு இல்லாத நிலை இதனை மேலும் ஊக்குவித்தது. இந்திய மத்திய அரசுடன் கோபித்துக் கொண்ட ஜே.ஆர். மாநில அரசுடனும் உறவுகளை வளர்த்துக் கொள்ளவில்லை. இது யுத்த நிலையை மேலும் தீவிரப்படுத்தியது. மாநில அரசுடன் நட்புறவு இருந்திருந்தால் இந்திய மத்திய அரசின் தலையீடில்லாமல் பிரச்னையைத் தீர்க்க இலங்கை அரசிற்கு வழி பிறந்திருக்கும்.

ஜே.ஆருக்கு மட்டுமல்ல இந்தியாவுடன் என்றும் நட்புறவைப் பேணும் பண்டாரநாயக்கா குடும்பத்திற்கும் தமிழ்நாடு மாநில அரசுடன் நட்புறவு இருக்கவில்லை. இதனால் தான் இந்திய மத்திய அரசு ஸ்ரீமாவுக்கு ஆதரவு வழங்குகையில் மாநில அரசு வட - கிழக்கு தமிழ் கட்சிகளுக்கு ஆதரவு வழங்கியது.

சமாதானத்தின் மூலம் அரசியலில் பிரபாகரன் பலம் பொருந்திய நிலைக்கு வந்தால் அது தனக்கு பயமுறுத்தலாக அமையுமென ஜெயலலிதா பயப்படுவது வெளிப் படையாகும். அது மட்டுமல்லாது இலங்கையில் சமாதானத் திற்கு எதிராக அவர் குரல் கொடுப்பது பயத்தின் காரண மாக மட்டுமல்ல இலங்கையின் சமாதானத்தை தமிழ்நாட்டில் அரசியல் பந்தாகப் பயன்படுத்தி அதன் மூலம் மத்திய அரசையும் காங்கிரசையும் தம்மைச் சுற்றி வலம் வரச் செய்வதற்கே ஆகும்.

ஜெயலலிதாவின் வியூகங்களை தெரிந்து கொண்ட இந்திய மத்திய அரசாங்கம் இலங்கை அரசுடன் உறவுகளை பலப்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பத்தை தமிழ்நாட்டுக்கு வழங்கியது. இதன் பெறுபெறாகவே ரணில் - ஜெயலலிதா சந்திப்பு இடம் பெற்றது.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த முனைவது பிரபாகரனைப் பலப்படுத்துவதற்கு அல்ல. இலங்கையினதும் தமிழ்நாட்டினதும் இந்தியாவினதும் ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்காகவே என்னும் விடயத்தை ஜெயலலிதாவுக்கு ரணில் விளக்கிக் கூறினார். இதற்கு ஜெயலலிதாவின் ஆதரவு கிடைத்தது. ரணிலின் வருகை பலத்தையும் கொடுத்தது ஜெயலலிதாவுக்கு. இந்திய மத்திய அரசினது மட்டுமல்ல மாநிலஅரசின் உதவியையும் இலங்கை எதிர்பார்க்கின்றது என்ற செய்தி இதன் மூலம் வெளியானது.

அடுத்து சோனியா காந்தியை சமாதானப்படுத்தவேண்டும். தனது கணவர் ராஜீவ் காந்தி கொலையில் பிரபாகரன் தண்டிக்கப்பட வேண்டுமென்ற நிலையில் உள்ள அவருக்கு சமாதானம் ஏற்பட்டு அரசியலில் பிரபாகரன் பலம் பெருகிவிட்டால் தமிழ்நாட்டுக்குள் புகுந்து செல்வாக்கு பெற்று காங்கிரஸ் ஆட்சி உருவாவதைத் தடுக்கலாம் என்ற பயம் அவர் உள்ளத்தில்.

இந்தப் பயத்தையும் குரோதத்தையும் தன்னிடம்

(17ம் பக்கம் பார்க்க)

## நமது நோக்கு

### ஜனநாயக அரசியல் எதிர்கொள்ளும் . .?

ஆயுதப் போராட்டத்துக்கு ஒரு தற்காலிக ஓய்வைக் கொடுத்துவிட்டு அரசியல் வழிமுறைகள் மூலமாக தமது இலக்குகளை அடைய முயன்ற விடுதலைப் புலிகளின் நம்பிக்கையில் மற்றொரு அடி விழுந்திருக்கின்றது. நிராயுதபாணிகளாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த விடுதலைப் புலிகளின் முக்கியஸ்த்தர்கள் இருவர் வேலணையில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களைக் கடத்திச் செல்வதற்கும் முயற்சிக்கப்பட்டது. இது நடைபெற்று இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் மூதூரில் அமைந்துள்ள புலிகளின் அரசியல் அலுவலகம் வன்முறைக் கும்பல் ஒன்றினால் அடித்து நொருக்கப் பட்டிருக்கின்றது.

இந்த இரண்டையும் வெறுமனே தனிப்பட்ட சம்பவங்களாகக் கருதி ஒதுக்கிவிட முடியாது. இதன் உள்நோக்கம் என்ன எனக் கண்டறிவது முக்கியம். இந்தத் தாக்குதலின் மூலம் உணர்த்தப்பட்டுள்ள செய்தி என்ன என்பதையும் கவனத்திற்கொள்வது அவசியம். தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகளை முன்வைத்து மேற்கொள்ளப்படும் ஜனநாயக ரீதியான அரசியல் நடவடிக்கைகள் எவ்வாறு எதிர்கொள்ளப்படும் என்பது இதன் மூலம் உணர்த்தப்பட்டிருக்கின்றது.

ஜனநாயக நீரோட்டத்தில் எதிர்கொள்ளப்பட வேண்டிய தடைக்கற்கள் எந்தளவுக்கு ஆபத்தானவை என்பதும் உணர்த்தப்பட்டிருக்கின்றது. அதேவேளையில் விடுதலைப் புலிகளை ஆத்திரமூட்டி மீண்டும் ஒரு யுத்த நிலையைத் தோற்றுவிக்கும் உள்நோக்கமும் இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்துள்ளதா என்பதும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

வேலணையில் கடத்திச் செல்லப்படவிருந்த இரு போராளிகளும் தாம் விடுதலை செய்யப்படாவிட்டால் சையனைட் உட்கொள்வதற்குத் தயாராக இருந்துள்ளார்கள். அவ்வாறான ஒரு சம்பவம் நடைபெற்றிருந்தால் நிலைமைகள் மேலும் மோசமாகியிருக்கும். 1987 ஆம் ஆண்டு கூட இது போன்ற ஒரு சம்பவம்தான் இந்திய அமைதிப்படையினருடனான மோதலுக்கு காரணமாக இருந்தது. அதேபோன்ற ஒரு சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கான முயற்சிகள் அதிகாரிகள் சிலரால் மறைமுகமான வழிகளில் மேற்கொள்ளப்படுகின்றதா என்ற கேள்வியை இச்சம்பவம் எழுப்பியுள்ளது.

யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகள் அனைத்தும் கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள்தான் இருக்கின்றது. இங்குவிடுதலைப் புலிகள் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குக் கூட கடற்படையினர் முதலில் அனுமதி வழங்கவில்லை. இது ஒரு அதி உயர் பாதுகாப்புப் பிரதேசம் என்பதுதான் அதற்குக் காரணம். இங்கு ஈ.பி.டி.பி. அமைப்பினரும் செயற்பட்டு வருவது ரகசியமானதல்ல. இந்தளவுக்கு கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள ஒரு பகுதியில் நடைபெற்றுள்ள ஒரு பாரிய தாக்குதல் சம்பவத்தை தமக்குத் தெரியாது என கடற் படையினர் இலகுவில் தட்டிக்களித்துவிட முடியாது.

இதேபகுதியில் வைத்து தமிழர் கூட்டணிப் பிரமுகர்கள் தேர்தல் காலத்தின் போதும் தாக்கப்பட்டனர். இருவர் அத்தாக்குதலில் கொல்லப்பட்டனர். அது தொடர்பான விசாரணைகள் கூட இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதில் சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் ஈ.பி.டி.பி. பிரமுகர்களில் ஒருவர் சரணடைய மற்றொருவர் தலைமறைவாகியிருக்கின்றார். இவை அனைத்தும் நடைபெற்றுள்ள ஒரு பின்னணியில் தான் தற்போதைய தாக்குதலும் இடம்பெற்றுள்ளது.

வேலணைத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்காக கடற்படை பிரதம கட்டளை அதிகாரியையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாக அனுப்பிவைத்தார். இப்பிரச்சினையின் தீவிரத் தன்மையையும், இது தொடர்பாக விசாரணை நடத்தி உரியவர்களைக் கண்டுபிடிப்பது அவசியம் என்பதை பிரதமர் உணர்ந்து கொண்டுள்ளார் என்பதையும் அவரது உடனடி நடவடிக்கை உணர்த்துகின்றது. இப்பிரச்சினை இப்போது சர்வதேச மயமாக்கப்பட்டுவிட்டதும் பிரதமரின் இந்த உடனடி நடவடிக்கைக்கு காரணமாக இருக்கலாம்.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்பட வேண்டும் என்பது ஒருபுறம் இருக்க, இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்தால் சமாதானப் பேச்சுக்கள் மேலும் தாமதமடைவது தவிர்க்க முடியாது போய்விடும் என்பதையும் ரணில் உணரவேண்டும். தமிழ் இளைஞர்கள் ஜனநாயகப் போராட்டங்களில் நம்பிக்கையிழந்து ஆயுதப் போராட்த்தை நாடிச் சென்றதற்கான காரணங்கள் தொடர்ந்து கொண்டிருந்தால் யுத்த நிறுத்தம் என்பது அர்த்தமற்றதாகிப் போய்விடும் என்பதையும் அரச தரப்பினர் புரிந்துகொள்ள வேண்டும்.

# ரொறன்ரோ நகரசபை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தினால் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ள நிறுவனங்கள்

சமூக சேவை நிறுவனங்கள்: இவ் வேலை நிறுத்த காலங்களிலும் சில அவசர சேவைகளுக்குரிய சமூகசேவை நிறுவனங்கள் மட்டும் சில குறிப்பிட்ட மணி நேரம் திறந்திருக்கும். இச் சமூக சேவை நிறுவனங்களினால் வங்கி மூலம் மாதாந்த கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்வோர் எதுவித தடங்கலும் இல்லாது பெற்றுக் கொள்ளலாம். பாதிக்கப்பட்டோர் (416) 392 - 4300 என்னும் தொலைபேசிக்கு அழைக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (2) குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள்: நகரசபையின் கட்டுப்பாட்டினுள் உள்ள குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் யாவும் மூடப்பட்டதுடன் சிவிக் சென்ரர் யாவும் மூடப்பட்டுள்ளன. இது தொடர்பான தகவல்களைப் பெற விரும்புவோர் (416) 392 - 5437 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (3) ரொறன்ரோ பொதுசுகாதார நிறுவனங்கள்: உணவுசாலைகளின் பரிசோதனைகள். குடும்ப சுகாதார மைய சேவை பிரிவுகள். சத்துணவுத் திட்ட பிரிவுகள். வீடுகளுக்கு விஜயம் செய்யும் மருத்துவ பிரிவுகள் ஆகியனவும் மூடப்பட்டுள்ளன. (4) நகர காணி. வீடு. பரிசோதனை பிரிவுகள்: வீடுகள். காணிகள். நிர்மான பிரிவின் கீழ் உள்ள பரிசோதனை பிரிவுகளும் இவ் வேலை நிறுத்தத்தினால் மூடப்பட்டுள்ளன. (5) வியாபார. வர்த்தக வாகனங்களுக்கு லைசென்ஸ் வழங்கும் அலுவலகங்கள்: ராக்ஸி சாரதி பயிற்சி பாடசாலை வாகனங்கள். வர்த்தகசேவை பிரிவு வாகனங்கள் ஆகியவற்றுக்கு வழங்கும் லைசென்ஸ் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன.

வாகனங்களின் பரிசோதனைக்காக ஏற்கனவே திகதி நிர்ணயம் செய்யப்பட்டவை தொடரப்பட்ட போதிலும் புதிய திகதி நிர்ணயங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. ராக்ஸி சாரதி பயிற்சி நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. (6) போக்குவரத்து பிரிவு அலுவலகங்கள்: வாகனத்தரிப்பு குற்றச் செயல்களில் தண்டனை ரிக்கற் கொடுப்பனவுகள் செய்யும் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன. (7) குப்பைகள். அசுத்தங்கள் அகற்றும் ஊழியர்கள்: நகரின் குப்பைகள். அசுத்தங்கள் அகற்றும் ஊழியர்களின் செற்பாடுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

(8) பூங்காக்கள். உல்லாச விளையாட்டு இடங்கள்: இவ் இடங்கள் பாவனைக்கு விடப்பட்டாலும் இப்பகுதிகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் இடங்களின் துப்பர வாக்கங்கள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன. (9) ரொறன்ரோ சென்ரல் அம்புலன்ஸ் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டு ள்ளது.

# அல்பேர்ட்டா மாகாணத்தில் நடந்த அபிவிருத்தியடைந்த 8 நாட்டு தலைவர்களின் கூட்டுச் சந்திப்பு

உலகில் அபிவிருத்தியடைந்த. கைத்தொழில் நாடுகளான அமெரிக்கா. கனடா. இங்கிலாந்து. பிரான்ஸ். ஜேர்மனி. இத்தாலி. ஜப்பான். ரஷியா ஆகிய எட்டு நாடுகளின் தலைவர்களும் கடந்தவாரம் கனடாவின் அல்பேர்ட்டா மாகாணத்தில் கல்கேரி நகரில் இருந்து மேற்குப் பக்கமாக சுமார் 100 கிலோ மீற்றருக்கு அப்பால் அழகிய மலைகள். நீரோடைகள் உள்ள சுமார் 4000 சதுர கிலோ மீற்றர் உள்ள அழகிய உல்லாசமான கிராமத்தில் கடந்த வாரம் இரு நாட்கள் தங்கியிருந்து சர்வதேச ரீதியில் தங்கள் எதிர்கால செயற்பாடுகள் பற்றித் தொடர்ச்சியான மகாநாடு நடத்தினர். இந்த நாடுகளின் தலைவர்களுக்கு சுமார் 5000க்கும் மேற்பட்ட படைவீரர்கள். பொலிஸ்படை. வான்படையினர் பாதுகாப்பு வலயங்களாக பாதுகாப்பு வழங்க செம்கம்பன வரவேற்புக்கள் நடந்த போதும் இம் மாகாணத்தின் ஏனைய நகரங்களில் இக்கூட்டமைப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் நடந்தன.

சர்வதேச ரீதியில் பயங்கரவாதத்திற்கு எதிராக கூட்டுச் செயற்பாடு. ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார உதவிகள் உட்பட சர்வதேச ரீதியில் பொருளாதார முன் எடுப்புக்கள் பற்றிய நோக்கங்களையே முன் வைத்து கூட்டுச் சேர்ந்துள்ளன.

இந்த எட்டு நாடுகளின் சர்வதேச மட்டத்தில் அதிகாரங்களைக் காட்டும் கூட்டு மகாநாட்டிற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் உட்பட ஏனைய நாடுகளின் தலைவர்கள். பிரதிநிதிகள். என மொத்தம் 400 நாடுகளில் இருந்து கலந்து கொள்வதற்காக அழைத்து இருந்தனர்.

கைத்தொழில் நாடுகளான எட்டு நாடுகளின் தலைர்களின் கூட்டு மகாநாட்டின் போது ஒட்டவா பாராளுமன்றத்தின் முன்பும் கல்கேரி நகரிலும் இதற்கு எதிரான ஆர்ப்பாட்டமும் நடந்து முடிந்தன.

ஈழநாடு
விளம்பரம் அறிவித்தல்
தொடர்புகளுக்கு
(905) 653 - 3000
(416) 266 - 9919

# எய்ட்ஸ் கிருமியைப் பரப்பிய நோயாளிக்கு 10 வருட சிறை

ஒன்ராறியோ கிற்சினர் நகருல் வசிக்கும் எட்கார்ட் மொன்கி (37வயது) என்பவர் ஏச்.ஐ.வி. என்னும் எய்ட்ஸ் கிருமிகளினால் பாதிக்கப்பட்டிருந்து. அதனை அறிந்தும் மூன்று பெண்களுடன் உடலுறவு கொண்டு. அதில் ஒரு பெண்ணுக்கு குழந்தையும் பெற்ற. இறுதியில் மூன்று பெண்கள். ஒரு குழந்தை ஆகியோருக்கு இக்கிருமிகளை பரப்பிய குற்றத்திற்காக வெகுவிரைவில் மரணத்தினை எதிர்கொள்ள வேண்டிய இவ் நோயாளி தற்போது குற்றவாளியாக மாறி பத்து வருடங்கள் சிறைத் தண்டனையை கடந்தவாரம் பெற்றுள்ளார்.

இவருடன் உறவு கொண்டு ஒரு பெண் குழந்தையினைப் பெற்ற பெண் நீதிமன்றத்தில் தாமும் இந்நோய்க்கு ஆளாகி தாம் பெற்ற குழந்தைக்கும் ஆளாக்கிய தாக்கத்தில் வீரிட்டு அலறியிருந்தார். இந்நபர் தமக்கு உண்மையினை காலம் கடந்தும் தெரிவிக்காத காரணத்தினால் குழந்தைக்கு தொடர்ச்சியாக மேற்கொண்ட தாய்பால் உணவின் மூலம் இக் கிருமிகளை அதிகமாக வளர்த்துக் கொள்ளும் நிலைமையே உருவாகியுள்ளது எனக் கவலை தெரிவித்திருந்தார்.

நிக்கரகுவா நாட்டினைப் பூர்வீகமாகக் கொண்ட இவரது மனைவி அங்குள்ள மருத்துவமனையில் இரத்தம் பெற்று தமது உடலில் ஏற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்ட போதே அந்த இரத்தத்துடன் இந்நோய்க்கு ஆளாகி 1999 இல் கனடாவில் மரணமாகியிருந்தார். இவ் மனைவியுடன் கொண்ட உறவின் காரணமாக 1999ம் ஆண்டு குற்றவாளியாக தற்போது உள்ள இக்கணவரும் இக்கிருமிகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார். மனைவி இறப்பதற்கு முன்பே இவருடைய குருதியிலும் இந் நோய்க்குரிய கிருமிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

மனைவி இறந்த பின்பு தமக்கு மறு திருமணம் வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே இவ்வாறு புதிய பெண்களை தேடி நிலைமை தெரிந்து கொண்டும் உறவுகளை தொடர்ந்து மூன்று பெண்களையும் ஒரு குழந்தைகளையும் மரணத்தின்நிலைமைக்குக் கொண்டு வந்தது மன்னிக்க முடியாத செயல் எனத் தீர்ப்பின் போது நீதிபதி தெரிவித்தார்.

# கனேடியச் செய்திகள்

## தொகுப்பு:சிவ.பஞ்சலிங்கம்

# வீதியில் நின்ற மனிதரைத் தாக்கிய இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள்

கனடாவின் பொலிஸ் ஒழுங்கு சட்டவிதிகளை மீறி. ரொறன்ரோவில் உள்ள இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரவு பதினொரு மணியளவில் பொலிஸ் வாகனத்தில் வந்து இறங்கி வீதியில் நின்ற வீடு குடியிருப்புக்கள் இல்லாத அப்பாவி மனிதன் ஒருவரைக் கொடூரமான முறையில் இரத்தம் வழிந்தோடும் அளவுக்கு தாக்கி கொடுமைப்படுத்தி விட்டு சென்ற சம்பவத்தினை சில பொதுமக்களும் நேரடி சாட்சியாக குறிப்பிட்டதனைத் தொடர்ந்து பகிரங்க விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

நல்ல தசைப் பிடிப்புள்ள இவ் இரு இளம்பொலிஸ் உத்தியோகத்தர்கள் வீதியில் நின்ற அப்பாவி மனிதனை மண்டை பிளந்து இரத்தம் வரும் வரை தாக்கிய போது இதனை நேரில் பார்த்த சாட்சிகளே உடனடியாக அவசர அம்புலன்ஸ் சேவையினரை அழைத்திருந்தனர்.

ஆனால் இக்கொடிய தாக்குதலினால் பீதியடைந்திருந்த இவ் அப்பாவி மனிதன் அம்புலன்ஸ் வண்டியில் ஏறி வைத்தியசாலைக்கு செல்வதற்கே பயத்தின் காரணமாக மறுத்திருந்தார் என சாட்சிகள் தெரிவிக்கின்றன. இரு பொலிஸ் உத்தியோகத்தர்களின் இந்த அத்துமீறிய செயற்பாட்டினை சுமார் பத்துக்கு மேற்பட்ட சாட்சிகள் நேரடியாக பார்த்துள்ளதாக விசரணையில் நேரடியாகக் குறிப்பிட்டிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# பாலஸ்தீன மக்களின் தலைவரை மாற்ற உத்தரவிடும் அமெரிக்க ஜனாதிபதிக்கு கனடிய பிரதமர் ஆதரவு

மத்திய கிழக்கு நாடுகளான இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சனையில் இஸ்ரேலின் தலைநகரில் கடந்த வாரங்களில் பாலஸ்தீனத் தீவிரவாதிகளினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதனைக் கண்டித்து உலகப் பொலிஸ்காரன் என வர்ணிக்கப்படும் அமெரிக்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அவர்கள் உடனடியாக இவ் வன்முறைக்கு தீர்வு வேண்டுமானால் பாலஸ்தீனத்தின் தலைவர் யசீர் அரபாத் அவர்களை உடனடியாக பதவி இறக்கம் செய்து அந்த இடத்திற்கு புதிய நபரின் பாலஸ்தீன மக்கள் உடனடியாக தெரிவு செய்தல் வேண்டும் என உத்தர விட்டுள்ளார்.

அது மாத்திரமல்லாது பாலஸ்தீன பாராளுமன்றத்திற்கு பூரண அதிகாரமுள்ளதாகவும் சுதந்திரமுள்ளதாகவும் தெரிவு செய்வதுடன் இஸ்ரேல் நாட்டு எல்லையிலும் ஏனைய எல்லை நாடுகளினதும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மாற்றியமைப்பதுடன் பயங்கர வாதத்தினையும் உடனடியாக தூக்கி எறிய வேண்டும் என உத்தரவிட்டுள்ளதுடன் இது அடுத்த மூன்று வருடங்களுக்குள் நிறைவேற்றப்படல் வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் இந்த உத்தரவை கனடிய பிரதமர் வெகுவாகப் பாராட்டி அரபாத்தின் பதவி மாற்றத்தை வரவேற்றுள்ளார்


- மீளப் பெறும் பண வெகுமதியுடன் கூடிய காப்புறுதித் திட்டம்
- முதலீட்டுடன் கூடிய ஆயுள் காப்புறுதித் திட்டம்
- தற்காலிக, மிகவும் விலை குறைந்த ஆயுள் காப்புறுதித் திட்டங்கள்
- விபத்து, காயங்கள் மூலம் ஏற்படும் இயலாமைக்கான காப்புறுதித் திட்டங்கள்
- சேமிப்புகளும் முதலீட்டுத் திட்டங்களும்
- Investment Fund
- RSP
- RIFs and Annuities

SINCE 1847

One of the best & leading companies in North America

CANADA LIFE

மேலதிக பல்வேறு வகையான திட்டங்களை அறிந்து கொள்ள நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன்

சிவ பஞ்சலிங்கம் (B.Comm.)
BUS: (416) 661 - 9155
RES: (416) 321 - 09?9
FAX: (416) 661 - 9157
5050 DUFFERIN ST # 218
TORONTO - ONT - M3H 5T5

# புலிகளை பொறிக்குள் தள்ள ரணில் நகர்த்தும் காய்?

**சிறப்புக் கட்டுரை**

**-அறிவமுதன்**

ஆப்கானிஸ்தான் ஊடாக எண்ணெய்க் குழாய்களை அமைக்க தலிபான் ஆட்சியாளர்கள் அமெரிக்காவுக்கு இடம் கொடுத்திருந்தால் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான அமெரிக்க யுத்தம் மூண்டிருக்காது.
அமெரிக்காவின் விரோதி நாடாக ஆப்கானிஸ்தான் ஆகியுமிருக்காது.
இஸ்லாத்திற்கான சிலுவைப்போர் வெடித்துமிருக்காது.
இந்த உதாரணம் ஒரு விடயத்தை தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றது.
அதாவது சர்வதேச அரசியலே உள்நாட்டரசியலைப் பெரிதும் தீர்மானிக்கின்ற சக்தியாக இன்று மாறி வருகிறது என்பதே.
சோவியத் -அமெரிக்க பனிப்போர் சகாப்தத்தின் முடிவு உலகத்தை வேறொரு வகையில் மறுபங்கீடு செய்திருக்கின்றது.
பூகோள மயமாக்கலின் கீழ் முழு உலகமும் ஒரு கிராமமாக்கப்பட்டு மனிதன் பூகோளப்பிராணி ஆகிவிட்ட நிலையில் மரபார்ந்த அணுகுமுறையின் கீழ் இன்றைய அரசியலை விளங்கிக்கொள்ளமுடியாத காலகட்டமிது.
ஆப்கானுக்கெதிரான அமெரிக்க ஆக்கிரமப்புக்கு முன்னர் ஒரு காலத்தில் அமெரிக்காவின் பரம வைரியாக இருந்த சோவியத் யூனியனும் ஆதரவளித்தது.
செஞ்சேனை கொண்டு மாபெரும் புரட்சிப்படை நடாத்திய செஞ்சீனமும் ஆதரவளித்தது.
ஆசியாவின் ஜனநாயகப் பாரம்பரியத்தின் முன்னோடி எனப்படுகின்ற இந்தியாவும் ஆதரவளித்தது.
இராணுவ சதிப்புரட்சிகளால் ஆட்சியாளர்கள் மாற்றியமைக்கப்படுகின்ற பாகிஸ்தானும் ஆதரவளித்தது.
மரபார்ந்த அணுகுமுறையினால் இந்த அரசியலை விளங்கிக்கொள்ள முடியாமலிருக்கின்றது அல்லவா?
சர்வதேச அரசியல் நிலைமைகளை உன்னிப்பாக அவதானிப்பதும் அவற்றை விளங்கிக்கொள்ள முற்படுவதுமே இந்தப் பொறியிலிருந்து விடுதலைக்குப் போராடும் தேசங்களை தேசியங்களை அமைப்புக்களை காப்பாற்றும்.
ஆனால் இதனை விடுதலைக்குப் போராடுபவர்கள் புரிந்து கொள்வதற்கு முன்பாகவே அவற்றை ஒடுக்குபவர்கள் புரிந்து கொள்கிறார்கள்.
கடந்த இரண்டு தசாப்த காலத்தில் தமிழ் மக்கள் மீதும் அவர்களுடைய விடுதலைக்காக போராடி வரும் விடுதலைப் புலிகள் மீதும் சிங்கள அரசாங்கம் மேற்கொண்ட இராணுவ வழியிலான அனைத்து நடவடிக்கைகளும் மண்கவ்விவிட்டன.
மாபெரும் முன்தயாரிப்புக்களுடன் மேற்கொண்ட ஜெயசிக்குறு 13 மாத காலத்தில் ஆரம்பித்த இடத்திலேயே வந்து நின்றது.
இஸ்ரேலிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட குண்டுவீச்சு விமானங்களாலோ, ராடருடன் கூடிய கடற்படைப் படகுகளாலோ விடுதலைப் புலிகளுடைய நடவடிக்கைகளை மட்டுப்படுத்தக்கூட முடியவில்லை.
இவ்வாறு தோற்கடிக்கமுடியாதென்பதை முன்கூட்டியே உணர்ந்திருந்தார் ஜே.ஆர்.
இதனால் தான் போராளிக்குழுக்களுக்கு ஆயுதம் கொடுத்து இடம் கொடுத்து வளர்த்து வந்த இந்தியாவை, 'ஒப்பரேஷன் பூமாலை'யுடன் வந்த இந்தியாவை சாதுரியமாக விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான இராணுவமாக மாற்றினார் ஜே.ஆர்.
ஆனால் அதில் அவருக்கு வெற்றி கிடைத்தது.
அது தற்காலிகமானது என்றாலும் இந்த தற்காலிக வெற்றியிலிருந்து சில படிப்பினைகளைப் பெற்றுக் கொண்ட ஸ்ரீலங்கா அரசு அதுவும் குறிப்பாக ஐக்கிய தேசியக்கட்சி அது சர்வதேச அரசியலில் நிகழ்ந்த மாற்றங்களை முதலில் உள்வாங்கியது.
அதனடியாகப் புதிய வழிமுறையொன்றை அது உருவாக்கியது.
அவ்வழிமுறை மேற்கத்தைய நலன்களைப் பாதிக்காது அவற்றை மேலும் முன்னெடுத்துச் செல்வதாகவும் தேவைப்படும் பட்சத்தில் மேற்கின் ஆதரவையும் ஆலோசனையையும் பெறத்தக்கதாகவும் அமைந்தன.
பொ.ஜ.முன்னணி அரசுக்காலத்தில் அரசு முன்வைத்த தீர்வுத்திட்ட நகலை எரித்த ரணில் விக்கிரமசிங்க, சந்திரிகா நாட்டை பிரித்துக் கூறாக்கப்போகிறார் என்று மகாநாயக்க தேரர்களிடம் ஒப்பாரி வைத்த ரணில் போரை நிறுத்தி சமாதானப் பேச்சின் ஊடாகத் தமிழ்மக்களின் இடர்களைக் களைய முன் வந்திருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார்.
இது எப்படி நடந்தது?
உண்மையிலேயே இதற்கான வியூகத்தை தேர்தலுக்கு முன்னரே ரணில் அமைத்துக் கொண்டார்.
அவருக்குத் தேவையாக இருந்ததெல்லாம் ஆட்சியதிகாரத்தை கைவசப்படுத்துவது.
இதற்கு பொ.ஜ.முன்னணி அரசின் மேல் மக்கள் கொண்டிருந்த அதிருப்தியைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார்.
விலைவாசி ஏற்றம், வருமான வீழ்ச்சி என்பவற்றால் சிங்கள மக்களும் பொ.ஜ.மு.அரசு மேற்கொண்ட இராணுவ ஒடுக்குமுறையால் தமிழ், முஸ்லிம் மக்களும் அதன் மேல் மிகுந்த அதிருப்தி கொண்டிருந்தனர்.
இந்த அதிருப்தியை தனது தேர்தல் வெற்றியாக்குவதற்கு தமிழ்க்கட்சிகளையும் முஸ்லிம் காங்கிரசையுமே தனது வலையில் வீழ்த்தினார்.
முஸ்லிம் காங்கிரசை ஐதே கட்சியுடன் கூட்டுக்கு கொண்டு வருவதற்கு மகாராஜா நிறுவனம் பெரிதும் உதவியதாகப் பின்னர் தகவல்கள் வெளியாகின.
தமிழ்க்கட்சிகளுக்கு சில லட்சங்கள் போதுமானதாக இருந்தன.
இது ரணிலுக்கு கிடைத்த முதலாவது வெற்றி.
இரண்டாவதாக புலிகளை தற்போதைய நிலையில் போரின் மூலம் வெல்லமுடியாதென்பதை உணர்ந்த அவர் உடனடியாக ஒரு போர் நிறுத்தத்திற்குத் தயாரானார்.
இதற்கு மேற்கின் ஆதரவும் தாராளமாகக் கிடைத்தது.
இதனுடாகப் புலிகள் போரில் ஈடுபட்டிருக்கும்போது சாதிக்கமுடியாத பல விடயங்களை இப்போது சாதிக்கமுடிந்திருக்கின்றது அவருக்கு.
அதில் இரண்டு விடயங்கள் பிரதானமானவை
ஒன்று, திருமலையில் உள்ள எண்ணெய்க்குதங்களை இந்தியாவுக்கு வழங்கியமை.
போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலத்தில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய வாய்ப்பிருப்பினும் புலிகளின் இராணுவ அச்சுறுத்தல் காரணமாக அதனைத் துப்பரவாக்கவோ பாவனையிலீடுபடுத்தவோ இயலாத சூழல் இருந்திருக்கும்.
இப்போது புலிகளின் கைகள் கட்டப்பபட்டிருக்கின்றன.
தமிழர்களின் தலைநகரம் எனப்படுகின்ற திருமலையில் எண்ணெய்க்குத பாதுகாப்பை காரணம் காட்டி இந்திய கடற்படை மற்றும் விமானப்படை ரோந்தும் கண்காணிப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
இதனூடாக அவர் இரண்டாவது வெற்றியைப் பெற்றிருக்கின்றார்.
அதாவது புலிகள் கடலூடாக ஆயுத தளபாடங்களைக் கொண்டு வருவது பெருமளவுக்குச் சாத்தியமற்றதாக்கப்பட்டிருக்கின்றது.
மற்றைய பிரதானமானது அமெரிக்காவுடன் ஏற்படுத்தப்படவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம்.
இந்த ஒப்பந்தப்படி இலங்கைத் துறைமுகங்களையும் விமான நிலையங்களையும் கடற்பிராந்தியத்தையும் வான்பரப்பையும் அமெரிக்கா எப்போதும் பயன்படுத்தலாம்.
இவ்விரு நடவடிக்கைகளுடாக உலக வல்லரசையும் பிராந்திய வல்லரசையும் தனது பக்கத்தில் நிறுத்திவைத்திருக்கின்றது இலங்கை அரசு.
இதன் பின் நடைபெறப்போகும் பேச்சுவார்த்தையில் ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வு பற்றியே பேசப்படும் என்று ரணில் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றார்.
ஒற்றையாட்சிக்கு உட்பட்ட ஒரு தீர்வைப் பெறுவதற்காகவா தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்தார்கள்.
விடுதலைப்புலிகள் ஆயிரக்கணக்கான போராளிகளை இழந்தார்கள்?
புலிகளின் இரண்டு தசாப்தகால போராட்டம் அதற்குத் தானா?
தெளிவான பதில், இல்லை என்பது தான்.
அவ்வாறானால் புலிகளுக்கு யுத்தத்தைத் தொடர்வதைத் தவிர வேறு வழியில்லையா?
தொடர்ந்தால் என்ன நிகழும்?
ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்ட யுத்தத்திற்கு ஆதரவளித்ததைப் போல புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கும் ஆதரவு கிடைக்குமா?
கிடைக்கும் என்கின்றன கசியும் தகவல்கள்.
அமெரிக்காவுடன் மிகுந்த தொடர்பு கொண்டிருக்கின்ற அமைச்சர் மிலிந்த மொறகொட அண்மையில் முப்படைகளினதும் தலைவர்களுடன் சந்திப்பொன்றை நடாத்தியிருக்கின்றார்.
அச்சந்திப்பில் அடுத்து வரும் மூன்று வருடங்களுக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கான பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.
அமெரிக்காவிடமிருந்து கடன் அடிப்படையில் இந்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காகப் பேச்சுவார்த்தை நடாத்த பாதுகாப்புத் துறையின் உயர்மட்டக்குழு ஒன்று விரைவில் அமெரிக்கா செல்லவுள்ளது.
இது தவிர சீனா மற்றும் இந்தியா போன்றவற்றிடமிருந்தும் தேவையான ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இதில் முன்னாள் கடற்படை அதிகாரியும் விமானப்படை அதிகாரியும் சீனாவுடன் தொடர்புடைய ராஜதந்திரி ஒருவரும் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
இது தவிர மீண்டும் போர் ஆரம்பித்தால் புலிகளுடன் மோத இந்தியப்படையை அல்லது அமெரிக்கப்படையை இலங்கை இழுத்து விடாது என்பதற்கு உத்தரவாதம் ஏதுமில்லை.
ஒப்பரேஷன் பூமாலையுடன் வந்த இந்தியப்படையை புலிகளுடன் மோத முன்னைய ஐதேக அரசு இழுத்துவிடவில்லையா?
அப்படியானால் புலிகளை சமாதானப்பேச்சுவார்த்தை என்ற பொறியில் இழுத்துவிட்டு விட்டு இலங்கை அரசு தனது காய்களை மிகவும் நுட்பமாக நகர்த்தி வருகின்றதா?
இந்தக் கேள்விகளிலிருந்து ஆரம்பிக்காமல் வெறுமனே சமாதானக் கோஷம் போடுவதால் ஆவது ஒன்றுமில்லை.
புத்திஜீவிகளதும் ஊடகவியலாளர்களதும் பணி இந்தக்கேள்விகளிலிருந்து ஆரம்பிப்பதே நல்லது.

## இப்படியும் நடக்கிறது

அது ஒரு வைத்தியரின் பணிமனை.
பாரிஸின் புறநகரிலுள்ள அந்த கிராமத்திலுள்ள குடும்ப டாக்டர் ஒருவரின் அந்த பணிமனையில் காத்திருந்தேன்.
அந்த டாக்டரிடம் போனால் எப்போதுமே கூட்டம் அதிகமாகவே இருக்கும்.
அன்று அந்த குறிப்பிட்ட டாக்டர் விடுமுறையில் இருந்தார்.
அவரது உதவியாளர்தான் கடமையில் இருந்தார்.
அந்த உதவியாரான டாக்டர் ஒரு ஆசியர் என்பது அவரைப் பார்த்ததும் புரிந்தது.
வயது முப்பதுதான் இருக்கும்.
தனது அறையிலிருந்து வெளியே வந்து ஒவ்வொருவராக உள்ளே அழைத்துச் சென்றுகொண்டிருந்தார் அவர்.
அவர் வெளியே வந்தபோது அடுத்த நோயாளியாக அந்த வாலிபன் எழும்பி வாசலை நோக்கி சென்றான்.
அவனது கையிலிருந்த கைத் தொலைபேசி மணி அடித்தது.
அவன் தொலைபேசி அழைப்புக்கு பதில் கூறியபோதுதான் அவன் நம்மவன் என்பது தெரிந்தது.
அவன் தொலைபேசியில் பதிலளித்துவிட்டு, டாக்டரிடம் அதற்காக மன்னிப்புக் கேட்டபோது டாக்டர் குறுக்கிட்டார்.
''எங்க வீட்டிலிருந்துதானே.... நீ... ஒரு ஆசிய இனத்தவனா?'' என்று டாக்டர் அந்த வாலிபனைப்பார்த்துக் கேட்க,
அவன் அதற்கு 'ஆம்'' என்று பதிலளித்தான்.
டாக்டர் சொன்னார்...
''இந்த ஆசியப் பெற்றோர்களே இப்படித்தான்... முன்னர் எனக்கும் இப்படித்தான்.. கல்லூரியில் முக்கிய பாடம் நடந்து கொண்டிருக்கும்போதும் போன் பண்ணி... எங்கே கல்லூரியில்தான் இருக்கின்றேனா என்று செக் பண்ணுவார்கள்...''

**-ஊர்க்குருவி**

# கூட்டணித் தலைவராக ஆனந்தசங்கரி

## மோதலுக்கு முடிவா? புதிய ஆரம்பமா?

எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே தமிழர் விடுதலைக்கூட்டணியின் புதிய தலைவராக வீ.ஆனந்தசங்கரி தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். தேசியப் பிரச்னைகள் தொடர்பாக அவர் சந்திக்கவேண்டியுள்ள மாபெரும் பிரச்னைகள் என்பவற்றுக்கு அப்பால் உட்கட்சி விவகாரத்தில் அவர் எதிர்கொள்ளவேண்டிய பிரச்னைகள் தான் மிகவும் தீவிரமானவையாக உள்ளன.

ஒருவாறு தலைமைப் பதவியை அவர் பெற்றுக்கொண்டு விட்டாலும் கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான மாவை சேனாதிராஜா கொடுக்கும் அழுத்தம் ஒரு புறம், சக்தி வாய்ந்த பொதுச் செயலாளர் பதவியைத் தனது கைகளில் வைத்துள்ள திருமலை மாவட்ட எம்.பி. இரா.சம்பந்தன் கூட்டணியை தனது பாதையில் கொண்டு செல்வதற்காக எடுக்கும் முயற்சிகள் மறுபுறம் என இரு பக்க நெருக்கடியை அவர் எதிர்கொள்ள வேண்டியவராக உள்ளார்.

தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவராக கடந்த இருபத்தைந்து வருட காலமாகச் செயற்பட்ட மு.சிவசிதம்பரத்தின் மறைவுடன் தான் கூட்டணிக்குள் குமுறிக் கொண்டிருந்த பல பிரச்னைகள் வெளிக் கிளம்பியது.

கூட்டணியின் அடுத்த தலைவர் யார் என்ற பிரச்னை ஒரு புறம் தீவிரமடைய மறுபுறம் சிவசிதம்பரத்தின் தேசியப்பட்டியல் ஆசனத்துக்கு யாரை நியமிப்பது என்பது ஒரு பூதாகரமான பிரச்னையாக உருவாகியது. இந்த இரண்டு பிரச்னைகளுடனும் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான ஆனந்தசங்கரி சம்பந்தப்பட்டிருந்தார். கூட்டணியில் உள்ளவர்களில் மிகவும் சிரேஷ்ட உறுப்பினர் என்ற வகையிலும் கட்சியின் உபதலைவர் என்ற வகையிலும் அடுத்த தலைவராக ஆனந்தசங்கரியே நியமிக்கப்படவேண்டும் என்பதில் பெருமளவுக்கு கருத்து வேறுபாடுகள் இருக்கவில்லை.

மாவை சேனாதிராஜா மட்டும் இவ்விடயத்தில் முரண்பட்டார். ஆனால் தேசியப்பட்டியல் ஆசனம் தான் சர்ச்சைக்குரியதாகியது.

திருமலை மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த துரை. இரட்ணசிங்கம் தான் வெற்றிடமான தேசியப்பட்டியல் ஆசனத்துக்கு நியமிக்கப் படுவார் என்பது உறுதியாகிய நிலையிலும் ஞாயிற்றுக்கிழமை கூட்டணியின் செயற்குழுக் கூட்டம் ஆரம்பமாகும் வரையில் கூட



அந்தப்பதவியைப் பெறுவதற்கான போட்டிகளும் ஆதரவு திரட்டல்களும் தொடர்ந்து கொண்டு தானிருந்தது. தன்னால் முன் மொழியப்பட்ட உடுவில் கிராமசபைத் தலைவர் முத்துலிங்கத்துக்கு ஆதரவு திரட்ட வன்னி சென்ற ஆனந்தசங்கரி வெறுங்கையுடன் கடந்த வாரம் திரும்பியிருந்ததும் தெரிந்தது தான். இவற்றுக்கு மத்தியில் இரா.சம்பந்தனால் முன் மொழியப்பட்ட துரைஇரட்ணசிங்கத்தின் பெயரை கூட்டணியின் செயற்குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டு விட்டது. இதன் மூலம் திருமலை மூதூர் பகுதி மக்களின் நலன்களைக் கவனிக்கக்கூடிய ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராகியிருக்கின்றார்.

ஆனந்தசங்கரிக்கும் சம்பந்தனுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் இந்த நியமனத்தின் மூலம் முடிவுக்கு வந்து விட்டது. தற்போது யாழ்ப்பாண மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காக ஒன்பது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளார்கள். வன்னிக்கு நான்கு தமிழ் எம்.பி.க்கள் உள்ளார்கள். மட்டக்களப்புக்கும் மூன்று தமிழ் எம்.பி.க்கள் இருக்கின்றார்கள். இதனைவிட அம்பாறைக்கு ஒரேயொரு உறுப்பினர்மட்டும் தான் உள்ளார். அதே போல திருமலைக்கும் ஒருவர் தான் உள்ளார். அவர் தான் சம்பந்தன். சம்பந்தன் கூட்டணியின் செயலாளர் நாயகமாகவும் உள்ளதால் மாவட்ட மக்களின் பிரச்னைகளையிட்டு அதிகளவு நேரத்தை செலவிட முடியாதவராக உள்ளார். இந்தப் பின்னணியில் திருமலைக்கு மற்றொரு உறுப்பினர் இருப்பதன் அவசியத்தைக் கருத்தித்தான் திருமலைமாவட்டத்தில் குறிப்பாக மூதூர் பகுதியில் செல்வாக்கு உள்ளவரான துரை. இரட்ணசிங்கத்தை தேசியப்பட்டியல் எம்.பி.யாக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப் பட்டது.

இதனை விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொண்டுவிட்ட நிலையில் ஆனந்தசங்கரியால் முன் மொழியப்பட்ட முத்துலிங்கத்தின் பெயர் நீக்கப்பட்டுவிட்டது. முத்துலிங்கம் 79 வயதானவர். சுறுசுறுப்பாகச் செயற்படக்கூடிய ஒருவருமல்ல. அத்துடன் ஒரு கிராமசபையின் தலைவராக உள்ள அவர் அரசியலில் குறிப்பிடத்தக்க அளவுக்குஅர்ப்பணிப்புடன் செயற்பட்டவருமல்ல. கடந்த பொதுத் தேர்தலில் அவருக்கு தேசியப்பட்டியல் எம்.பி.பதவி வழங்கப்படும் என ஆனந்தசங்கரி வாக்குறுதியளித்திருந்தார். அதன் அடிப்படையில் தான் அவரைக் கொண்டு வருவதற்கு ஆனந்தசங்கரி படாதபாடு பட்டார்.

தான் வழங்கிய வாக்குறுதியை கூட்டமைப்பின் வாக்குறுதியாகக் காட்டவும் முயன்றார். கட்சிக்குள் அதற்கு ஆதரவில்லை என்ற நிலையில் வன்னி சென்று அங்கிருந்தும் வெறுங்கையுடன் திரும்பினார்.

இந்த விவகாரத்தில் தனக்கு ஏற்பட்ட தோல்வியை தலைமைப் பதவியைப் பெற்றுள்ளதால் ஆனந்தி ஈடு செய்துள்ளார்.

ஆனந்தசங்கரியின் பிரதான எதிராளியாகிய மாவை சேனாதிராஜா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செயற்குழுக்கூட்டத்துக்கு சமூகமளித்திருக்கவில்லை. கூட்டணியின் தலைமைப்பதவிக்கு ஆசைப்பட்டவர்களில் அவரும் ஒருவர். தலைமைப் பதவி தனக்கு கிடைக்காத நிலையில் ஆனந்தசங்கரியால் தான் ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டு விடக்கூடும் எனவும் மாவை கருதுகின்றார். கடந்த பொதுத்தேர்தலில் இருவரும் யாழ். மாவட்டத்தில்போட்டியிட்ட போது கிடைத்த அனுபவம் இது. செயற்குகுழுக்கூட்டத்துக்கு மாவை சமூகமளிக்காதபோதிலும் தொடர்ந்தும் அவரே பொருளாளராகச் செயற்படுவார் என செயற்குழு தீர்மானித்துள்ளது. அதேவேளையில் கூட்டுப் பொருளாளராக மற்றொருவரை நியமிப்பதற்கும் முடிவாகியுள்ளது. இது மாவைக்கான அச்சுறுத்தலா என்ற கேள்வியும் எழுகின்றது.

இந்தப் பின்னணியில் தனிப்பாதையில் செல்வது தொடர்பாக மாவை தீவிரமாகச் சிந்திப்பதாகத் தெரிகின்றது.

செயலிழந்துபோயுள்ள தமிழரசுக்கட்சிக்கு புத்துயிரளித்து தமது ஆதரவாளர்களுடன் செயற்படுவதற்கான திட்டம் ஒன்று தொடர்பாக மாவை தீவிரமாக ஆராய்ந்து வருகின்றார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் உதயத்துடன் தமிழரசுக்கட்சி செயலிழந்து போயுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் எந்த வேளையிலும் வெளியாகலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால் தான் ஆனந்தசங்கரி தலைமைப் பதவியைப் பொறுப் பேற்றிருப்பது உட்கட்சி மோதல்களின் முடிவா அல்லது ஆரம்பமா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. ✱

குத்தூசியின்
கொழும்புக்
கோலங்கள்

# முஸ்லிம் காங்கிரசுக்குள் தீவிர பனிப்போர்

முஸ்லிம் காங்கிரஸின் உயர் மட்டத்தில் எழுந்துள்ள உள்வீட்டுப் பிரச்னை நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து செல்லும் அதே வேளையில் இந்தப் பிரச்னை கட்சியில் மற்றொரு பிளவை ஏற்படுத்திவிடலாம் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது. கட்சியின் உயர் மட்டம் இன்று இரண்டாகப் பிளவுபட்டுச் செயற்பட்டுக் கொண்டிருப்பது தெரிகின்றது. இவர்களில் ஒரு சாரார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுடனும் மற்றொரு சாரார் முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் அமைச்சருமான அதாவுல்லாவுடனும் இணைந்து மற்றொரு துருவமாகச் செயற்படத் தொடங்கியுள்ளார்கள்.

இன்று கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளுக்கு காரணம் தலைவருக்கும் தவிசாளருக்கும் இடையே அண்மைக்காலத்தில் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகளேயாகும்.

அதேவேளையில் கட்சியின் பொதுச் செயலாளர் கூட தலைவர் ஹக்கீமுடன் தீவிரமான முறையில் முரண்பட்டுக் கொண்டுள்ளார்.

தலைவர் கட்சியின் நடடிவக்கைகளை தன்னிச்சையாக மேற்கொள்வதாகக் குற்றஞ்சாட்டியுள்ள பொதுச் செயலாளர் தமது பதவி துறப்புக் கடிதத்தை தலைமைப் பீடத்திடம் சமர்ப்பித்ததாகவும் ஆனால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கட்சிக்குள் இரு பக்க நெருக்கடியை தலைவர் ஹக்கீம் எதிர்கொண்டுள்ள அதேவேளையில் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளின் அடிப்படையில் அமைச்சர் அதாவுல்லாவை கட்சியிலிருந்து ஓரங்கட்டும் முயற்சியில் ஹக்கீமின் ஆதரவாளர்கள் இறங்கியுள்ளார்கள்.

அதாவுல்லாவை ஒதுக்கிவிட்டு அவரது இடத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் அவரது மாவட்டத்தைச் சேர்ந்த மற்றொரு கட்சிப் பிரமுகர் திரைமறைவில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். பிரதியமைச்சரும் ஹக்கீமின் முக்கிய ஆதரவாளர்களில் ஒருவருமான ஷேகு பஷீத் தாவூத் தான் அவர்.

தாவூத்தின் இந்த நடவடிக்கைகளுக்கு ஹக்கீமும் முழு ஆதரவு வழங்கிவருவதுடன் இதனை ஊக்குவித்து வருவதாகவும் தெரிகின்றது. தாவூத்தைப் பலப்படுத்துவதன் மூலம் அதாவுல்லாவை ஓரங்கட்டலாம் என ஹக்கீம் கணக்குப் போட்டு வைத்துள்ளார். இரு வாரங்களுக்கு முன்னர் அமரர் சிவசிதம்பரத்தின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் சென்ற போதும் திரும்பும் வழியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளைச் சந்திக்கச் சென்றபோதும் தாவூத்தைத் தான் ஹக்கீம் தன்னுடன் அழைத்துச் சென்றிருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

இதன் மூலம் தாவூத்தை தனக்கு அடுத்தவராக வளர்ப்பதற்கு ஹக்கீம் முற்படுவதையும் புரிந்து கொள்ளமுடிகின்றது.

அண்மையில் நடைபெற்ற கல்முனை மாநகரசபைத் திறப்பு விழாவில் அதாவுல்லாவுக்கு எதிரான நடவடிக்கைகளைக் காணக்கூடியதாக இருந்தது. முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்பட்ட இந்த வைபவத்தில் அதாவுல்லாவை ஓரங்கட்டுவதற்காக வகுக்கப்பட்ட ஒரு வியூகம் வெளிப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றுவதற்கு அதாவுல்லா தயாராகும்போது அவரது உரையைக் குழப்புவதற்காக ஒரு குழு பெரியளவிலான தயாரிப்புக்களுடன் காத்து நின்றது.

இருந்தபோதிலும் தகவலறிந்த அதாவுல்லா இறுதி வேளையில் கூட்டத்தில் உரை நிகழ்த்துவதைத்தவிர்த்துக் கொண்டார்.

அஷ்ரப்பின் மறைவைத் தொடர்ந்து பேரியல் அஷ்ரப்புடன் ஹக்கீம் முரண்பட்டுக் கொண்டிருந்த போதும் இதே குழுவினர் தான் கிழக்குப் பகுதிகளில் தீவிரமாகச் செயற்பட்டனர்.

பேரியல் கலந்து கொண்ட கூட்டங்களைக் குழப்பும் பொறுப்பு இந்தக் குழுவினரிடம் தான் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இப்போதும் அதே குழுவினர் தான் அதாவுல்லாவின் உரைகளைக் குழப்புவதற்காகவும் பயன் படுத்தப்படவிருந்தார்கள்.

இக்குழுவின் பின்னணியில் தாவூத் செயற்படுவதாக அதாவுல்லாவின் ஆதரவாளர்கள்



சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

இந்த வைபவத்தில் உரையாற்றுவதை தவிர்த்துக் கொண்டதன் மூலம் முஸ்லிம் காங்கிரசுக்குள் இடம்பெறும் பனிப்போர் தெருச்சண்டையாக மாறுவதை அதாவுல்லா தவிர்த்துக் கொண்டார்.

முஸ்லிம் காங்கிரசுக்குள் இன்று தோன்றியுள்ள இந்த உள்வீட்டுப் பிரச்னைக்கு உரிய முறையில் தீர்வு காணப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் மற்றுமொரு பிளவை கட்சி சந்திக்கவேண்டியிருக்கும் என முஸ்லிம் தலைவர்கள் பலரும் எச்சரித்துள்ளார்கள்.

அத்துடன் சமரச முயற்சிகளையும் தீவிரமான முறையில் முன்னெடுத்து வருவதாக தெரிகின்றது.

ஹக்கீம் முஸ்லிம்கள் மத்தியில் தமது செல்வாக்கை நிலைநாட்டியுள்ள போதிலும் அதாவுல்லாவுக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள செல்வாக்கைக் குறைத்து மதிப்பிட முடியாது.

# மூன்று அணியாகிவிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி

**யாழ். நகரிலிருந்து கண்ணன்**

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரம் இம்மாத முற்பகுதியில் காலமானதைத் தொடர்ந்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகியவற்றுக்குள் புகைச்சலும் பூகம்பமும் வெடித்துக் கொண்டிருக்கின்றது. கட்சிக்குள் இதுவரை காலமும் இரண்டு பிரிவுகள் இயங்கி வந்தது யாவரும் அறிந்ததே. இப்போது மூன்று தரப்புக்கிடையில் பனிப்போர் நடந்து கொண்டிருக்கின்றது.

அதுபோலவே தமது முரண்பாடுகளையெல்லாம் சகித்துக் கொண்டு இது வரையும் அரசியல் களத்தில் நின்ற கூட்டமைப்பு கட்சிகளுக்கிடையில் இப் போது பிரச்னைகள் முளைவிடத் தொடங்கியிருக்கின்றன. எல்லாமே பதவிப்போட்டியால் வந்த வினை தான். அமரர் சிவசிதம்பரத்தின் மறைவைத் தொடர்ந்து அவர் வகித்து வந்த இரண்டு பதவிகளைக் கைப்பற்றுவதற்காகவே இந்தப் போட்டி பூசல்கள் உருவெடுத்திருக்கின்றன.

ஆகக் கூடுதலான பூசல்களுக்கு காரணமாக இருப்பது நாடாளுமன்றத்தில் கூட்டமைப்புக்கு கிடைத்த தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவிக்கு யாரை நியமிப்பது என்ற விடயமேயாகும். தேர்தல் முடிவுகள் வெளியாகி கூட்டமைப்புக்கு ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் கிடைத்தபோதே இது பிரச்னைக்குரிய விடயமாகியது. தேசியப் பட்டியலில் முதலிடத்தில் சிவசிதம்பரத்தின் பெயர் இடம் பெற்றிருந்தது. அடுத்த இடத்தில் இருந்தது தமிழ்க்காங்கிரஸின் குமரகுருபரன்.

பட்டியலின்படி சிவசிதம்பரத்துக்கு தான் நியமனம். ஆனால் அவர் நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்ட நிலையில் எழுந்த நடமாடக்கூடமுடியாத நிலையில் சென்னையில் தங்கியிருந்தார். தேசியப்பட்டியல் ஆசனம் கிடைத்தபோதும் சிவசிதம்பரம் கொழும்புக்கு வந்து நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்க விரும்பவில்லை. அதற்கு அவரது உடல்நிலை ஒத்துழைக்கக்கூடிய நிலையிலும் இருக்கவில்லை.

இதனால் கூட்டணி தனது கட்சியின் வேறொருவருக்கு தேசியப்பட்டியல் ஆசனத்தை வழங்க முனைந்தது. ஆனால் காங்கிரசோ பட்டியலில் அடுத்த நிலையில் உள்ள குமரகுருபரனுக்குத் தான் அப் பதவியை வழங்கவேண்டும் என வற்புறுத்த நிலைமை சிக்கலடைந்து கொண்டபோது வேறு வழியின்றி தள்ளாத வயதில் சக்கர நாற்காலியில் இருத்தி சிவசிதம்பரத்தை கொழும்புக்கு கூட்டி வந்து கூட்டணி தனது நிலையைப் பலப்படுத்திக் கொண்டது.

எவ்வாறாயினும் சிவசிதம்பரம் தனது நாடாளுமன்றப் பதவிக்காலத்தில் வெளியிட்ட கருத்துக்களும் அவரது மாற்றமடைந்த நிலைப்பாடும் அவரை மரணத்துக்குப் பின்னர் ஒரு தியாகி என்ற நிலைக்கு உயர்த்தியிருந்தது என்பதோடு அனைத்துத் தரப்பினரது மரியாதைக்குரியதுமான தலைவராக்கியது. ஆனால் அவரால் விட்டுச் செல்லப்பட்ட பதவிகள் கட்சிக்குள்ளும் கூட்டமைப்புக்குள்ளும் பிரச்னைகளையல்லவா தோற்றுவித்துச் சென்றிருக்கின்றது. கூட்டணிக்குள்ளேயே பலரை இப்பதவிக்கு முன்னிறுத்த முயற்சிகள் நடந்தன. ஆனந்த சங்கரியின் ஆதரவாளர்கள் முத்துலிங்கத்தை நியமிக்கவேண்டும் என வற்புறுத்தினர். இவரது பெயர் தேசியப்பட்டியலில் நான்காவது இடத்தில் தான் இருக்கின்றது. வன்னி மாவட்டத்தில் கூட்டணியின் பிரதிநிதிகள் எவரும் இல்லை என்றும் அங்கிருந்தே ஒருவரை நியமிக்கவேண்டும் என்று ஒருசாரார் கூறுகின்றனர். இதுபோன்றே மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் இருந்தும் கோரிக்கைகள் விடப்பட்டிருந்தன.

இதற்கிடையில் கூட்டணியின் இன்னொரு முக்கிய பிரமுகரும் இப்பதவிக்காக முன்னிறுத்த முயன்ற தோல்வி கண்டிருக்கிறார். அவர் வேறு யாருமல்ல. திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் தான். நீண்ட காலமாக லண்டனில் வசித்து வரும் இவர் திடீரென சிவசிதம்பரத்தின் மரணத்தையடுத்து கொழும்புக்குச் சென்று பூதவுடலுடன் யாழ்ப்பாணம் வரை சென்று இறுதிக்கிரிகைகளில் பங்கு கொண்டிருந்தார். ஒரு காலத்தில் ஓரங்கட்டப்பட்டிருந்த கூட்டணித் தலைவர்கள் இன்று நாடாளுமன்றத்துக்குச் சென்று தமிழ் மக்களை பிரதநிதித்துவம் செய்கின்ற நிலையில் தானும் அந்த அணியில் இணைந்து கொள்ளவே அவர் சிவாவின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டிருந்தார். ஆனால் அவரது துரதிர்ஷ்டம் என்னவென்றால் கூட்டணியின் எந்த அணியுமே இவரை இப்பதவிக்கு முன்னிறுத்தத் தயாராக இல்லை என்பது தான். இதனால் மனமுடைந்த அவர் தனது பதவி ஆசையைத் தூக்கி வீசிவிட்டு போகத் தயாராகிவிட்டார்.

கட்சிக்குள் நிலை இப்படியென்றால் கூட்டமைப்புக்குள் குமரகுருபரனுக்குத் தான் இப்பதவியை வழங்கவேண்டும் என காங்கிரஸ் வற்புறுத்தியதோடு இந்த விடயம் தொடர்பாகப் புலிகள் தலையிட்டு தீர்வு வழங்கவேண்டும் என்றும் கோரியது. காங்கிரசில் இன்னொரு சாரார் வன்னியில் இருந்து காங்கிரஸ் பிரதிநிதி ஒருவரையே நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் எனக் கோரியது.

ஈபிஆர்எல்எவ் சுரேஷ் அணி இப்பதவிக்கு சுரேஷ் பிரேமசந்திரன் தான் பொருத்தமானவர் என்றும் அவரையே நியமிக்க வேண்டும் எனக் கோரியது. ரெலோவும் தன் பங்கிற்கு உரிமை கோரியது. ஆனால் அதற்கு தெரியும் தனக்கு வாய்ப்பில்லை என்று. ஆனால் சிறீகாந்தா விடவில்லை. தன்னை அப்பதவியில் அமர்த்திக் கொள்வதற்காக அவரும் முயன்று பார்த்தார். ஆனால் கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகளுக்கு இப்பதவி வழங்கப்பட்டுவதற்கு சாத்திய மற்றதாகிவிட்டது.

முன்னதாக இக்கட்சிகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டில் கூட்டமைப்புக்கு கிடைக்கக்கூடிய முதலாவது தேசியப்பட்டியல் ஆசனம் கூட்டணிக்கு தான் என தெளிவாக வரையறுத்திருப்பதாக தெரியவருகின்றது. கூட்டணியின் சாதுரியமான இந்த உடன்பாடு விடயத்தில் ஏனைய கட்சிகள் ஏமாந்து விட்டன என்றே சொல்லலாம். குறுகிய கால அவகாசத்துக்குள் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டதால் இத்தகைய சிக்கலான விடயங்கள் குறித்து ஆராய்ந்து முடிவெடுக்க வாய்ப்பிருக்கவில்லை. இப்போது தான் முழுமையாக ஏமாந்துள்ளதை சில கட்சிகள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன.

கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிக்கு நாடாளுமன்ற தேசியப்பட்டியில் ஆசனம் கிடைக்க வாய்ப்பில்லை என்ற நிலையில் இப்போது கூட்டணியைச் சேர்ந்த போட்டியாளர்களே களத்தில் இருக்கின்றார்கள். ஆனந்த சங்கரி கட்சிக்குள் தனது பிடியை இறுக்கும் நோக்கில் முத்துலிங்கத்தை அப்பதவியில் அமர்த்த படாதபாடு பட்டுக் கொண்டிருக்கின்றார். ஆனால் கூட்டணிக்குள் உள்ள கணிசமானவர்கள் இந்த நியமனத்தை ஆதரிப்பதாகத் தெரியவில்லை.

ஆனந்த சங்கரி ஏற்கனவே முத்துலிங்கம் தான் தேசியப்பட்டியல் உறுப்பினர் என அறிவித்தும் விட்டார். ஆனால் மாவை அணி இதற்கு பலத்த எதிர்ப்பு காட்டி வருகின்றது. சம்பந்தனும் கூட முத்துலிங்கம் தான் தேசியப்பட்டியல் உறுப்பினர் என்ற சங்கரியின் கருத்து அவரது தனிப்பட்ட கருத்தே தவிர கட்சியின் முடிவல்ல என்றும் அக்கட்சியின் செயற்குழுவே கூடி இதனை முடிவெடுக்கும் எனவும் தெரிவித்திருந்தத்ர. சம்பந்தன் தரப்பு முன்வைத்துள்ள துரை ரட்ணசிங்கம் - தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

முத்துலிங்கத்தை நியமிப்பது தொடர்பாக தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடி புலிகளின் ஆதரவைப் பெற ஆனந்த சங்கரி முற்பட்ட போதும் அம்முயற்சியில் அவர் தோல்வி கண்டிருக்கின்றார். ஆனால் புலிகள் தரப்பில் துரைரட்ணசிங்கத்தை நியமிப்பதற்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த இவர் கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்டவர். மாவட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றவர். இவரைத் தெரிவு செய்வதற்குப் புலிகள் ஆதரவு தெரிவித்தமைக்கு சில முக்கியமான காரணங்களுப் சுட்டிக் காட்டப்படுகின்றன.

முத்துலிங்கம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் அந்த மாவட்டத்தின் சார்பில் கூட்டணியில் மூன்று பேரும் கூட்டமைப்பைச் சேர்ந்த மேலும் மூன்றுபேரும் மொத்தம் ஆறு பேர் நாடாளுமன்றத்தில் இருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவான ஏனைய மூன்று உறுப்பினர்களும் கூடத் தமிழர்களே யாவர். வன்னி, மட்டக்களப்பு பகுதிகளிலும் இதே நிலை தான். ஆனால் திருமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நிலை அப்படியல்ல. திருகோணமலை தமிழீழத்தின் தலைநகராகக் கருதப்படுவதோடு அதனைச் சிங்கள குடியேற்றங்கள் மூலம் விழுங்க பலத்த முயற்சிகள் எடுக்கப்பட்டும் வருகின்றது. ஒரு காலத்தில் மூன்று நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்த தமிழர்களுக்கு அங்கே இப்போது இருப்பது ஒரே ஒரு தமிழீழப் பிரதிநிதித்துவம் தான்.

கூட்டணியின் சம்பந்தன் மட்டும் தான் அங்குள்ளார். இந்த வகையில் இம்மாவட்டத்தின் நலனுக்காக தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவியை வழங்குவதே நல்லது என்ற நிலைப்பாடு புலிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. இதனால் துரை ரட்ணசிங்கம் இப்பதவிக்கு நியமிக்கப் படுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

இப்பத்தி எழுதப்படும் போது கூட்டணிச் செயற்குழு கூடவில்லை. இது வெளியாகியிருக்கும்போது இந்தப் பிரச்னைக்கு தீர்வு கிடைத்துவிடும் என்பதோடு யார் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதும் கூட்டணித்தலைவர் யார் என்பதும் வெளியாகியிருக்கும்.

இதேவேளை தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவிக்கான குத்து வெட்டுக்கள் இப்படியிருக்க கூட்டணி தலைமையை யார் கைப்பற்றுவது என்ற விடயத்திலும் கட்சிக்குள் பலத்த முரண்பாடுகள் முளை விட்டிருக்கின்றது. கட்சிக்குள் இந்த விடயம் தொடர்பாக மூன்று அணிகள் காணப் படுகின்றன. தலைமைப் பதவிக்கான முக்கிய வேட்பாளராக இருப்பவர் தற்போதைய சிரேஷ்ட உப தலைவர் ஆனந்த சங்கரி. மாவை சேனாதிராசா, இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோருக்கும் தலைமைப் பதவியில் ஒரு கண் இருந்தே வருகின்றது.

இந்த நிலையில் தான் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயற்குழுக் கூட்டம் ஆனந்த சங்கரி தலைமையில் கொழும்பில் உள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற ஏற்பாடாகியிருக்கின்றது. கடந்த ஞாயிறன்று நடக்கவிருந்தது. பத்திரிகை வெளியாகும்போது கூட்டம் முடிந்திருக்கும். முடிவுகள் தெரிந்திருக்கும்.

ஆனால் முன்னதாகவே இந்தக் கட்சிக் கூட்டத்தைத் தாம் பகிஷ்கரிக்கப்போவதாக மத்தியகுழுவின் சிரேஷ்ட உறுப்பினர் மாவை சேனாதிராஜா அறிவித்திருந்தார். கட்சிக்குள் சங்கரி சர்வாதிகாரப்போக்குடன் நடந்து கொள்வதாகவும் தனக்கு எதிராகவே பொதுத் தேர்தல் காலத்தில் இருந்தே செயற்பட்டு வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியிருக்கின்றார்.

இந்த எதேச்சாதிகாரப் போக்கு குறித்து தான் கட்சிகளின் ஏனைய உயர்மட்டத் தலைவர்களிடம் தெரிவித்திருந்தும் கூட அவர்கள் இது குறித்து தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருவதாலேயே செயற்குழுக்கூட்டத்தைப் புறக்கணிக்கப்போவதாக அவர் தெரிவித்திருக்கின்றார். மாவை இந்தக் கூட்டத்தைப் புறக்கணிப்பதற்கு காரணமே சங்கரி தலைவராகத் தெரிவு செய்யப்படும்போது அதில் தானும் இருக்கக்கூடாதென்பதற்காகத் தான் என சில பிரமுகர்கள் தெரிவித்திருக்கின்றனர்.


கூட்டணியின் தலைமைப் பதவிக்கு போட்டியிடக்கூடிய தகைமை பெற்ற ஒருவராக இரா.சம்பந்தன் இருக்கின்றார். கட்சி நிர்வாகிகளில் மிக மூத்தவராக உள்ள இவரை தலைமைப் பதவிக்கு நியமிப்பதற்கு யாழ்ப்பாண நிர்வாகிகள் சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். தமக்குள் தான் தலைமை இருக்கவேண்டும் என்ற பிரதேச வேறுபாடுகள் கூட இப்போது தலை தூக்கியிருக்கின்றன. சங்கரி தரப்புத் தான் இந்தப் பிரச்னையை பூதாகாரமாக்கியிருக்கின்றது.

ஒரு காலத்தில் பிரதேச வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி அரசியல் நடத்திப் பழக்கப்பட்டுப்போனவர்களுக்கு இன்னும் அந்தப் புத்தி போகவில்லை. விடுதலைப்போராட்டம்,யுத்தம் என்பன சாதிய, பிரதேச வேறுபாடுகளைக் களைந்து

(27ம் பக்கம் பார்க்க)



# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
03.08.1938

உதிர்வு
06.06.2002

## அமரர் உயர்திரு கதிரவேலு திருச்செல்வம்
## (09 ம் வட்டாரம் - புங்குடுதீவு)

எங்கள் குலத்திற்கு
திருவும் செல்வமுமாய்த் திகழ்ந்த
எம் செல்வமே
திருச்செல்வமே!

"அம்மா" என்றழைக்கும்
உன் அன்பான குரல்
கேட்காமல் என்
ஆவி தவிக்கிறது மகனே!

நான் பாலூட்டிச் சீராட்டிப்
பாராட்டி வளர்த்திருக்கக்
காலனவன் பாதியிலே
பறித்தானோ? எனைப்
பரிதவிக்க விட்டானே!

என்னைச் சுற்றிப் பிள்ளைகளெனப்
பூரித்துப் போயிருக்க
பொசுக்கென்று போயினையோ
மகனே. ஆற்றலையே
என் மனது!

போனால் போகட்டும் போடா
எனப் பொறுத்திருக்க முடியவில்லை
தரணியில் தனித்திருக்க
முடியவில்லை

"சுற்றும் வரை பூமி
சுடும் வரை நெருப்பு
போராடும் வரை மனிதன்"
என்ற வாசகத்திற்கிணங்க
போராடிப் போராடியே
மாண்டீர்களே அண்ணா

நல்ல தனையனாய்
அன்பான கணவனாய்
ஆருயிர்ச் சோதரனாய்
பொறுப்புள்ள தந்தையாய்
மாமனாய்ப். பேரனாய்
சிறந்த வழிகாட்டியாய்
வாழ்ந்த வந்த தெய்வமே
வலிக்குதையா உள் மனது!

வாழ்த்தும்! எங்களையே
வானப் பரப்பினின்று!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 9ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்டு தற்போது சுவிட்சலாந்தில் (பேர்ண்) நகரில் வசித்தவருமான கதிரவேலு திருச்செல்வம் அவர்கள் 06.06.2002 அன்று சிவபதமடைந்தார்.

அன்னாரின் அஸ்திகாசி கங்கையில் கரைக்கப்பட்டு 31ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் தமிழகத்தில் நடைபெறுகிறது.

41ம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை சுவிஸில் நடைபெறும். எமது துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் உதவி ஒத்தாசை புரிந்த அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்

தாய்.சகோதரர்கள். மனைவி. மக்கள். மருமக்கள். பேரப்பிள்ளைகள். மைத்துனர்மார். மைத்துனிமார்.

தகவல்: கதிரவேலு செல்லாச்சி (தாயார்)

கதிரவேலு நாகராசா. வில்வரத்தினம் சறோஜா (சகோதரர்கள்) கனடா

***(416) 924 - 3783***

***(905) 294 - 8493***

# தமிழர் தாயகத் தன்னாட்சி: தமிழர்களே எதிரானவர்களா?

சிங்களத் தேசிய வாதத்தை அடக்கி, அவர்களின் விடுதலை உணர்வை முடக்க, ஆங்கிலேயர் பல வழிகளைக் கையாண்டார்கள்.

அராபியர்களையும் முஸ்லீம்களையும் அழைத்து வந்தனர். இலங்கையின் வணிகத்தை அவர்களிடம் கொடுத்தனர்.

தமிழகத்திலிருந்து இலட்சக் கணக்கான தொழிலாளர்களை அழைத்து வந்து மலையகத்தில் குடி அமர்த்தினர்.

துறைமுகத்திலும், மற்ற இடங்களிலும் பணிபுரியக் கேரளத்திலிருந்து மலையாளிகளை அழைத்து வந்தனர்.




அரசு இயந்திரத்தை இயக்க, தமிழீழத் தமிழரை அழைத்து நடுத்தர அலுவலர்களாகப் பணியில் அமர்த்தினர்.

கரையோரச் சிங்களவரையும், கீழ் நாட்டுச் சிங்களவரையும் கிறிஸ்தவர்களாக்கினர். அரசு பணிகளில் அமர்த்தினர்.

1795 முதல் ஆங்கிலேயர் இவ்வாறாகப் பலவழிகளில் தம் மேலாதிக்கத்தை நிலைநாட்ட முயன்றனர். எனினும் சிங்கள -புத்த விடுதலை வேட்கையோ நீறுபூத்த நெருப்பாகவே தொடர்ந்தது.

கண்டியில் முஸ்லீம்களுக்கு எதிராகச் சிங்களவர் முதன் முதலில் குரல் எழுப்பினர். இதுவே 1912-1918 வரை நீடித்த சிங்கள முஸ்லிம் கலவரங்களுக்கு அடிப்படை. ஆங்கிலேய அரசு அடக்கு முறையைப் பயன்படுத்தியது. சிங்களத் தலைமையைச் சிறைகளில் தள்ளியது. அப்பாவிச் சிங்களவர்களைக் கொன்று குவித்தது. எனினும் சிங்களவர் ஓயவில்லை.

அப்பொழுது சிங்கள விடுதலை வேட்கைக்கு ஆதரவாகவும் ஆங்கிலேய அடக்கு முறைக்கு எதிராகவும் குரல் கொடுத்தவர் பொன்னம்பலம் இராமநாதன். முதலாம் உலகப் போரின் அபாயத்தையும் பொருட்படுத்தாமல் கப்பல் வழியாக லண்டன் வரை சென்று ஆங்கில அரசிடம் பேசி சிங்களத் தலைவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டினார் தமிழீழத்தவரான பொன்னம்பலம் இராமநாதன்.

கொழும்பில் மலையாளிகளின் எண்ணிக்கை பெருகுவதைக் கண்ட சிங்களத் தேசியம் அவர்களைக் கொழும்பை விட்டு வெளியேற்றுவதில் 1938-1944 காலத்தில் வெற்றி கண்டது.

மலையகத் தமிழர்கள் சிங்கள வாழ்விடங்களில் அத்துமீறி வாழ்வதாகச் சிங்களத் தேசியம் கருதியது. அதேபோலத் தமிழீழத் தமிழர் நடுத்தர மற்றும் உயர் அரசபதவிகளில் அமர்ந்து கொண்டு ஆங்கிலேய மேலாட்சிக்கு ஆதரவு கொடுத்ததைச் சிங்கள தேசியம் கடுமையாக எதிர்த்தது. ஆங்கில மேலாட்சி நீட்டத்தின் பகடைக் காய்களே மலையகத் தமிழர்களும், சிங்களப் பகுதிகளில் குடியேறிய தமிழீழத் தமிழரும் என்பதை வலிந்து சட்டங்கள் மூலம் உணர்த்த விடுதலை பெற்றதும் சிங்களத் தலைமை கடுமையாக முயன்றது.

1948க்குப் பின் சட்டங்களைக் கொண்டு வந்தது. வன்முறையை ஏவி விட்டது. அடக்கு முறையைத் தமிழர்கள் மீது அவிழ்த்து விட்டது.

இந்தச் சூழ்நிலையில் சிங்கள தேசியத்தின் அடக்கு முறைக்குள்ளான முஸ்லீம்களோ, மலையகத் தமிழரோ முன் வைக்காத ஓர் அரசியல் நிலைப்பாட்டைத் தமிழீழத் தமிழர் முன் வைத்தனர். அதாவது, சிங்களத் தாயகத்தின் சிங்களவர் ஆட்சி. தமிழர் தாயகத்தின் தமிழர் ஆட்சி. இருவரும் விரும்பிக் கொண்டால் இணைப்பதற்குக் கூட்டாட்சி அரசு.

ஆங்கிலேயர் இலங்கையை விட்டுச் செல்லும்போது தமிழர் தாயகத்தையும், சிங்களப் பெரும்பான்மையின் தயவிலும் இரக்க உணர்விலும் வாழுமாறு விட்டுச் சென்றனர். இதைத் தமிழர் ஏற்கவில்லை, சிங்களவரோ புத்திசாலித் தனமாக ஏற்றுக் கொண்டார்கள்.

இந்தப்பின்னணியில் இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தமிழருக்கு தனியான தாயகமில்லை, இலங்கை தீவு முழுவதுமே சிங்களப் பெரும்பான்மை அரசின் கீழ் வாழும் அனைவருக்கும் சொந்தம் என்கிறார்.

இந்தக் கருத்துக்கு சில தமிழர்கள் தொடர்ந்து ஆதரவு கொடுத்து வருகிறார்கள். இத் தமிழர் இதைத் தெரிந்து செய்கிறார்களா? தெரியாமல் செய்கிறார்களா? வரலாற்றின் பெறுபேறாகச் செய்கிறார்களா?

இந்தத் தமிழர்கள் எந்தத் தாயகத்தையும் விரும்பாதவர்கள். சிங்களவர்களுக்குத் தாயகம் வேண்டும் என்ற கொள்கைக்கு இவர்கள் எதிரானவர்கள். எவ்வாறெனில் சிங்களவரின் தாயகமான கொழும்பு, கண்டி போன்ற பெரு நகரங்களில் நிலங்களையும், தோட்டங்களையும் விலைக்கு வாங்குகிறார்கள். நீர்கொழும்பு தொடக்கம் பாணந்துறை வரை வடக்குத் தெற்காகவும், அவிசாவளை வரை மேற்காகவும் அகன்ற பாரிய கொழும்புப் பிரதேசத்தில் அங்கிங்கெனாதபடி எங்கும் குழுக்குழுவாக மாடிவீடுகளிலும், மனைகளிலும் நெருங்கி வாழ்கின்றனர். சிங்களவர் தம் வீடுகளை இவர்களிடம் வாடகைக்கோ, விலைக்கோ கொடுத்து விடுகிறார்கள்.

இத்தகைய திட்டமிடாத, ஆனால் தமிழ் இனச் செறிவுமிகுந்த குடிவரவுகள் சிங்கள தேசியத்திற்கு முன் உள்ள சவால். ஆங்கிலேய மேலாதிக்கத்திலிருந்து



மறவன்புலவு க.சச்சிதானந்தன்

ரணில் விக்கிரமசிங்காதான் இவ்வாறு கூறும் முதல் தலைவரல்ல. சிங்கள-புத்த இன உணர்வை, இனவெறி அரசியல் உணர்வாக மாற்றிய சிங்கள தலைவர்கள் ஒவ்வொருவரும் இந்தக் கருத்தையே கூறி வருகிறார்கள்.

சிங்களவரை விடுவிக்க முயலும் நீறுபூத்த நெருப்பான சிங்கள தேசியவாதத்தை இத் தமிழர்கள் ஊதிவிடுகிறார்கள். இவர்களின் வரவால் சிங்களத் தேசிய வாதம் சிங்கள இன வெறியாக மாறக் கூடிய அபாயம் பெருகி வருவதை அமைதி விரும்பும் சிங்களத் தேசிய வாதிகள் உணர்கிறார்கள்.

தமிழீழத்திற்காகப் போராடுகிறார்கள். தமிழர்களுக்குத் தாயகம் உண்டென்று சொல்கிறார்கள். ஆனால் சிங்களத் தாயகத்தை அவர்கள் மதிப்பதில்லை. சிங்கள மக்களோ தமது நிலங்களைத் தமிழருக்கு விட்டுத் தர மாட்டார்கள்.

கொழும்பிலே தமிழர் மேயராக வேண்டுமென விரும்புகிறார்கள். ஆனால் திருகோணமலையில் 2001 தேர்தலில் சிங்களவர் மட்டுமே தேர்வானதும் கோபங் கொண்டு தமிழ்த் தேசியத்தை முடுக்கி விடுகிறார்கள்.

தமிழர் தாயகத்தில் போட்டியிட்டுத் தேர்தலில் வெற்றி பெறுகிறார்கள். அங்கே தங்குவதில்லை. பெரும்பொழுதைக் கொழும்பிலே கழிக்கிறார்கள். தொகுதித் தமிழ் மக்களோடு உறவாட வேண்டியவர்கள் கொழும்பில் சீவியம் செய்கிறார்கள்.

'தமிழருக்கு தாயகம் வேண்டுமென்றால், அங்கே ஆட்சி வேண்டுமென்றால் அங்கே தங்கி விடுங்கள். சிங்களவர் அமைதியாக வாழவிடுங்கள்'. இவ்வாறாகச் சிங்களத் தேசிய வாதிகள் தமிழரைப் பார்த்துக் கேட்கிறார்கள்.

'சிங்களப் படைகளை தமிழர் தாயகத்திலிருந்து அரசு நீக்காததற்கு நீங்களும் ஒரு காரணம். சிங்களத் தாயகத்திலிருந்து தமிழர் அனைவரும் தமிழர் தாயகத்திற்குப் போய் அங்கு ஆட்சி அமைக்கப் போராடினால், அதில் நியாயமுண்டு. அங்கு படைகள் இல்லாதபோதும் இங்கு பெருமாளவில் இருந்தீர்கள். படைகள் அங்கு போன பின்பும் இருக்கிறீர்கள். உங்களுக்குத் தமிழர் தாயகம் விடுதலை பெறுவதில் அக்கறை இல்லை. சிங்களத் தாயகத்தைச் சுயமாக வாழவிடுவதிலும் அக்கறை இல்லை. தமிழர்களே ஈதென்ன நியாயம்' இவ்வாறு சிங்கள அமைதி விரும்பிகள் கேட்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்கா இந்தக் கருத்தையே புரட்டிப் போடுகிறார். தாயகத் தன்னாட்சிக் கோட்பாட்டுக்குக் கொழும்புத் தமிழர் எதிரானவர்களே! அவர்களே சிங்களத் தேசியவாதம் இனவெறியாக மாற நேரடியாக உதவுகிறார்கள். தமிழீழத்தைத் தமிழர் கைவிடாதிருக்கச் சிங்களவர் தாயகத்தின் தலைநகரை விட்டுத் தமிழீழத் தமிழர் நீங்கவேண்டும். கூழுக்கு ஆசையா, மீசைக்கு ஆசையா?

# பயிற்சியை முடித்து வெளியேறிய 436 போராளிகள்!

(மட்டக்களப்பிலிருந்து இரா. துரைரத்தினம்)

தமிழ் மக்களின் விடுதலைக்காகவே நாம் ஆயுதப்போராட்டத்தை நடத்தினோம். அந்த போராட்டத்தில் நாம் பலமான நிலையில் இருந்து பெற்ற வெற்றிகளால் இன்று ஸ்ரீலங்கா அரசு எம்முடன் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு முன்வந்திருக்கிறது. ஸ்ரீலங்கா பிரதமருடன் எமது தலைவர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்து போர் நிறுத்தம் ஒன்று நடைமுறையில் உள்ள வேளையில் ஆயுதப்பயிற்சி அவசியமா என நீங்கள் கேட்கலாம். நாம் ஆயுதப் போராட்டத்தை நடத்துவதா அல்லது சமாதானவழியில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதா என்பதை தீர்மானிக்க வேண்டியது ஸ்ரீலங்கா அரசுதான், இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும் வரை நாம் பலமான நிலையில் இருக்க வேண்டியது அவசியமாகும் என விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இராணுவ சிறப்புத்தளபதி கேணல் கருணா தெரிவித்தார்.

பழுகாமம் மைதானத்தில் திங்களன்று நடைபெற்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் 52வது பயிற்சி பாசறையின் நிறைவு விழாவில் பயிற்சியை முடித்துக்கொண்ட போராளிகள், பெற்றோர்கள், பொதுமக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

6 மாத கால பயிற்சியை முடித்துக்கொண்ட 436 போராளிகளின் விளையாட்டுப் போட்டிகளும், அணிவகுப்பு நிகழ்ச்சிகளும் பழுகாமம் மைதானத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

கேணல் கருணா தொடர்ந்து உரையாற்றுகையில் எமது இயக்கத்தின் வளர்ச்சிக்கு காரணம் ஒழுக்கமும், தியாக உணர்வும்தான். சிறந்த ஒழுக்கம் மிக்கவர்களாக ஒவ்வொரு போராளியையும் உருவாக்க வேண்டும் என்பதே எமது தேசியத்தலைவரின் இலட்சியமாகும்.

இன்று எமது தலைவரும், ஸ்ரீலங்கா பிரதமரும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை செய்துள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை நூறு நாட்களை கடந்த நிலையில் அமைதி சூழல் ஒன்று நிலவிவருகிறது.

இந்த அமைதி சூழலில் ஏன் பயிற்சி என்று நீங்கள் கேட்கலாம். தமிழீழத்தின் காவலர்களாக விளங்கும் எமது பலத்தை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும்.

நாம் மீண்டும் ஆயுதப்போராட்டத்தை ஆரம்பிப்பதா இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டியது ஸ்ரீலங்கா அரசுதான். நாம் புரிந்துணர்வு உடன் படிக்கையை அதன்மூலம் ஏற்பட்டிருக்கும் அமைதி சூழலை நாம் மதிக்கிறோம். புரிந்துணர்வு உடன் படிக்கையை மீறி நாம் செயற்பட மாட்டோம். எனவே அரசாங்கம் உரியமுறையில் தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்க வேண்டும். தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகள் அங்கீகரிக்கப்படும் போது நாம் ஆயுதப் போராட்டத்தை நடத்த வேண்டிய தேவை ஏற்படாது.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகள் கிடைக்கும் வரை நாம் பலமாக இருக்க வேண்டும். ஜெயசிக்குறு படையணிமீது நாம் நடத்திய தாக்குதல்களிலும், ஆனையிறவு சமரிலும் வன்னிமக்கள் போராட்டத்திற்கு வழங்கிய ஒத்துழைப்புக்களே வெற்றிக்கு காரணமாக அமைந்தது. ஒவ்வொரு பொதுமக்களும் போராட்ட களத்திற்கு வந்து போராடினார்கள் இதில் எல்லைப்படையை சேர்ந்த 300 பேர் வீரச்சாவையும் தழுவிக் கொண்டார்கள்.

இங்குநாம் வீட்டுக்கொரு போராளியை தருமாறுதான் கேட்டோம். புடுவான் கரை மக்கள் அதற்கு ஒத்துழைப்புக்களை தந்தார்கள். ஒருசிலர்தான் ஒத்துழைக்காமல் நழுவிக்கொண்டு விசமத்தனமான பிரசாரங்களை செய்தார்கள். நாங்கள் கட்டாய ஆட்சேர்ப்பு செய்வதாக பொய்பிரசாரம் செய்தார்கள். கட்டாய ஆட்சேர்ப்பு செய்திருந்தால் இந்த பயிற்சி நிறைவு விழாவை கம்பிவேலிகளுக்குள்தான் நடத்தியிருக்க வேண்டும். திறந்த மைதானத்தில் நடத்தியிருக்க முடியாது. பயிற்சி பெற்ற போராளிகள் சுதந்திரமாகவே இருப்பதை நீங்கள் அவதானிக்க முடியும்.

நாம் சலுகைகளுக்காக போராடவில்லை. உரிமைகளுக்காகத்தான் போராடுகிறோம். சலுகைகளை உரிமைகள் என சிலர் தவறாக நினைத்துக்கொள்கிறார்கள். எந்த சலுகைகளையும் கண்டு நாம் மயங்குபவர்கள் அல்ல. நாம் எத்தனையோ தரம் ஏமாற்றப்பட்டிருக்கிறோம். ஒவ்வொரு நகர்விலும் தலைவர் அவதானமாக நடந்து கொண்டதால் எமது இயக்கத்தை எதிரிகளால் வெல்ல முடியாமல் போய்விட்டது.

எமது போராட்டத்தில் 17800 போராளிகளையும், இலட்சக்கணக்கான பொதுமக்களையும் சொத்துக்களையும் இழந்த நிலையில் உரிமைகளை வெல்ல எழுச்சியுடன் இருக்க வேண்டும் என்றார்.

இவ்வைபவத்தில் சிறப்பு அரசியல் பொறுப்பாளர் கரிகாலன், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மகளிர்பிரிவு இராணுவ சிறப்பு தளபதி நிலாவினி, த மட்டக்களப்பு அம்பாறை அரசியல் பொறுப்பாளர் விசு, மகளிர் அரசியல் பிரிவு பொறுப்பாளர் பானுகா, உட்பட தளபதிகள், பிரதேச பொறுப்பாளர்கள், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞ.கிருஷ்ணபிள்ளை என பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

# பேச்சுக்களில் மனித உரிமை விவகாரங்களையும் உள்ளடக்க அரசிடமும் விடுதலைப்புலிகளிடமும் மன்னிப்புச்சபை மூன்று யோசனைகள்

மனித உரிமைகள் விடயத்திலும் இன நெருக்கடிக்குத்தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரையிலும் இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகள் அமைப்பும் வழங்கி வரும் ஒத்துழைப்பை சர்வதேச மன்னிப்புச்சபை வரவேற்றுள்ளது.

மனித உரிமை மீறல் சம்பவங்களைக் குறைப்பதில் யுத்தநிறுத்த உடன்படிக்கை குறிப்பிடத்தக்களவு பங்களிப்பைச் செய்துள்ளது. இருந்தபோதிலும் உரிமைகள் விடயம் சமாதானப் பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலில சேர்த்துக் கொள்ளப்படுவது அவசியமாகும் என்று சர்வதேச மன்னிப்புச்சபையின் சார்பில் இலங்கை வந்துள்ள தூதுக்குழுவின் தலைவர் டிரெக் இவான்ஸ் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையின் தற்போதைய மனிதஉரிமை நிலைவரங்களை நேரில் கண்டறிவதற்காக சர்வதேச மன்னிப்புச்சபையின் தூதுக்குழு இரண்டு வார கால விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது.

வன்னியில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடனும் கொழும்பில் அரச பிரதிநிதிகளுடனும் விரிவான பேச்சுக்களை இக்குழு நடத்தியுள்ளது. இதன் முடிவில் கொழும்பு ஹோட்டல் ரேனுகாவில் சனிக்கிழமை 29ம்திகதி நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவான்ஸ் இதனைத் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த நடைமுறைக்குப் பின்னர் கொலைகள் சித்திரவதைகள் கடத்தல் சம்பவங்கள் எல்லாம் குறைவடைந்துள்ளன. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு அது தொடர்பாக ஆராய்ந்து மேம்படுத்துவது இப்போது அவசியம் என்று தெரிவித்த இவான்ஸ் தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளின் போது மனித உரிமைகள் விடயத்தையும் உள்ளடக்குவதற்காக மூன்று யோசனைகளை அரசாங்கத்திடமும் விடுதலைப்புலிகளிடமும் முன் வைத்திருப்பதாகத் தெரிவித்தார்.

வன்னியில் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் கொழும்பில் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அவர் விளக்கமளிக்கையில் மேலும் கூறியதாவது

வன்னிப் பேச்சுக்கள் எமது விஜயத்தின் வாரத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்செல்வன் உட்பட விடுதலைப்புலிகளின் அமைப்பின் தலைமைப்பீட உறுப்பினர்களைச் சந்திப்பதற்காக வன்னிக்குச் சென்றோம். மனித உரிமைகள் தொடர்பாக தற்போது நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளை மிகவும் சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்திய விடுதலைப்புலிகள் தகவல்களைப் பெற்றுக் கொள்ள வழியேற்படுத்திக் கொடுப்பதிலும் வெளிப்படைத் தன்மையைப் பேணுவதிலும் தமக்குள்ள பற்றுறுதியை வெளிப்படுத்தினார்கள்.

நிதித்துறை மற்றும் பொலிஸ் துறையுடன் சம்பந்தப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பு அதிகாரிகளையும் மன்னிப்பச்சபையின் தூதுக்குழு சந்தித்தது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சிறைச்சாலைகளுக்கும் மன்னிப்புச்சபையின் தூதுக்குழு ஒரு குறுகிய முன்னறிவித்தலுடன் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டது. சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சிலரையும் சந்தித்துப் பேச்சவார்த்தை நடத்திய இத்தூதுக்குழு சிறைச்சாலை நிலைமைகளை மேம்படுத்துவதற்கான சில யோசனைகளையும் முன் வைத்துள்ளது.

புலிகளின் பொலிஸ் நிலையம். அதனைவிட விடுதலைப்புலிகளால் நடாத்தப்படும் பொலிஸ் நிலையங்களையும் மன்னிப்புச்சபையின் தூதுக்குழு நேரில் சென்று பார்வையிட்டிருக்கின்றது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பதினைந்து பொலிஸ்நிலையம் இருக்கின்றன. இந்தப் பொலிஸ் நிலையங்களில் விசாரணைகள் நடத்தப்படும் முறை மற்றும் அங்குள்ள ஆவணங்கள் பொலிசார் பயன்படுத்தும் கருவிகள் போன்றவனவும் மன்னிப்புச்சபையின் பிரதிநிதிகளால் நுணுக்கமாக பரிசீலிக்கப்பட்டன.

புலிகளின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற பேச்சுக்களின் போது சிறுவர்களை படைக்குச் சேர்த்துக் கொள்வது. மரண தண்டனைகள். ஆட்கள் காணாமல் போகும் சம்பவங்கள் எழுந்தமானமாகத் தடுத்து வைத்தல். உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்தவர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களை மீளக்குடியமர்த்துதல் மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட்டது.

## தமிழ்செல்வன்

**பிரச்சனையான நிலைமையிலிருந்து வழமை நிலைமைக்குத் திரும்பும்போது மனித உரிமைகளின் அடிப்படையில் தெளிவான நடைமுறைச் சாத்தியமான நடைமுறை ஒன்று அவசியம் என டிரெக் இவான்ஸ் வாதிடுகின்றார்.**

## உறுதியளிப்பு

சிறுவர்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பான பிரச்சனைக்கு பதிலளித்த தமிழ்ச்செல்வன் 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களைச் சேர்த்துக் கொள்வதில்லை என்பதில் உறுதியாகவுள்ளதாகத் தெரிவித்தார். இது தொடர்பாக மன்னிப்புச்சபைக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பான விபரங்களை மன்னிப்புச்சபையின் பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தார்கள். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

சர்வதேச மன்னிப்புச்சபையின் தூதுக்குழு ஒன்று வன்னிக்குச் சென்று விடுதலைப்புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருப்பது இதுவே முதல் தடவையாகும். மன்னிப்புச்சபை போன்ற சர்வதேச அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதில் விடுதலைப்புலிகள் கொண்டுள்ள அக்கறையை இந்த விஜயத்தின் போது அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

## கொழும்புப் பேச்சுக்கள்

வன்னி விஜயத்தைத தொடர்ந்து கொழும்பில ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பல்வேறு அமைச்சர்களையும் மன்னிப்புச்சபையின் தூதுக்குழு சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் இடம்பெறும் சித்திரவதைகள் மற்றும் பாலியல் வல்லுறவு சமாதான முயற்சிகள் தொடர்பாக இப்பேச்சுக்களின் போது விரிவாக ஆராயப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் மனிதஉரிமை அமைப்புக்கள். பெண்கள் அமைப்புக்கள் போன்றவற்றையும் சந்தித்து இந்தத் தூதுக்குழு பேச்சுக்களை நடத்தியது.

இந்த விஜயத்தின் போது சமாதானப் பேச்சுக்களில் மனித உரிமைகள் விடயத்தை உள்ளடக்குவதையிட்டு தீவிரமாக ஆலோசிக்குமாறு அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் மன்னிப்புச்சபை கேட்டுக் கொண்டிருக்கின்றது. பிரச்சனையான நிலைமையிலிருந்து வழமை நிலைமைக்குத் திரும்பும்போது மனித உரிமைகளின் அடிப்படையில் தெளிவான நடைமுறைச் சாத்தியமான நடைமுறை ஒன்று அவசியம் என டிரெக் இவான்ஸ் வாதிடுகின்றார்.

தாய்லாந்தில் நடைபெறப் போகும் பேச்சுக்களின் போது மனித உரிமைகள் விவகாரத்தில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் அவசியம் என்பதை அரசும் புலிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இரு தரப்பினரும் மன்னிப்புச்சபை முன் வைத்துள்ள மூன்று யோசனைகளில் இத முதலாவதாகும். இதைவிட உரிமை நிலைமைகளைக் கண்காணிப்பதற்கான அமைப்பு முறை ஒன்றை உருவாக்குதல் மற்றும் உரிமை நிலையைக் கண்டறிதல் சமாதானத்துக்கான நடைமுறைகள் என்பனவும் மன்னிப்புச்சபை முன் வைக்கப்பட்ட யோசனைகளாகும்.

மனித உரிமைகளின் தராதரங்களைப் பேணுதல். மற்றும் தடுப்புக்காவல் கைதிகளைப் பராமரித்தல் போன்ற விடயங்களில் பொலிசாருக்குப் பயிற்சியளிப்பது தொடர்பாகவும் விடுதலைப்புலிகளுடன் மன்னிப்புச்சபையினர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். சமாதான முயற்சிகளின் ஒரு உள்ளடக்கமாக உண்மைகளைக் கண்டறிதல் சமாதானமாக ஒத்துப் போதல் என்ற நடைமுறையைத் தேசிய ரீதியில் ஜனாதிபதியும் பிரதமரும் முன்னெடுக்க வேண்டும் என்று மன்னிப்புச்சபை கேட்டுக் கொண்டுள்ளது.

யுத்தநிறுத்தச் சூழ்நிலை காரணமாக மனித உரிமை நிலை முன்னேற்றமடைந்துள்ளது. ஆனால் சமாதான முயற்சிகளில் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் எடுக்கும் வரை இது பாதிக்கப்படக்கூடிய ஒன்றாகவே இருக்கும் எனவும் இவான்ஸ் தெரிவித்தார்.

ஈழநாட்டில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்களும் ஐரோப்பிய மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வெளியாகும் பதிப்புக்களிலும் இடம் பெறும் என்பதையும் ஐரோப்பிய வானொலியில் உடனுக்குடன் இலவசமாக ஒலிபரப்பாகும் என்பதையும் அறியத் தருகின்றோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொடர்பு கொள்ளவும். (905) 653 - 3000 (416) 266 - 9919

WEXFORD CASH MART
FINANCIAL SERVICES
• MONEY TRANSFER (WORLDWIDE) • CHEQUES CASHED
பணமாற்றுச் சேவையில் ஒரு புதிய அலை
தொடர்புகளுக்கு கணேசமூர்த்தி
1823A Lawrence Ave. East, Scarborough, ON M1R 2Y3
TEL: (416) 285-7709 • FAX: (416) 752-1548

கொழும்பு, யாழ் மாவட்டம் முழுவதும் இல்லம் தேடிப் பணம் கொடுக்கின்றோம்.
மற்றும் வன்னி மாவட்டம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், புதுக்குடியிருப்பு மல்லாவிக்கும் எமது சேவை

உங்கள் பணம் உங்கள் உறவினரிடம் உயர்ந்த பெறுமதியில் ஒப்படைக்கப்படும்

• தன்னிகரற்ற சேவை
• நம்பமுடியாத சேவை
• ஒப்பற்ற சேவை
• இணையற்ற சேவை

MONEY ORDER
வசதி உண்டு

WESTERN UNION AGENCY
10 நிமிடத்தில் உலகின் எப்பாகத்திற்கும் பணம் அனுப்பலாம்

தொலைபேசி, மின் அஞ்சல், தொலைநகல் எமக்குத் துணை செய்வதில்லை. காடு, மேடு, கானகம் கடந்த சேவை. போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களில் வாழும் உங்கள் உறவினா் இல்லம் தேடிப் பணம் கொடுக்கின்றோம். பணம் கொடுத்த பின் பதில் பெற்றுத் தருகின்றோம்.

## கொழும்பு றிப்போர்ட்

# விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதில் அரசு ஆர்வம்

**தனஞ்சயன்**

கடந்த ஜனவரி மாதம் பிரதம மந்திரியாகப் பதவியேற்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்க முதற் தடவையாக அண்மையில் பிரிட்டன் உட்பட ஐரோப்பிய நாடுகள் சிலவற்றுக்கு முதற் தடவையாகப் பயணஞ் செய்திருந்தார். இந்த மேற்கு நாடுகளுக்கான விஜயத்தின் போது இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சமாதான முயற்சிகள் பற்றி விளக்கமளிப்பதையும் புனர்நிர்மாணப் பணிகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றுக்கு உதவிகளைப் பெறுவதுமே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முக்கிய நோக்கமாக இருந்தது. இலங்கையில் அண்மையில் நடந்து முடிந்த பதினேழு உள்ளூராட்சி சபைகளுக்கான இரண்டாவது கட்டத் தேர்தல்களிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணிக்கே அமோக வெற்றி கிடைத்திருந்தது.

இதன் மூலம் நாட்டு மக்கள் மீளவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானத் திட்டத்துக்கு தமது பூரண ஆதரவை வழங்கியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இத்தேர்தல் வெற்றியுடனேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தையும் மேற்கொண்டிருந்தார். முன்பு இலங்கைத் தலைவர்கள் வெளிநாடுகளில் பயணங்களை மேற்கொள்ளும் போதெல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான பிரச்சாரங்களையே மேற்கொண்டு அரச தரப்பு நடவடிக்கைகளையே நியாயப்படுத்தி வந்தனர்.

முன்னைய ஆண்டுகளில் பிரிட்டிஷ் அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்ததும் ஜனாதிபதி சந்திரிகா தமது அன்றைய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் ஐரோப்பிய நாடுகள் பலவற்றுக்கும் விரிவான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு பிரிட்டிஷ் அரசு புலிகள் மீது கொண்டு வந்த தடையை வரவேற்று தமது தரப்பின் அணுகுமுறைகளையே நியாயப்படுத்திக் கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார்.

அன்றைய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் ஜனாதிபதி சந்திரிகாவுடன் விடுதலைப் புலிகள் அமைப்புக்கெதிரான பிரச்சாரத்தில் பக்கபலமாக நின்றிருந்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பை இராணுவ ரீதியாக அணுகும் போக்கையே சந்திரிகா அரசு கொண்டிருந்தது. ஆனால் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவரது வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ஆகியோர் இத்தடவை மேற்கத்தேய சுற்றுப்பயணத்தின்போது வெளியிட்ட கருத்துக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பை நிராகரித்துவிட்டதாகவும் சமரச நடவடிக்கைகள் குறித்து நிறையவே நம்பிக்கை யூட்டுவதாகவுமே அமைந்திருந்தன.

எத்தகையதொரு சூழ்நிலையிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது மேற்கத்தைய பயணத்தின்போது சமரச நடவடிக்கைகளைப் பாதிக்கும் கருத்துக்களை வெளியிட்டிருக்கவில்லை.

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ பிரதமருடனான வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தின்போது கருத்து வெளியிடுகையில், அவசியமேற்படின் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இலங்கையில் போடப்பட்டுள்ள தடையை நீக்கவும் எமது அரசு தயங்கப்போவதில்லை எனத் தெரிவித்திருந்தார்.

இத்தடவை சமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகமும் மிகுந்த அக்கறையை வெளிப்படுத்தி வருகின்றது. அத்துடன் இலங்கையின் அரசியல் மற்றும் ஏனைய வேறுபாடுகளுக்கப்பாற்பட்ட விதத்தில் நேர்மையான அரசியல் அணுகுமுறைகளையே இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு முயற்சிகள் தொடர்பாக சர்வதேச சமூகம் எதிர்பார்த்திருக்கின்றது.

இலங்கையில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களின் போதும் வேறு பொதுக் கூட்டங்களின்போதும் மனந்திறந்த நிலையில் சமரச முயற்சிகள் குறித்த நேர்மையான நிலைப்பாடுகளை வெளியிட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தயக்கம் காட்டியிருக்கலாம். ஆனால் கடந்த வாரம் அவர் மேற்கொண்ட மேற்கத்தையே பயணத்தின்போது மனந்திறந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமரச முயற்சிகளில் தமக்கிருக்கும் விருப்பத்தை பிரதமர் ரணில் ஒழிவுமறைவின்றி வெளிப்படுத்தியிருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது மேற்கத்தேய நாடுகளுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு கடந்த சனிக்கிழமை நாடு திரும்பிய நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கையாக தாய்லாந்தில் இடம் பெறும் அரசியல் பேச்சுவார்த்தைகள் பற்றியே கவனஞ் செலுத்தப்படும் என எதிர்பார்க்கமுடிகின்றது. ரணில் அரசாங்கத்தின் பேச்சாளரான அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கருத்து வெளியிடுகையில் தாய்லாந்துப் பேச்சுக்கள் ஜூன் மாதம் ஆரம்பமாகுமெனவும் அரச தரப்பில் நான்கு பிரதிநிதிகள் பங்கு பற்றுவார்கள் எனவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை பேச்சுவார்த்தைகளுக்கு முன்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை பெரும்பாலும் இலங்கை அரசினால் நீக்கப்படுமென்றே ஊகிக்க முடிகின்றது.

பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கான அடிப்படை நிபந்தனையாகவே தம்மீதான தடை நீக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் முன் வைத்துள்ளனர்.

எனவே இக்கோரிக்கைக்கு இணங்குவதன் மூலமே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியமென்பதை இலங்கையின் அரசாங்க வட்டாரங்கள் உணர்ந்து கொண்டுள்ளன.

இதுதவிர இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ், இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரச்னை குறித்து அடிக்கடி தமது கருத்துக்களை வெளியிடும் வழக்கத்தைக் கொண்டுள்ளார்.

திரு.ஆஷ்லி வில்ஸின் கருத்துக்கள் பெரும்பாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை எச்சரிக்கும் விதத்தில் அமைந்திருப்பதையே அவதானிக்கமுடியும். எனவே புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்தைக் கூட தற்போதைய அரசியல் சூழ்நிலையில் அமெரிக்காவின் அநாவசியத் தலையீடாகவே கருதமுடிகின்றது.

இதேவேளை இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையே எதிர்வரும் ஜூலையில் செய்து கொள்ளப்படவுள்ள ஒப்பந்தம் பற்றிய சமாச்சாரம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இப்புதிய அமெரிக்க - இலங்கை ஒப்பந்தம் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவர் இந்த உடன்படிக்கை எவ்விதத்திலும் இலங்கையின் உள்விவகாரத்தில் தலையிடும் நோக்கத்தைக் கொண்டதல்ல என்று தெரிவித்துள்ளார்.

இலங்கைத்துறைமுகத்திலும் விமான நிலையங்களிலும் தரித்துச் செல்லும் விமானங்கள், கப்பல்களுக்கு எரிபொருள் வழங்குதல், பராமரித்தல் என்பற்றின் அடிப்படையிலேயே இந்த ஒப்பந்தம் தயாராகியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதிலும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நிலை கொண்டுள்ள நிலையில் இலங்கையையும் தனது வல்லரசுக் கெடுபிடிக்குள் அமெரிக்கா வலிந்து இழுத்துக் கொள்ளுமோ என்ற வினாவை எழுப்புவதாகவே புதிய ஒப்பந்தச் சமாச்சாரமும் இருக்கின்றது.

அண்மைக்காலங்களில் பல தடவைகள் அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து போயின.

தென்னாசியாவில் தற்போது ஒரு பதற்றம் நிறைந்த தன்மையே காணப்படுகின்றது. ஆப்கானிஸ்தானில் ஒசமா பின் லேடனைத் தேடும் யுத்தத்தில் அமெரிக்கா இறங்கியுள்ளது. இதேவேளை இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்றையொன்று எதிர்த்தவையாக யுத்தத்துக்கு தயாராகி வருகின்றன. நேபாளத்தில் உள்ளூர் கிளர்ச்சியாளர்களான மாவோ கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்களை நேபாள அரசுக்கு எதிராக மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் இலங்கையில் இருபது வருடகாலமாக இடம் பெற்று வந்த யுத்தம் ஓய்ந்து ஓர் அமைதிச் சூழல் படிப்படியாக விரிவடைந்து வருகின்றது.

இந்த நற்சூழலில் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும் ரணில் அரசுக்குமிடையிலான புரிந்துணர்வு மேலும் விரிவடைய வேண்டுமென்பதே இலங்கையில் அனைவரது எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோருக்கிடையே கைச்சத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேலும் காத்திரமடையுமென்றே எதிர்பார்க்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அமெரிக்கா இலங்கையுடன் செய்து கொள்ள எத்தனிக்கும் பாதுகாப்பு ஒப்பந்தம் பல்வேறு தப்பெண்ணங்களுக்கும் சந்தேகங்களுக்கும் வழியமைத்ததாகவே இருக்கின்றது.

ஏற்கனவே இலங்கையின் ஆட்சியாளர்களுக்குச் சார்பாக வடக்கு - கிழக்கு விவகாரத்தில் தனது அபிப்பிராயங்களை வெளியிட்டு வரும் அமெரிக்கா புதிய பாதுகாப்பு ஒப்பந்தம் மூலம் கூடுதல் தலையீட்டை இலங்கை விவகாரத்தில் கொண்டிருக்குமோவென்பதே சமாதான விரும்பிகளின் அச்சமாகின்றது.

## மூன்று அணியாகி விட்ட கூட்டணி

(13ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கேயோ போய் விட்ட நிலையிலும் தமது அற்புமதான பதவிச்சுகங்களை அனுபவிப்பதற்காக இந்த வேறுபாடுகளை மீண்டும் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது வேதனைக்குரியதாகும்.

எவ்வாறாயினும் தமிழர் விடுதலைக் கூட்டணியோ இன்று தனிப்பட்ட கொளகைகள். நோக்குகளுக்காக செயற்படுகின்ற நிலையில் இல்லை என்ற நிலைக்கு வந்திருக்கின்றது. விடுதலைப்புலிகளின் தலைமையை ஏற்றுக் கொண்டு செயற்படும் இவர்கள் தமக்கென்று ஆதரவுப் புலத்தைத் தேடிக் கொள்வதற்காக குறுகிய வட்டத்திற்குள் செயற்படுவதும் அதற்காக தகுதியை விட்டு நெருக்கமானவர்களுக்கு பதவிகளை வழங்குவதும் எந்த வகையிலும் நியாயப்படுத்தக் கூடியவை அல்ல.

சங்கரியின் ஆதரவைப் பலப்படுத்திய ஒரே நோக்கத்திற்காக பொறுப்புமிக்க யாழ்.மாநகர மேயர் பதவியில் அமர்த்தப்பட்டுள்ள செ.கந்தையனின் செயற்பாடுகளால் நிர்வாகம் மோசமடைந்திருப்பதும் அபிவிருத்தியின்றியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதைக் கூட்டணியில் தலைவர்கள் கூட ஏற்றுக் கொள்ளுகின்ற போதும் அவர்கள் யாரும் இதற்கு எதிராகக் குரல் கொடுக்காதிருக்கின்றனர். இது போன்ற காரியங்கள் தான் மாவையை வெறுப்பேற்றியிருக்க வேண்டும்.

கூட்டணிக்குள் ஏற்பட்டிருக்கின்ற இந்தக் குத்துவெட்டுக்களை பிளவு என்ற விமர்சனத்துடன் பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டாது எனத் தெரிவித்த தந்தை செல்வாவின் வழி வந்த தமிழர் விடுதலைக்கூட்டணிக்குள்ளேயே பச்சை மண்ணும் சுட்டமண்ணும் தோன்றி விட்டதாக விமர்சிப்பதை நிராகரிக்க முடியவில்லை.

இது தமிழரின் தேசிய உரிமைப் போராட்டத்தை அகிம்சை வழியில் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்களின் எதிர்பார்ப்புக்கு ஆப்பு வைத்து விட்டது எனலாம்.

## மூன்று பெண்களை ஒரே நேரத்தில்....

(9ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துக் கொண்டு இலங்கையின் சமாதானத்திற்கு ஆதரவையும் வழங்கிக் கொண்டு இந்திய மத்திய அரசு பிரபாகரனை பாதுகாக்கின்றது என்று குற்றம் சுமத்திக் கொண்டு அதன் மூலம் மக்களின் ஆதரவைப் பெற்று அரசியலில் செல்வாக்கைப் பெறுவதே சோனியாவின் வியூகமாகும்.

இது விடயத்திலும் இலங்கை அரசாங்கம் சோனியாவுடன் தனித்துக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் உரிமையை இந்திய அரசாங்கம் அனுமதித்து விட்டது. ஆகவே பிரதமர் இந்தியாவிற்கு பயணத்தை மேற்கொள்ளும் அனைத்துச் சந்தர்ப்ப ங்களிலும் சோனியாகாந்தியை சந்திப்பதை "மிஸ்" செய்ய மாட்டார். தானும் ராஜீவ்காந்தியின் வழியையே பின்பற்றுகின்றேன். தீர்விற்காக இடைக்கால சபையை மட்டுமல்ல திருகோணமலை எண்ணெய் குதங்களையும் இந்தியாவிற்கு வழங்கி ராஜீவின் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்துகின்றேன் என்பதை சோனியாவிற்க விளங்கப்படுத்தினார்.

இந்திய இலங்கை ஒப்பந்தம் அமுல்படுத்தப்படுவதென்பது சோனியாவுக்கு கிடைத்த வெற்றியாகும். அவர் இன்று இதைப் புரிந்து கொண்டுள்ளார். இரண்டாவதாக பிரபாகரனை கைது செய்வதென்பது சட்டத்தின் வேலை. அரசியல் சர்வதேச விடயங்களில் இதனை பிரச்சனையாக கண்டு கொள்ளக்கூடாது எனும் நிலைப்பாட்டையும் இன்று சோனியா ரணில் மூலம் மிகத் தெளிவாக விளங்கிக் கொண்டுள்ளார்.

இனப்பிரச்சனையின் தீர்வுக்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் மூன்று அரசியல் பெண் தலைவிகளையும் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் அனுசரித்து சாந்தப்படுத்தி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதென்பது ஒன்றும் இலகுவான காரியமல்ல.

– பண்டிதர்

ஈழநாடுதொடர்புகளுக்கு
(905) 653 - 3000
(416) 266 -9919

# ஜீ.ஜீ.யில் நம்பிக்கை இழந்து பிரிந்து சென்ற எஸ்.ஜே.வி

**ஈழவேந்தன்**



ஜீ.ஜீ.பொன்னம்பலத்திடம் தலைமைக்குரிய அனைத்துப் பண்புகளும் இருந்தன. ஆனால் மருந்தளவும் அவரிடம் நேர்மை (*Tincture of Honestry*) இல்லாததினால் அவரிடம் இருந்து நான் பிரிய நேரிட்டது என்று தந்தை செல்வா கவலையுடன் கூறியது எனக்கு நினைவுக்கு வருகிறது.

**நிலம் என்பது ஓர் இனம் தன்னைத் தானே உணர்த்துவதற்கு மட்டுமல்ல தன் உயிர் உடலோடு ஒட்டி வாழ்வதற்கு இன்றியமையாதது. நாம் எதனையும் இழக்கலாம். மீண்டும் வாழ்வு பெறலாம். ஆனால் ஓர் இனம் தன் மண்ணை தன் தாயகத்தை இழந்து விட்டால் வேறுந்த சமுதாயமாக மாறிவிடும். இன்றைய ஈழத்தமிழனின் நிலையும் அது தான். நாளை சிங்கள அரசுகள் மொழி உட்பட பல உரிமைகளைத் தரக்கூடும். ஆனால் நில உரிமையைத் தர மறுப்பின் விவிலியத்தில் கூறியதற்கமைய எம் ஆன்மாவை இழந்து உலகைப் பெற்று என்ன பயன்?**

"பொன்னம்பலத்தை விட நான் இரண்டு வயது மூத்தவன். எனினும் அவரது தலைமையை நான் ஏற்றேன். ஆனால் அவர் தனது கொள்கையில் இருந்து தடம் புரண்டதைக் கண்ட போது அவருடன் நான் கூடி வாழ முடியவில்லை" என்று மேலும் தந்தை செல்வா தெரிவித்திருந்தார்.

## இந்திய விடுதலை பற்றி பெரியார்

## இலங்கை விடுதலை பற்றி பொன்னா

இந்திய துணைக்கண்டத்துக்கு 1947 ஒகஸ்ட் 15 இல் விடுதலை கிடைத்ததாகச் சொல்லப்பட்டது. இலங்கைக்கு 1948 பெப்ரவரி 4இல் விடுதலை கிடைத்ததாகச் சொல்லப்பட்டது. இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்த போது "இப்போது வெள்ளையன் வெளியேறி விட்டர். இனிமேல் வடஇந்தியன் ஆட்சிக்க வர இருக்கிறான்.

"ஆபத்துக்கள் சூழ இருக்கின்றன. எனவே சுதந்திரநாளை துக்க நாளாகக் கொண்டாடுவோம்" என பெருமுழுக்கம் செய்தார் பெரியார்.

ஆனால் பல தியாகங்களைச் செய்து பெறப்பட்ட இந்திய விடுதலையை குறைத்து நாம் மதிப்பிடக்கூடாது. எனவே இந்திய விடுதலையை வரவேற்போம். தமிழர் விடுதலைக்காகத் தொடர்ந்து போராடுவோம் எனக் கூறினார் அண்ணா.

இன்று இந்தியாவில் தமிழர்களுக்கு நடப்பவற்றைப் பார்க்கும் போது ஆவது அறிந்த அறிவாளியாக - தீர்க்கதரிசியாக பெரியர் விளங்கியதை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. மாறாக அறிஞர் அண்ணாவின் பெருந்தன்மை எமது அழிவிற்கே வழி வகுத்துள்ளதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. பெரும் மனத்தால் கெட்ட பேயன் தமிழன் என்று காசிஆனந்தன் அன்று கூறிய கூற்று இன்று மெய்யாவதைக் காண்கின்றோம். இது போன்றே இலங்கையிலும் வெள்ளையன் வெளியேற சிங்களவர் ஆட்சிக்கு வந்த போது அன்று இனஉணர்வோடு வாழ்ந்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் "வெள்ளையன் ஆட்சி வெளியேற அவனுக்குப் பதில் கறுப்பன் ஆட்சி தலைதூக்கியுள்ளது. ஆபத்துக்கள் பல சூழ இருக்கின்றன"என்று அவர் அன்று எச்சரித்தது இன்று மெய்யாகி விட்ட கூற்றாக விளங்குகின்றது.

## ஜின்னாவின் தொலை நோக்கு

இந்தியா விடுதலைக்குப் போராடிய பொழுது முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு இல்லை எனக் கூறியவர் ஜின்னா. நாடு பிரிய வேண்டும் என அவர் குரல் கொடுத்தார். ஈழத்தமிழர்கள் எவருக்கும் இல்லாத தீர்க்க தரிசன உணர்வோடு ஜின்னா இருந்தார். வெள்ளையன் வெளியேற முனைந்த போது அவனைக் கட்டியணைக்க முனையாது *"Quit india alright but divide and zuit india* என்றார். அதாவது "வெள்ளையனே வெளியேறு ஆனால் நாட்டைப் பிரித்த பின்பு வெளியேறு" என்ற அவர் தொலைநோக்கோடு கூறிய உள்ளம்எம் தலைவர்களிடம் இல்லாததால் நாம் இன்றைய அழிவு நிலைக்கு ஆளாகியுள்ளோம்.

மற்றும் காந்தியும் நேருவும் பெருமக்கள். அவர்களிடம் குறுகிய மனப்பான்மை இல்லை. அவர்கள் அனைத்து இந்திய அடிப்படையில் சிந்திக்கிறார்கள். அப்படிபட்ட தலைவர்களிடம் இருந்து ஏன் நாட்டைப் பிரிக்க விரும்புகின்றீர்கள் என்ற ஜின்னாவிடம் ஒரு செய்தியாளர் கேட்டார்.

"காந்தியும் நேருவும் பெருமக்கள் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அவர்கள் சாகாவரம் பெற்றவர்களா? சாகும் நிலையிலுள்ள எந்தத் தலைவரிடமும் சாகாது நிலைத்து நிற்க வேண்டிய என் சமுதாயத்தினை ஒப்படைக்க நான் தயாரில்லை" என்று அவர் கூறியது இன்று ஆழ்ந்து சிந்திக்கத் தக்க பொருள் பொதிந்த கூற்றாகவே விளங்குகின்றது.

## கட்சிகள் மாறினாலும் சிங்களமே ஆட்சியில்

1948 இல் டி.எஸ். சேனநாயக்கா நாட்டின் முதல் தலைமை அமைச்சராகப் பதவியேற்றார். அவரை அடுத்து அவரின் மகன் டட்லி சேனநாயக்கா, சேர்.ஜோன்.கொத்தலாவலை, எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா தஹநாயக்கா, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, பிரேமதாசா, சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க போன்றோர் சிங்களத் தலைமைப்பீடத்தை ஏற்றுள்ளனர். காலத்திற்குக் காலம் சிங்களக் கட்சிகள் மாறின. தலைமைப்பீடம் மாறியது. வேறு சொற்களில் விளம்பின் ஆளும் கட்சிகள் மாறிய போதும், ஆளும் தலைவர்கள் மாறிய போதும் ஆளும் இனமாக சிங்கள இனமும். ஆளப்படும் இனமாக தமிழ் இனமும் தொடர்ந்து இருக்கின்ற வரையில் நோய் தொடர்வதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.



எனவே தான் வள்ளுவன் கூற்றின்படி "நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்பதற்கமைய நோயின் மூல காரணமாக விளங்குவது ஆளும் இனமாகச் சிங்கள இனமும் ஆளப்படும் இனமாக தமிழினமும் இருப்பதே. எனவே நோயின் மூல காரணத்தை அறிந்த நம் சிந்தனைச்சிற்பி சி.கதிரவேற்பிள்ளை கூறிய தற்கமைய : தமிழ் வாழ வேண்டின் தமிழன் தன்னைத்தான் ஆள வேண்டும் எனும் தலையாய மறைமொழியைத் தாரக மந்திரத்தில் ஏற்றி தமிழினம் தமிழனை வாழ்விக்க முயல்வோமாக.

**"காந்தியும் நேருவும் பெருமக்கள் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அவர்கள் சாகாவரம் பெற்றவர்களா? சாகும் நிலையிலுள்ள எந்தத் தலைவரிடமும் சாகாது நிலைத்து நிற்க வேண்டிய என் சமுதாயத்தினை ஒப்படைக்க நான் தயாரில்லை" என்று கூறிய ஜின்னா**

## முதற்கோணல் முற்றும் கோணல்

1948 இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி "முதற்கோணல் முற்றும் கோணல்" என்பதற்கமைய தமிழனின் குடியுரிமையைப் பறிந்ததோடு இந்திய வம்சாவளித் தமிழ்இன மக்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் பறித்து அவர்களை இரவோடு இரவாக அரசியல் அனாதைகளாக்கியது. அத்தோடு நின்று விடாது ஈழத்தமிழ் மக்களின் மரபு வழித் தாயகத்தையும் அரசின் ஆதரவோடு திட்டமிட்டுப் பறிக்க வித்திட்டவர் டி.எஸ்.சேனநாயக்கா என்பதை நடுநிலை வரலாற்று ஆசிரியர்கள் நவின்று சென்றுள்ளனர்.

*Land is not only necessary for the self expression - of an ethnic group, but also for its physical security* நிலம் என்பது ஓர் இனம் தன்னைத் தானே உணர்த்துவதற்கு மட்டுமல்ல தன் உயிர் உடலோடு ஒட்டி வாழ்வதற்கு இன்றியமையாதது. நாம் எதனையும் இழக்கலாம். மீண்டும் வாழ்வு பெறலாம். ஆனால் ஓர் இனம் தன் மண்ணை தன் தாயகத்தை இழந்து விட்டால் வேறுந்த சமுதாயமாக மாறிவிடும்.

இன்றைய ஈழத்தமிழனின் நிலையும் அது தான். நாளை சிங்கள அரசுகள் மொழி உட்பட பல உரிமைகளைத் தரக்கூடும். ஆனால் நில உரிமையைத் தர மறுப்பின் விவிலியத்தில் கூறியதற்கமைய எம் ஆன்மாவை இழந்து உலகைப் பெற்று என்ன பயன்? இதை விவிலியம் *What is the use of gaining the world and losing the soul* என்று கூறுகிறது.

(வளரும்)

ஈழநாடு
தொடர்புகளுக்கு
(905) 653 - 3000
(416) 266 - 9919

# MILLENNIUM LEISURE TRAVELS INC.




ஆசியா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா, வட-தென்-மத்திய அமெரிக்க நாடுகளிற்குக் குறைந்த விலையில் சிறந்த சேவையுடன் உங்கள் பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எந்த ஐரோப்பிய நாட்டிற்கும் விமானச்சீட்டு முதல் EuroRail Pass, Rental Car வரையில் சிறந்த விலையில் வசதிசெய்து தரப்படும்

இலங்கையிலிருந்து கனடாவிற்கு மட்டுமல்ல, வேறு எந்த நாடுகளிற்கும் பிரயாண ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்படும்



**Florida, Cuba, Carribean**
நாடுகளுக்குக் குடும்பத்துடனோ தனியாகவோ விடுமுறையைக் கழிக்க விரும்புகிறீர்களா?
நியாயமான விலையில் Package வசதிகள்,
Car Rentals, Cruise வசதிகளும்
அத்துடன் Disney World Tickets
அமெரிக்க டொலர் பெறுமதியைக் கனேடியன் டொலரில் எம்மிடம் பெறலாம்

நாள்தோறும் எத்தனையோ விளம்பரங்களைப் பார்க்கிறீர்கள். எங்களுடன் ஒருமுறை தொடர்புகொண்டு உங்கள் பயணத்தைத் தொடங்குங்கள்.

விலையிலும் தரத்திலும் சேவையிலும் நீங்கள் மிகப்பெரிய வித்தியாசத்தை உணர்வீர்கள்

பலவருட அனுபவம் கொண்ட எங்கள் பிரதிநிதிகளை உடனே தொடர்பு கொள்ளுங்கள்

**108 Corporate Drive, Suite 8, Scarborough, ON M1H 3H9**
**TEL: (416) 431-9100 FAX: (416) 431-5722**

---

THE CRISPY MOISTURIZED CHICKEN BY

CHESTER FRIED

AVAILABLE AT
**PHALAPPASS**
TAKE-OUT & CATERING
416-614-9669

1635 LAWRENCE AVE. W,
UNIT # 5
NORTH YORK, ONTARIO

CHICKEN TO GO
416 248-5999

நோர்த்யோக் நகரில் உன்னதமான உணவுகளுக்கு **பாலப்பாஸ்.**
ஈழத்தின் சுவைகாண, உணவுகளின் தரம் காண இன்றே நாடுங்கள் **பாலப்பாஸ்.**

உங்களுக்குத் தேவையான அன்றாட உணவுவகைகள், சிற்றுண்டி வகைகள் என நாவிற்கு ருசியான உணவுகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளத் தயாராகுங்கள்

# பாலப்பாஸ்

வெள்ளிக்கிழமை விரதச் சாப்பாடு (5 மரக்கறி, பாயாசம், அப்பளம், மோர்மிளகாயுடன்) — FRIDAY SPECIAL $ 4.99

பிரைட் பிஷ் - Fried Fish ............ $ 1.99

மாதாந்தச் சாப்பாடு SPECIAL - $ 299

100 இடியப்பம் சொதி சம்பலுடன் $ 10.00

சனி, ஞாயிறு தினங்களில் நாவுக்கு ருசியூட்டும் கடலுணவுக்கூழ்

குறிப்பிட்ட பகுதிகளுக்கு $25க்கு மேற்பட்ட ஓடர்கள் நேரடி விநியோகம்
Lawrence/Bathurst முதல் Weston/Lawrence வரையான பகுதிகளுக்கு நேரடி விநியோகம்

சிங்கப்பூர் நூடில்ஸ் பாலப்பாஸ் ஸ்பெஷல் கடலுணவு $ 5.99

NORTH YORK தமிழ் மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் திருமண விழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் உட்பட சகல மங்களகரமான நிகழ்ச்சிகளையும் ஒரே கூரையின் கீழ் ஒழுங்கு செய்து உங்களின் எண்ணங்களை நிறைவேற்றத் தயாராகி விட்டோம்.

**பாலப்பாஸ்**
பார்ட்டி சேர்விஸ் அன்ட் கேற்றரிங்

**PHALAPPASS**
1635 LAWRENCE AVE. W,
UNIT # 5
NORTH YORK, ONTARIO

(416) 614-9669
(416) 248-5999

VAANIPA VASANTHAM

www.ctcc.ca

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம்
CANADIAN TAMILS' CHAMBER OF COMMERCE

# வாணிப வசந்தம்

TRADE SHOW வர்த்தக கண்காட்சி

# 2002

## ஜூலை 13, 14

சனி, ஞாயிறு
இரு தினங்களும்

SATURDAY 13th 12:00 p.m. - 9:00 p.m.

JULY

SUNDAY 14th 11:00 a.m. - 8:00 p.m.

- கலை நிகழ்ச்சிகள்
- இன்னிசை நிகழ்ச்சிகள்
- மலிவு விற்பனைகள்
- புதிய அறிமுகங்கள்
- வேலை வாய்ப்பு (Job Fair)

**National Trade Centre**
**Hall "A"**
*At The Exhibition Place*
Toronto

கண்காட்சிச்சாலை பதிவுகளுக்கும்
மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு

*For Stall Reservations and Further Information Call:*

சம்மேளனம் /Chamber: (416) 335-9791
மதி /Mathy: (416) 410-2946
குலா /Kula: (416) 984-4938

# 33

# இரத்தத்தின் தீவு

## தமிழர்கள், இந்தியர்கள் மீது வெறுப்பைத் திரட்டி வைத்திருந்த அதிரடிப்படை!

**அனிதா பிரதாப்**

சமாதானம் மீண்டும் நழுவியதால் மனமுடைந்திருந்த மக்கள் அசைவற்ற பாம்பு திருட்டுத்தனமாக காத்திருப்பது போல் அது காணப்பட்டது. பசும்தரைகளும் நன்றாக வளர்ந்திருந்த புதர்களும் மரங்களுமாக அப்பகுதி காட்சியளித்தது. அப்பகுதி முழுவதுமே கைவிடப்பட்டதாக இருந்த அதேசமயம் மயான அமைதி நிலவியது. நாம் கால் கி.மீ.தூரம் தான் வந்திருப்போம். திடீரென வீதியின் குறுக்கால் மெல்லிய வயர் ஒன்று போடப்பட்டிருந்ததை அவதானித்தேன். உடனே காரை நிறுத்துமாறு சாரதிக்கு கட்டளையிட்டேன். அவர் சடுதியாக நிறுத்தினார். நாம் ஒரு 15 நிமிடங்கள் பதற்றத்துடன் காருக்குள் காத்திருந்தோம். பின்னர் 15மீற்றர் தூரத்தில் சத்தமொன்று கேட்டது. சீருடையணிந்த ஒருவர் வந்தார். தோளில் ஏ.கே. 47 காணப்பட்டது. யார் நீங்கள்? ஏன் இங்கே நிற்கிறீர்கள்? என்று தமிழில் கேட்டார்.

காரிலிருந்து வெளியே பாய்ந்து இறங்கினேன். அங்கேயே நில்லுங்கள் நகர வேண்டாம் என்று அவர் சத்தமிட்டார்.

'எனது பெயர் அனிதா பிரதாப். நான் ஒரு பத்திரிகையாளர். எனது புகைப்படப் பிடிப்பாளரும் என்னுடனிருக்கின்றார். மட்டக்களப்புக்கு சென்று அங்கிருந்து செய்தி சேகரிக்க விரும்புகின்றோம்'' என்று நானும் பதிலுக்குத் திரும்பச் சத்தமிட்டேன்.

'உங்கள் பெயர் என்னவென்று சொன்னீர்கள்? அதைத்திரும்பச் சொல்லுங்கள்' என்று அவர் கத்தினார். அனிதா பிரதாப். இலங்கைத் தமிழ்ப்பிரச்னை தொடர்பாக நீண்டகாலமாக செய்திகளை எழுதி வருகின்றேன்.

எமது தலைவர் பிரபாகரனை பேட்டி கண்டவர்களில் நீங்களும் ஒருவரா?-

ஆம்,ஆம். அது நான் தான். பிரபாகரனைப் பலமுறை பேட்டி கண்டுள்ளேன் என்றேன். எனக்கு பரபரப்பாகவும் அதேசமயம் மட்டக்களப்புக்குச் செல்ல அனுமதிப்பார்கள் என்ற நம்பிக்கையும் இருந்தது.

'நகரவேண்டாம்' என்று கட்டளையிட்ட அவர் தனது சகாக்களுக்கு ஏதோ சொன்னார். ஆனால் அவர்கள் ஒருவரையும் அருகாமையில் காணவில்லை.

சடுதியாக புதர்களும் மரங்களும் அசைந்தன. அப்பகுதியில் சுமார் 50 கெரில்லாக்கள் தவழ்ந்தபடி காணப்பட்டனர்.

தரையிலிருந்தும் புதர்களுக்கிடையிலிருந்தும் மரங்களிலிருந்தும் தவழ்ந்தும் பதுங்கியும் குதித்தும் வந்தனர்.

என்னைப் பார்த்துச் சத்தமிட்ட அந்தக் குழுவின் தலைவர் பின்னர் எம்மை நோக்கி மெதுவாக முன்னுக்கு வந்தார். வீதியைத் தவிர்த்து புல்தரைப்பக்கமாகவே நடந்து வந்தார். என்னிலிருந்து சுமார் 10 அடி தூரத்தில் நின்றார். என்னை நன்றாக அவதானித்த பின் குனிந்து கம்பி வளையத்தின் ஒரு நுனியைப் பிடித்துத் தூக்கினார்.. பின்னர் வீதியின் குறுக்காகச் சென்று நீளமாகப் போடப்பட்டுக் கிடந்த கம்பிச் சுருளை அகற்றினார். இந்த வீதியில் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. நீங்கள் காரை நிறுத்தியிராவிடின் கார் வெடித்துச் சிதறியிருக்கும் என்று அவர் சொன்னார்.

இலங்கை இராணுவ வாகனங்கள் இதில் சிக்கி வெடிக்கும் என்றே நாம் எதிர்பார்த்தோம். இந்த வீதியில் பொதுமக்களின் வாகனங்கள் செல்வதில்லை. கொஞ்ச நேரம் பொறுத்திருங்கள். வீதியின் முன்புறத்திலும் நான் கண்ணிகளை அகற்ற வேண்டியுள்ளது.

இலங்கையில் அடுத்ததொரு மயிரிழை ஆபத்திலிருந்து தப்பினோம். வேறு எந்தப் பிரச்னையுமின்றி மட்டக்களப்பு நகரை அடைந்தோம். அங்கு யுத்தத்தை மீண்டும் ஆரம்பித்தது தொடர்பாக யாவருமே புலிகளைக் குற்றம் சாட்டினர். தமிழ் தையல்காரர் ஒருவருக்கும் சிங்களப் பெண் ஒருவருக்கும் இடையேயான சண்டையைப் பயன்படுத்தி அரசுடனான மோதலாக அதனை உருவாக்கி விட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. மக்கள் மனமுடைந்திருந்தனர். ஏனெனில் சமாதானம் மீண்டும் நழுவிப் போயிருந்தது.

ஜோசப் பரராஜசிங்கம் என்ற தமிழ் வர்த்தகருக்கு சொந்தமான விடுதியில் நான் தங்கியிருந்தேன். வருடங்கள் கழித்து அவர் முன்னணி பாராளுமன்ற உறுப்பினரானார். சில தினங்கள் செய்தி சேகரித்த பின் நானும் டக்கும் கொழும்புதிரும்ப ஆயத்தமானோம். நாங்கள் திரும்புவதற்கு முதல்நாள் இரவு பரராஜசிங்கம் உதவியொன்று கேட்டார். தனது மகன் சுபஜித்துக்கு கொழும்பு செல்வதற்கு வாகனத்தில் இடம் கொடுக்க முடியுமா என்று அவர் கேட்டார்.

20 வயதுடைய அவருடைய மகன் அமெரிக்காவில் படித்துக் கொண்டிருந்தார். யுத்த நிறுத்தம் ஏற்பட்டதை அனுகூலமாக்கி விடுமுறைக்காக இலங்கைக்கு வந்திருந்தார். துரதிர்ஷ்டவசமாக அவர் பெற்றோருடன் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்த வேளை யுத்தம் மீண்டும் தொடங்கிவிட்டது. அவர் அச்சமயம் மட்டக்களப்பிலேயே நிற்க வேண்டியதாயிற்று.

கொழும்பிற்கான பொதுமக்களுக்கான சகல போக்குவரத்துக்களும் இடைநிறுத்தப்பட்டுவிட்டன. அவர் கொழும்புக்கு திரும்பாவிடின் அமெரிக்காவுக்கு மீண்டும் விமானம் எடுக்கமுடியாது. முழு வாழ்க்கையுமே நாசமாகிவிடும். கல்லூரி ஆசனத்தை அவர் இழக்க வேண்டியேற்படுவதுடன் அமெரிக்காவிலிருக்கும் பாதுகாப்பான சௌகரியமான வாழ்க்கையையும்கைவிடவேண்டி நேரிடும். மட்டக்களப்பில் எதிர்காலமின்றி பதற்றத்துடனும் யுத்தத்துடனுமே வாழ வேண்டியிருக்கும்.

எனது மகனுக்கு இங்கு பாதுகாப்பு இல்லை. அவர் இளைஞன். புலிகளிடமோ அல்லது விசேட அதிரடிப்படையிடமோ அவரை நாம் இழந்துவிடுவோம். அதிரடிப்படையினர் இவரைப் போராளியாகக் கருதி விடுவார்கள். அவர் அவ்வாறு இல்லாத போதிலும் சகல தமிழ் பையன்களுமே அவர்களுக்கு புலிகள் தான் என்று பரராஜசிங்கத்தின் மனைவி கண்ணீருடன் கூறினார்.

அவர் பெருப்பித்துக் கூறவில்லை. குரூரத்தனம், காரணமின்றி தமிழ் இளைஞர்களைக் கைது செய்தல் போன்ற விசேட அதிரடிப்படையின் நடவடிக்கைகள் நன்கு தெரிந்ததொன்று.

கைதான தமிழ் இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டு பின் கொலை செய்யப்பட்டு விடுவார்கள்.

தமிழ் இளைஞர்கள் காணாமற் போதல் யதார்த்தபூர்வமான அம்சமாகி மனித உரிமை அமைப்பாளர்களை துரிதமாகச் செயற்பட வைத்தது.

சுபஜித் இரு வேறுபட்ட எதிர்காலத்திற்கிடையே நின்றார். அமெரிக்காவில் முன்னேற்றமான அமைதியான வாழ்வு ஒன்று. வேலையின்மை, சித்திரவதை எதிர்பார்ப்பு மற்றும் மரணம் என்ற நிலைமை மட்டக்களப்பில் அவரை அழைத்துப்போக சம்மதித்தேன்.

ஆனால் அது மிகவும் பயங்கரமான பொறுப்பாக மாறியது.

எந்தவொரு பிரச்னையும் இல்லாமலேயே நாம் பயணத்தை ஆரம்பித்தோம்.

ஆரவாரமற்ற இடத்தை தாண்டிச் செல்ல புலிகள் உதவினர். இலங்கை தடையரணை அடைந்தோம். தடையரணில் நின்றோர் எங்களை அடையாளம் கண்டு கொண்டு பிரவேசிக்க அனுமதித்தனர். பின் திடீரென எம்மை நிறுத்தினர். அந்தப் பையனைக் கண்டுவிட்டனர்.

'யார் அவர்?' என தடையரணில் நின்றவர் கேட்டார். 'ஒரு நண்பர்' என இனிமையாகப் பதிலளித்தேன். ஆனால் அவர் என்னைத் தடுத்து நிறுத்திவிட்டார். பையனை சோதித்தவாறு 'அவர் தமிழரல்லவா?'

அவரின் மனவோட்டத்தை புரிந்து கொண்டு விட்டேன்.

'ஆம் அவரை எனக்குத தெரியும். அவரின் குடும்பத்தையும் நீண்டகாலமாகத் தெரியும். அவரின் தந்தை மிகவும் மதிப்புக்குரிய மனிதர் அவர் ஒரு விடுதி வைத்திருக்கின்றார். நான் கூறுவதை கொஞ்சம் கேளுங்கள். கொழும்புக்கு அவசரமாகச் சென்று இன்றிரவே இந்தியாவுக்கு விமானம் ஏற வேண்டும்' என்று கூறினேன்.

நான் அன்று விமானம் ஏற வேண்டியிருந்திருக்கவில்லை. ஆயினும் ஒரு காலக் கெடுவை விதித்து அதனைக் கடைப் பிடித்தேன். அத்துடன் அன்று மாலையே செய்திகளை அனுப்பாவிடில் அந்த வாரப் பதிப்பில் பிரசுரமாவது முடியாமல் பிந்திப்போய்விடும். ஆனால் இதனைப் பற்றி காவலரணில் இருந்தவரிடம் கூறுவது அர்த்தமில்லாததொன்று. அவர் அதனை விளங்கிக்கொள்ளமாட்டார். ஆனால் விமானத்தை தவறவிட்டு விட்டேன் என்பது மிகவும் நடைமுறைச் சாத்தியமானது. அத்துடன் அவசரமக போகவேண்டியிருக்கின்றது என்ற எண்ணத்தையும் இது ஏற்படுத்தவல்லது.

சந்தோஷமாக சிரித்தேன். மட்டக்களப்பைப் பற்றிக் கதைத்தேன். அங்கு நிலைமை மோசமாக இருக்கின்றதை சொன்னேன். இதனை கேட்டும் நான் சந்தோஷமாக கதைத்ததால் கொஞ்சம் மனமகிழ்ச்சியுடன் எம்மைப்போக அவர் அனுமதித்தார்.

5 கிலோ மீற்றர் தூரம் சென்றதும் மீண்டும் நிறுத்தப்பட்டோம். அதுவொரு பெரிய தடையரண். வீதியோரத்திலிருந்த வீடொன்றில் படையினர் நிலைகொண்டிருந்தனர். என்னாலும் டக்காலும் அவர்களுக்கு ஒரு பிரச்னையும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் எம்முடன் தமிழ்ப் பையன் இருந்தமை தான் அவர்களுக்கு உறுத்தியது. அவரை காரிலிருந்து இறங்கி வருமாறும் விசாரணைக்கு வருமாறும் கேட்டுக்கொண்டனர். நானும் அவருடன் சென்று அதிகாரியின் சகல கேள்விகளுக்கும் பதில் கூறினேன்.


சுபஜித் பதற்றமடைந்திருந்தார். பதிலளிக்க தடுமாறினார். அதிகாரி திருப்தியடையவில்லை. அவரின் நிலைப்பாடு மிகச் சாதாரணமாக இருந்தது. பையன் நல்ல திடகாத்திரமாக இருந்தார். நல்ல கட்டுமஸ்தாக இருந்த அவர் புலியென்பது அதிகாரியின் நிலைப்பாடு.

பையனை விசேட அதிரடிப்படையினரிடம் கையளிக்கப்போவதாக அதிகாரி கூறினார். விசாரணையில் அதிரடிப்படையினர் திருப்தி கண்டால் அவர் பயணத்தை தொடர அவர்கள் அனுமதிப்பார்கள் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

நான் டில்லி போவதற்கான விமானத்தைப் பிடிக்கவேண்டும் என்று அவரை வினயமாகக் கேட்டுக் கொண்டேன். என்னைப் பார்த்த அந்த மனிதர் 'நான் உங்களை தடுத்து வைக்கவில்லையே, நீங்கள்போகலாம்' என்றார். ஆனால் சுபஜித்தை விசேட அதிரடிப்படையினரிடம் கைவிட்டு விட்டு நான் எவ்வாறு போவது ? 24 மணி நேரத்திற்குள் அவர் இறந்துவிடக்கூடும். விவாதத்திலோ காரணத்திலோ ஆர்வமற்றவர்கள் விசேட அதிரடிப்படையினர். முதலில் சித்திரவதை செய்துவிட்டே பின்பு கதைப்பார்கள். அதிகமான நேரம் கடுமையாக தாக்கிவிடுவதால் பின்பு பேசுவதற்கான தேவையே இராது. அந்த நபர் இறந்துவிட்டிருப்பார்.

அதிகாரி பிடிவாதமாக இருந்தார். மற்றொரு சோதனை நிலையத்திற்கு எம்மைக் கூட்டிச் சென்றார். அது மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தது. அச்சமயம் இவ்வளவு தூரம் வளர்ந்து கட்டுமஸ்தாக இருப்பதற்கான காரணமென்ன என்று சுபஜித்தைக் கேட்டேன். தான் ஒரு விளையாட்டு வீரர் என அவர் சொன்னார். அதற்குச் சான்றாக அவர் சான்றிதழ்களையும் வைத்திருந்தார்.

# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?



அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளிமாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெற முடியும். நீங்கள் சாரதியாகவிருந்தாலும், பாதசாரியாகவிருந்தாலும், பேருந்தில் பயணிப்பவரானாலும், சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெற முடியும்.

**உங்கள் அறியாமையால் வாரத்திற்கு**
**$1000.00**
**வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்**

**ஒன்ராறியோவில் மிகப்பெரும் ஸ்தாபனம்**

## கனடாவில் எங்களுக்கு 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவம் உள்ளது

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய



# UNITED PERSONAL INJURY ASSOCIATES

*The Car Accident People*



**பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்**

### உங்களுக்குத் தெரியுமா?

இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் **$172,000.00** வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.




### விபத்து உங்கள் தவறானாலும் கூட

உங்களால் **$172,000.00** டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும். மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் "யுனைட்டட்" (நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)

இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்

**தீபன் (416) 505-9804**

- *5255 Yonge Street, Suite 200, North York (South of Finch, Head Office)*
- *257 Dundas Street. E, Unite 1, Mississauga (Dundas and HWY 10)*
- *29 King Street E, Unit 7, Kitchener*



## இவ்வாரச் சிறுகதை

# கட்டடக் கா(கூ)ட்டு முயல்கள்



வ.ந.கிரிதரன்

பல்கணியின் முன் காட்சி விரிந்திருந்தது. கட்டடக் காடு. காடா இல்லை கூடா. டெஸ்ட்மண்ட் மொறிஸின் 'மனித மிருககாட்சிசாலை' பல வருடங்களின் முன் படித்தது நினைவுக்கு வந்தது. உடற்கூறு சாத்திரம் பாடம் நடத்திய சிங்கள விரிவுரையாளர் ஒருவர் அறிமுகப்படுத்தியிருந்தார். 'நிர்வாண வாலில்லாக் குரங்கு', 'மனித மிருககாட்சிசாலை' போன்ற நூல்களின் ஆசிரியர். கூடுகளில் அடைக்கப் பட்டுள்ள மிருகங்களில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படுகின்றனவோ அத்தகைய மாற்றங்கள் நகரங்களில் 'காங்ரீட்' கூடுகளில் அடைந்து வாழும் மனிதர்களிடையிலும் நிலவுகின்றனவாம்.

இப்பொழுதெல்லாம் இரவு நேரத்துடனேயே வருகை தரத்தொடங்கி விட்டது. சில பால்யகாலத்து நினைவுகள் நெஞ்சில் அசை போட்டன. ஆற்றாமை, ஏக்கம் கலந்த ஒருவித உணர்வு தோன்றி மறைந்தது.

காலக் கப்பலில் மீண்டும் திரும்ப முடியாத அளவுக்கு நெடுந்தூரம் வந்து விட்டோமோ? அதிகாலையில் விண்ணில் கோடிழுக்கும் நீர்க்காகங்கள், தென்னையில் அடையவரும் கிளிகள், சோளகத்தில் தலை விரிக்கும் பனைப் பெண்கள், ....இழப்பு மிக அதிகமாகப் பட்டது.

தற்செயலாக எதியோப்பிய நண்பனொருவனின் அபார்ட்மெண்ட் சென்றிருந்த போது சந்தித்த அந்த முயல்களின் ஞாபகம் வந்தது. முயல்களின் நினைவு நெஞ்சில் ஒருவித சோகத்தினையும் எழுப்பியது.

அழகான இரண்டு முயல்கள். சிறியதோர் கூட்டினுள் அடைத்து வைத்திருந்தான். சிறியகூட்டையும் இடையில் ஒரு மட்டை வைத்து இரண்டாகப் பிரித்து வைத்திருந்தான்.காரணம். இரண்டும் ஆண் முயல்கள். மட்டையை எடுத்தால் இரண்டும் தழுவிக் கும்மளமடிக்கத் தொடங்கி விடுமென்ற பயம் காரணமாக நண்பன் செய்து வைத்த முன் ஏற்பாடு. முயல்களை நினைக்கப் பாவமாகவிருந்தது.

கட்டடக்காடொன்றின் உயர்ந்த மரமொன்றின் முப்பதாவது மாடியொன்றினுள் சிறியதொரு கூடொன்றினுள் அதுவும் இரண்டாகப் பரிக்கப்பட்டுள்ள நிலையில் இரு ஆண்முயல்கள்.

2.

"என்னவிது புதுப் பழக்கம். எத்தனை நாட்களாக இது.."வென்றேன்.

"இரண்டு மாதங்களாகத் தான்" என்றான்.

"இவற்றை எங்கு போய் பிடித்தாய்?"

"நான் வேலை செய்கிற 'ரெஸ்ட்டோரண்ட்' உரிமையாளனின் முயல்களிவை?"

"உனக்கு அன்பளிப்பாகத் தந்து விட்டான'?"

"அப்படியொன்றுமில்லை. அவனிற்கு இவை அலுத்துப் போய் விட்டன. கறியாக்குவதற்குத் திட்டமிட்டிருந்தான். நான் காப்பாற்றிக் கொண்டு வந்துவிட்டேன்.. விலை கொடுத்துத் தான்.."

விசித்திரமான உலகமென்று பட்டது ஜீவகாருண்யமிக்க நண்பனின் செய்கை. முயல்களுக்கு நண்பன் செய்வதென்ன ஜீவகாருண்யமா? இவ்விதம் அவற்றைக் காப்பாற்றி இன்னுமொரு சித்திரவதையை அவை அடையச் செய்வதன் செய்கையை ஜீவகாருண்யமென்று கூறலாமா?

நண்பன் இங்குள்ள பல சமூக அமைப்புகளுடன் ஈடுபாடுள்ளவன். மனித உரிமைகள் பற்றி மிகத் தீவிரமாகச் சிந்தித்து வாதம் புரிபவன். பெண் உரிமை, வந்தேறு குடிகள் உரிமை என அதிகமாக உழைப்பவன். ஆச்சரியமாகவிருந்தது.

" நீ செய்வது ஆச்சர்யமாகவிருக்கின்றது" என்றேன்.

"ஏனப்படிச் சொல்லுகிறாய்?"

"பின். முயல்களைக் காப்பாற்றவேண்டுமென்று துடிதுடித்து வாங்கி வந்த முயல்களை கூடொன்றுள் வைத்து இரண்டாகப் பிரித்து. பாவமாகப் படவில்லையா? பேசாமல் உன்னுடைய உணவக உரிமையாளனிடமே விட்டிருக்கலாம். இவை இவ்விதம் கிடந்து அனுபவிக்கத் தேவையில்லை."

"முயல்கள் மேலுள்ள பாசம் என்னைக் கட்டிப் போட்டு விட்டது"

"பாசமா! உனக்கா! முயல்கள் மீதா!"

" ஏன்? நீ நம்பவில்லையா? நம்புவதற்கென்ன அவ்வளவு சிரமம்?"

"உன்னுடைய பாசத்திற்காக அவை இவ்விதம் கிடந்து துயர்ப் பட வேண்டுமா?"

"அவை உயிருடன் அல்லவா இருக்கின்றன. அது போதாதா?"

"உயிருடன் இருந்தால் மட்டும் போதுமா? நீ எதற்காக உன் நாடு விட்டு இங்கு ஓடி வந்தாய்? நான் ஏன் ஓடி வந்தேன்? சிந்தித்துப் பார்த்தாயா?"

"அங்கிருந்து உயிர் தப்புவதற்காகத் தான்"

"அவ்விதம் வந்த உன்னை நான் முதன் முதலாகச் சந்தித்தது ஞாபகமிருக்கிறதா?"

"அதையெப்படி மறக்க முடியும். குடிவரவுத் திணைக்களத்தால் பராமரிக்கப் படும் தடுப்பு முகாமில் தான்."

"எத்தனை நாட்கள் நம்மைத் தடுத்து வைத்திருந்தார்கள் ஞாபகமிருக்கிறதா?"

"அதையெப்படி மறக்க முடியும்?"

"அப்பொழுது நீ சொன்ன வார்த்தைகளை இருந்த நிலையினை இப்பொழுதும் ஞாபகம் வைத்திருக்கின்றாயா?"

"அதெப்ப.." என்று பாதியிலேயே நிறுத்தி என்னை நோக்கினான் நண்பன்.

" என்ன நிறுத்தி விட்டாய்?" என்றேன்.

" அந்த ஒரு வாரமும் நான் அடைந்த துன்பம் துயரம் இருக்கிறதே. மறக்க முடியுமா என்ன! உயிர் தப்பி ஓடி வந்தால் பத்தாவது மாடியின்றின் சிறியதொரு அறையினுள் அடைத்து வைத்து விட்டார்கள்.திரும்பவும் போய் விடலாமா, போய்ச் செத்து விடலாமா என்றிருந்தது. நல்லவேளை விட்டு விட்டார்கள்."

"முயல்களிற்குப் பேசும் சக்தியிருந்திருந்தால் நீ அன்று செய்ததைத் தான் அவையும் இன்று செய்திருக்கும். சுதந்திரமில்லாத கூட்டு வாழ்க்கை. அது மட்டுமல்ல அவை அதன் விளைவாக வாழ முயலும் வாழ்வை உன்னால் சகிக்க முடியாமல் தடுப்பு வேறு போட்டு விட்டாய். ஆனால்.."

"இந்நாட்டுச் சட்டங்களின் பிரகாரம் நீ செய்வது பாரதூரமான குற்றம் தெரியுமா? நீ இணைந்து பணியாற்றும் மனித உரிமை, மிருக உரிமை அமைப்புகள், பெண்கள் ஆணகள் உரிமை அமைப்புகள் இவையெல்லாம் நீ செய்வதை அறிந்தால் அந்த முயல்களின் உரிமையை மறுத்து நீ அவற்றை வதை செய்வதாகப் போர்க்கொடி தொடங்கி விடுவார்கள். நிச்சயம் சிறைத்தண்டனை உண்டு. தெரியுமா?" என்றேன்.

நண்பனின் முகத்தில் சிரிது கவலையின் ரேகைகள் படிந்தன.

"நான் என்ன செய்யலாம்"

"முதலில் அவற்றிற்கு அவை இழந்த சுதந்திரத்தை வழங்கு. அதற்குப் பின் மற்றவற்றை யோசி. 'மிருகங்களின் காப்பக அமைப்பினரிடம் வேண்டுமானால் ஒப்படைத்து விடலாம்" என்றேன்.

அன்றிரவு நண்பனிடம் விடைபெற்று என்னிருப்பிடம் சென்று படுக்கையில் சாய்ந்த பொழுது நணபனின் தொலைபேசி அழைப்பு வந்தது.

"என்ன இந்த நேரத்தில்"

"நீ கூறியபடியே கூட்டைத் திறந்து விட்டேன்."

"நல்ல விசயமொன்று செய்திருக்கிறாய்"

"ஆனால்...முயல்களிரண்டும் பல்கணியிலிருந்து பாய்ந்து விட்டன."

நண்பனின் குரலில் ஒருவித கவலை தொனித்தது.

3.

எதிரே நண்பன் வசிக்கும் தொடர்மாடிக் கட்டடம் படரத்தொடங்கியிருந்த மெல்லிருள் கிழித்துத் தெரிந்தது. அதன் பின்னால் தொலைவில் சி.என்.கோபுரம் உச்சியில் விட்டு விட்டு அடிக்கொருதரம் சுடர்ந்து கொண்டிருந்தது தெரிந்தது. பல்கணியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தது முயல்களை ஞாபகப் படுத்தி விட்டன போலும்.


"தம்பீ! இந்தக் குளிரிலை வெளியிலையிருந்து என்ன செய்து கொண்டிருக்கிறாய்? உள்ளுக்கு வா மோனை."

உள்ளிருந்து அப்பாவின் குரல். அண்மையில் தான் ஊரிலிருந்து வந்திருந்தார்.

ஊரில் என்ன மாதிரி கம்பீரமாக வாழ்ந்த மனிசன். இங்கு அந்தக் கம்பீரமிழந்து, வாடி வதங்கி, ....அப்பா! எவ்வளவு மாறிப் போய் விட்டார்.

நாள் முழுவதும் 'அப்பார்ட்மெண்ட்'டே கதியாக வளைய வரும் இருப்பு. நானோ ஓர் இயந்திரம்.

வாழ்க்கை அப்படி. அப்பாவை நாள் முழுவதும் வைத்துக் கவனிக்க வேண்டுமென்று, எங்களை அவர் கவனித்த மாதிரி, ஆசை இருந்தால் மட்டும் போதுமா? அப்பாவின் குரலில் விரவிக் கிடந்த பரிவு நெஞ்சைத் தொட்டது. எதை இழந்தோம் எதை அடைந்தோம் என்பதில் தான் இன்னும் சிறிது குழப்பமாகவிருந்தது.





ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் யூன் 14 மலேஷியா ஸ்ரீ ராஜ - ராஜ சோழன் (சீர்காழி கோவிந்தராஜனின் மறு அவதாரம் என்னும்படி அதே குரலில் அதே பாடல்களை)இன்னிசைக் கச்சேரி பொழிகிறார்.

கீழே இடதுபுறத்தில் - ஆலயத்தின்கர்ப்பகிரகம். கீழே வலதுபுறத்தில் - ஆலய முன்மண்டபம் இருபுறமும் கோணேசர் மாதுமையம்மைசந்நிதி அடிப்பகுதியில் பெருந் திரளாக வந்திருந்த பக்தர்களின் ஒருபகுதி

## மிஸிஸாகா பிறாம்ரன்

# ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானம்

## SHRI GANAPATHI MANDIR

Tel: 905 458 9701; Cel: 416 471 0255

**200 ADVANCED BLVD. UNIT 21, BRAMPTON. ONTARIO (DIXIE & ADVANCED BLVD)**





ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாக்ஷர வித்தியானந்தக் குருக்கள் அருகிலிருக்க, ஆலயத்தின் அறங்காவலர் அனைவருக்கும் பாராட்டுரை நன்றியுரை வழங்குகிறார்.



மிஸிஸ்ஸாகா - பிராம்றன், ஸ்ரீ கற்பக விநாயகர் சதுர்த்தி விழாவில் (June 14) எடுக்கப்பட்ட படங்கள். விழா உபயகாரர் திரு விஜயகுமார்-கலா குடும்பத்தினருக்கும், திரு ராஜராஜசோழன் அவர்களின் இன்னிசைக் கச்சேரிக்கு ஆதரவளித்த 6 குமார், நீலம் ஸில்க், சங்கர் அண்ட் கம்பெனி திருதிருமதி குணபாலசிங்கம் குடும்பத்தினருக்கும் ஆலயத்தினர் நன்றி தெரிவிக்கின்றனர்.



இங்ஙனம்: அறங்காவலர் - கற்பக விநாயகர் தேவஸ்தானம்

# கிழக்கில் பதற்றத்தைத் தணிப்பதற்கு விடுதலைப்புலிகள் – படை அதிகாரிகள் சந்திப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் வன்செயல்களையடுத்து உருவாகியிருக்கும் பதற்றநிலையைத் தணிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விடுதலைப்புலிகளின் பிரதிநிதி களும் படை அதிகாரிகளும் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றனர்.

வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளி 28ம் திகதி நள்ளிரவு ஆரம்பமான கலந்துரையாடல் அதிகாலை வரை நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சந்திப்பில் இராணுவத் தரப்பில் கிழக்கு மாகாணக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், விடுதலைப் புலிகள் சார்பில் மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் விசு ஆகியோர் பங்குபற்றினர். பதற்றநிலையைத் தணிப்பது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இரு தரப்பினரும் விரிவாக நீண்டநேரம் ஆராய்ந்தனர்.

வன்செயல்கள் இடம்பெறாமல் தடுக்க இரு தரப்பினரும் கூட்டாகப் பாதுகாப்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதென இணக்கம் கண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மீண்டும் வன்செயல்கள் எதிர் காலத்தில் ஏற்பட்டால் இரு தரப்பினரும் இணைந்து செயற்படுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

வாழைச்சேனையில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பிருப்பதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் முற்றாக மறுத்தனர்.

இந்த வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் பொலிசார் செயற்பட்டுள்ளனர் எனவும் புலிகள் குற்றஞ்சாட்டினர்.

ஹர்த்தால் ஏற்பாடு, பஸ் பயணிகள் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதல், மூன்று கடைகள் எரிக்கப்பட்டமை மற்றும் கிரனேட் தாக்குதல் போன்ற வன்முறைச் சம்பவங்களை ஆராய்ந்து பார்க்குமிடத்து அவற்றுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டு பிடிக்க முடியும். அவ்வாறு பின்னணியில் நின்று செயற்பட்டவர்களைக் கண்டு பிடித்து அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜமால் டீனும் முஸ்லிம் பொலிசார் சிலரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் விடுதலைப்புலிகள் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டதாகவும்

அவர்களை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று விடுதலைப்புலிகள் தரப்புக் கோரியதாகவும் கூறப்பட்டது. சம்பந்தப்பட்ட பொலிசார் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆவண செய்வதாகப் படைத்தரப்பு உறுதியளித்துள்ளது.

இதே வேளை மட்டக்களப்பு மாவட்டத்திலும் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளிலும் இச்செய்தி எழுதப்படும் வரை ஊரடங்கு உத்தரவு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு நீடிக்கப் பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் பதற்றமான நிலை நீடிப்பதையடுத்து தளர்த்தப்பட்ட ஊரடங்கு மீண்டும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டு இராணுவம் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளது

## வாழைச்சேனையில் தமிழர் வாழ்விடங்கள் சுடுகாடாக் காட்சி! சமாதான ஒப்பந்தம் தந்த பரிசா?

வாழைச்சேனையில் தமிழ்மக்களது வாழ்விடங்கள் முஸ்லிம் குண்டர்களினால் அழிக்கப்பட் சுடுகாடு போல் அந்த நகரம் காட்சியளிக்கின்றது.

அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டுத் திரும்பியுள்ள செய்தியாளர் ஒருவர் இப்படி வர்ணித்தார். வாழைச்சேனையில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற சமாதான மாநாடு தொடர்பான செய்திகளைத் திரட்ட அங்கு சென்றிருந்த செய்தியாளரே இத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது வாழைச்சேனை நகரில் தமிழர்களின் 25க்கும் மேற்பட்ட கடைகள் எரிந்து கிடந்தன. 15இற்கும் மேற்பட்ட வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

நகரில் முஸ்லிம் வர்த்தகர்கள் வியாபாரம் செய்து வந்த தமிழர்களின் கடைத் தொகுதிகளும் எரிக்கப்பட்டிருந்தன. அவற்றில் இருந்த பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டிருந்தன.

வாழைச்சேனைப் பிரதேச சபை உட்பட பல பொதுக்கட்டிடங்களும் அரச அலுவலகங்களும் எரிந்து கிடந்தன.

மூன்று மோட்டார் சைக்கிள்கள், 10க்கு மேற்பட்ட சைக்கிள்கள், சில வாகனங்கள் எரிந்த நிலையில் காட்சி தந்தன. ஆறு தனியார் பஸ்களும் போக்குவரத்துச்சபை பஸ் ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் நகரம் சுடுகாடு போல் காட்சியளித்தது.

இதேவேளை வாழைச்சேனையில் தமிழர்கள் பலர் காணாமற் போயிருப்பதாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர். வவுனியாவில் இருந்து கடந்த வியாழக்கிழமை 27ம்திகதி மாலை நாற்பது தமிழர்களுடன் கிரான் நோக்கி வந்த பஸ் குறித்து இன்னும் தகவல் இல்லை என்று சிலர் தெரிவித்தனர்.

வேலைக்குப் புறப்பட்ட பத்துப் பேர் இன்னமும் வீடு திரும்பவில்லை என்றும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

அரசு புலிகள் புரிந் துணர்வு உடன்பாடு, பிரபா – ஹக்கீம் உடன்பாடு போன்றவற்றை தமிழர் தரப்பு ஏற்படுத்திக் கொண்டமைக்கு பரிசு இது தானா என்று பரவலாக மட்டக்களப்பு அம்பாறை தமிழ்சமூகம் ஆத்திரத்துடன் விடுதலைப்புலிகளைப் பார்த்துக் கேட்பதாக அச் செய்தியாளர் மேலும் தெரிவித்தார்.

## தரைப்பாதை வழியாக எரிபொருள் எடுத்துச் செல்ல அனுமதி இல்லை

ஏ9 தரைவழிப்பாதை ஊடாக எரிபொருட்களைக் குடாநாட்டுக்கு எடுத்து வருவதற்கான அனுமதியைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இன்னும் வழங்கவில்லை என்று கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய முகாமையாளர் அந்தோனிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

தரைவழிப்பாதை ஊடாக எடுத்து வருவதன் மூலம் பெற்றோலின் விலை குடாநாட்டில் தற்பொழுது உள்ளதை விடக் கணிசமான அளவு குறையும் என்பது உண்மையான விடயம். எனினும் அதனை எடுத்து வருவது தான் பிரச்சனைக்குரிய விடயமாக உள்ளது.ஏனைய பொருட்களை எடுத்து வருவது போன்று பெற்றோலை எடுத்து வருவது கடினம். ஏ9 தரைவழிப்பாதை சீரானதாக இல்லாததும் இதற்கு ஒரு முக்கிய காரணம். அத்துடன் எரிபொருள் எடுத்து வருவதற்கான பொறுப்பை வழங்கப்படுபவர்களின் நம்பகத்தன்மை பற்றியும் ஆராய வேண்டியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சுமார் 26 ஆயிரத்து400 லீற்றர் பெற்றோலை ஒரே தடவையில் பவுசர் மூலம் தரைவழியாக எடுத்து வர முடியும். ஆனால் மேற் கூறிய காரணங்களால் தான் அதனைச் செய்ய முடியவில்லை என்று சந்தைப்படுத்தும் முகாமையாளர் ஏபல் தம்பிடம் தெரிவித்தார் என்றும் அவர் கூறினார்.

## வாழைச்சேனைச் சம்பவங்களுக்கு பொலிசாரே முழுப்பொறுப்பு

### மட்டு.எம்.பி.க்கள்பிரதமருக்கு கடிதம்

வாழைச்சேனைப் பகுதியில் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் அனைத்திற்குமான முழுப்பொறுப்பையும் பொலிசாரே ஏற்க வேண்டும். எனவே சம்பந்தப்பட்ட பொலிசாரை உடனடியாக இடமாற்றம் செய்க. இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பா.உ.க்களான ஜோசப் பரராசசிங்கம், தங்கவடிவேல் ஆகியோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

வாழைச்சேனை நகரில் அழிவுக்குள்ளான பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட மேற்படி எம்.பி.க்கள் இருவரும் பிரதமருச்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர். இந்தக் கடிதத்திலேயே மேற்படி கோரிக்கை விடுக்கபட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது வாழைச் சேனைப் பொலிசார் வன்செயல்களைக் கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் தயாராக இருக்கவில்லை.

அத்துடன் தீவைப்புச் சம்பவங்கள், கொள்ளைகள், படுகொலைகள் அனைத்தும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோதே இடம்பெற்றுள்ளன. இதனை மேற்படி பகுதியில் வசிக்கும் தமிழ் முஸ்லிம் மக்கள் எம்மிடம் நேரில் தெரிவித்துள்ளனர். ஊரடங்கு வேளையில் சட்ட ஒழுங்கைக் கவனிக்க வேண்டிய பொலிசார் அரச சொத்துக்களை பாதுகாக்கத் தவறி விட்டனர்.

வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜமால்டீன் பொலிஸ் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் பியசேன ஆகியோர் தமது பகுதியில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டத் தவறி விட்டனர்.

அதேவேளை குற்றப்புலனாய்வுப் பகுதியைச் சேர்ந்த பயிஸ், மன்சூர், றமேஸ், உவைஸ் ஆகியோரே பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். குறிப்பாக தமிழ்இளைஞனான காண்டீபனின் மரணத்திற்குபயிஸ்என்ற பொலிஸ் அதிகாரியே காரணம் என பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே மேற்படி சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களை சட்டத்தின் முன்பாக நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் இச்சம்பவங்களுக்குக் காரணமானவர்களை உடனடியாக இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வன்செயல்களைத் தடுக்கத் தவறிய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் பொலிஸ்மாஅதிபர் ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.வாழைச்சேனையில் நடந்த சமாதான மாநாட்டிலேயே இதனைத்தெரிவித்தார்.




PROFESSIONAL TRUCK TRAINING CENTRE
CLASSES - A,B,C,D,Z மற்றும் Air Brake & Defensive Course, Fork Lift (போக்லிப்ற்) பயிற்சிகளும் வழங்கப்படும்


- EI (வேலையற்றோர் காப்புறுதியில்) இருப்பவர்களுக்கு இலவசப் பயிற்சிகள்
- நியாயமான கட்டணத்தில் பயிற்சி வகுப்புகள்
- அனைத்து பயிற்சியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு
- விசேட தேர்ச்சிபெற்ற பயிற்றுனர்கள்
- வாரத்தில் 7 நாட்களும் வகுப்புகள் உண்டு

START A CAREER YOU CAN FEEL SECURE IN!

விபரங்களுக்கு அழையுங்கள்
TEL: (416) 299-9638
CELL: (416) 771-8041

FAX: (416) 609-9814
www.jaystrans.com

# குரு பூர்ணிமா



## ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் ஆச்சிரமம்

## கியூபெக் - கனடா

## ஜுலை 19, 20, 21, 22, 23, 24

தெய்வ அவதாரமென மக்களால் போற்றப்படும் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் ஓர் ஞானம் பெற்ற தமிழ் மகானாவார். இவர் இந்தியாவில் தமிழ்நாட்டில் பாபநாசம் என்னும் ஊரிலே ஓர் பக்தியும் பாரம்பரியமும் மிக்க தமிழ்க் குடும்பத்தில் 1956 ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி அவதரித்தார்.

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரர் அவதரித்த போது பல அற்புதங்கள் நிகழ்ந்தன. தனது நான்காவது வயதில் முழு "பகவத்கீதை"யையும் சமஸ்கிருத மொழியில் சொல்லி அதற்கு விளக்கமும் கொடுத்த போது மிகவும் படித்த பண்டிதர் களே அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தனர்.


குழந்தைப் பருவத்திலேயே நீண்ட நேரத்தை தியானத்திலும் தனிமையிலும் கழிப்பதை அவருடைய பெற்றோர்கள் கண்டனர். எட்டு வயதில் புராண இதிகாசங்களைப் படிக்கத் தொடங்கிய ஸ்ரீ ரவிசங்கரர் தனது பதினேழு வயதிற்குள் வேதபாடம் நவீன விஞ்ஞானம் இரண்டையும் கற்றுத் தேர்ந்தார்.

பின்னர் இமயமலையில் ரிஷிகேசத்தில் நீண்டகாலம் தியானத்தில் இருந்த ஸ்ரீரவிசங்கரர் "வாழும் கலை" என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்து யோகம், ஞானம், பக்தி ஆகியவைகளை மிகவும் எளியமுறையில் மக்களுக்குப் போதிக்கலானார்.

தமிழ் நல்லுலகில் தோன்றிய மிகச்சிறந்த ஜீவன்முக்தரான ஸ்ரீ ரவிசங்கரருக்கு இந்தியா, ஜேர்மனி, கனடா ஆகிய நாடுகளில் பெரிய ஆச்சிரமங்களும் 130 நாடுகளில் கிளைகளும் உண்டு.

### ஆச்சிரமத்திற்குச் செல்லும் வழி

ஆச்சிரமத்திற்கு செல்லும் வழி :




ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரர் ஆச்சிரமம்
St-Mathu du Park
Shawinigan, Quebec

ஆச்சிரமத்திற்கு செல்லும் வழியில் ஏதாவது சிரமங்கள் ஏற்பட்டால் கீழ்வரும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

ஆச்சிரம தொலைபேசி இல :
**(819) 532-3328**

## Centre L' Art de Vivre
### de Saint - Mathieu - du - Parc
Shawinigan, Quebec

கனடாவில் கியுபெக் மாநிலத்தில் ஏரிகளும் மலைகளும் சூழ்ந்த அழகும் அமைதியும் நிறைந்த "சுசானிக்கன்" என்ற இடத்தில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் ஸ்ரீரவிசங்கரர் ஆச்சிரமம் அமைந்துள்ளது.

எதிர்வரும் ஜுலை மாதம் குருப்பூர்ணிமா தினத்தை முன்னிட்டு 19.20.21.22.23.24 திகதிகளில் கனடா ஆச்சிரமத்தில் பக்தர்களுக்கு குருதேவர் ஸ்ரீரவிசங்கரர் தரிசனம் கொடுப்பார்.

ஞானம் பெற்ற தமிழ்குருவான ஸ்ரீரவி சங்கரரின் தரிசனம் பெற்று தமிழில் அவருடன் அளவளாவி குருதேவரின் அன்பையும் அருளையும் ஆலோசனைகளையும் பெற்று நல் வாழ்க்கை வாழ உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிற்பகல் 6.00 மணியில் இருந்து 9.00 மணி வரை நடைபெறும் "சத்சங்கத்தில்" கலந்து கொள்வது மிகவும் நற்பலன்களைத் தரும்.

ஆச்சிரமத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலை
HWY 40 EAST - EXIT 196
55 NORTH - EXIT 217
HWY 351

நீச்சல் தெரியாதவர்கள் தனியாக ஏரியில் நீந்தவோ அல்லது படகு ஓட்டவோ வேண்டாம் என்று ஆச்சிரமம் கேட்டுக் கொள்கிறது.

Wed site: www.artofliving.org
de - saint-mathieu - du - parc
Shawinigan - Quebec

# கிழக்கு குழப்ப நிலையைக் கட்டுப்படுத்த பாதுகாப்புப் படையினர் உறுதியான முறையில் செயற்படவில்லை என்கிறார் ஹக்கீம்

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கலவரம் பதற்ற நிலைமைகளைத் தணிப்பதற்குப் பாதுகாப்பு பிரிவினர் ஆரோக்கியமான உறுதியான நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுக்கத் தவறியதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான ஹக்கீம் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இனநெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகளைச் சீர்குலைத்து அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்குத் தள்ளி விடுவதற்கானதொரு சதித்திட்டம் இதன் பின்னணியில் இருப்பதாகவும் ஹக்கீம் கூறினார்.

மட்டக்களப்பு நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக அங்கு புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் அமைச்சர் ரேனுகா ஹோட்டலில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினார். அமைச்சர் ஹக்கீம் அங்கு தொடர்ந்து விளக்கமளிக்கையில் கூறியதாவது முஸ்லிம்களைப் பொறுத்த அளவில் தங்களுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலைமைகள் விடயத்தில் அரசாங்கம் சரியான கண்ணோட்டத்துடன் நோக்கவில்லை என்ற உணர்வு உருவாகியுள்ளது. இத்தகைய சூழ்நிலையை சில தீயசக்திகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சித்து வருகின்றன. பிரதானமாக அரசும் புலிகளும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையையும் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளையும் வெறுப்புடன் நோக்குகின்ற சக்திகள் கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களை மோதவிட்டு அதனூடாக தமது முயற்சிகளில் வெற்றியடையலாமென்று கனவு கண்டு கொண்டிருக்கின்றன. இவ்விடயத்தில் முஸ்லிம் மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும். அத்தகைய சதிமுயற்சிக்கு நாம் பலியாகி விடக் கூடாது.

## விடுதலைப்புலிகளுக்கு தார்மீகப் பொறுப்பு

கிழக்கில் இன்று உருவாகியுள்ள சூழ்நிலையைப் பொறுத்தமட்டில் விடுதலைப் புலிகள் தரப்புக்கு ஒரு தார்மீகப் பொறுப்பு இருக்கின்றது. தொடர்ச்சியான சம்பவங்களால் முஸ்லிம்கள் நிறையப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். வாழைச்சேனையில் ஏற்பட்ட பாதிப்பு. வரலாறு காணாத ஒரு பாதிப்பாகும். கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட நிகழ்வுகள் ஆத்திரத்தை அதிகரிக்கின்றனவையாகவே உள்ளன.

நாம் நிதானமாக விடயங்களை அணுக வேண்டியுள்ளது. முஸ்லிம்கள் தரப்பில் தீவிரவாதம் இருப்பதாகக்காரணம் காட்டி நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்று புலிகள் தப்புத்துக் கொள்ள முடியாது. இப்படியான போக்கைப் புலிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

## பிரபாகரனிடம் வேண்டுகோள்

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் வேண்டிக் கொள்வது கிழக்கில் நடப்பவற்றை மிகவும் அவசரமாகக் கவனத்தில் எடுத்து நாம் செய்து கொண்ட உடன்பாட்டு உத்தரவாதங்களை அமுல் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே. இது இலகுவான காரியமல்ல என்பதையும் நாம் அறிவோம். ஆனால் புலிகளின் தலைமைத்துவத்தால் மட்டுமே இதனைச் செய்ய முடியும் என்பதை மறுக்க முடியாது. விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தில் நாம் கொண்டுள்ள நம்பகத்தன்மையை நாம் இழந்து விடவில்லை. அவரால் முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அதனை அவர் எமக்கு நிரூபிக்க வேண்டும். கிழக்கில் புலிகள் உட்பட சகல தலைமைத்துவங்களும் எம்மோடு சந்திப்புகளை ஏற்படுத்தி பிரச்சனைகளை பேசித் தீர்த்துக் கொள்ள முன்வரவேண்டும்.

திருமலை. மட்டக்களப்பு பிராந்தியங்களின் புலிகளின் தலைமையுடன் பேசும் வாய்ப்புக் கிட்டியுள்ளன. திகதிகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அது குறித்து மகிழ்ச்சியடைகின்றோம். அம்பாறை உட்பட ஏனைய பகுதிகளின் தலைமைகளுடன் நாம் பேசியாக வேண்டும். தமிழ்மக்களோ முஸ்லிம் மக்களோ யாராக இருப்பினும் பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாப்பு மேலும் உத்தரவாதப்படுத்த வேண்டும். இன்று வரை பாதுகாப்புப்படையினர் அசமந்தப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றனர். இது ஆரோக்கியமான செயற்பாடல்ல என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

மோதல் பின்னணியில் பொலிசார் உடந்தையாக இருப்பதாக தமிழ்செல்வன் கூட என்னிடம் தெரிவித்திருக்கின்றார். மீண்டும் யுத்தமொன்றுக்கு வழக்கு கிழக்கை இழுத்துச் செல்லும் அளவுக்கு வன்செயல்களை முன்னெடுக்க இடமளிக்க முடியாது. யுத்தம் எந்தவிதத்திலும் ஏற்பட எவரும் அனுமதிக்க முடியாது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்வது அவசியமானதாகும்.

# மருதமுனை திருமண வீட்டிலிருந்து திரும்புகையில் கடத்தப்பட்ட முஸ்லிம்கள் அனைவரும் விடுதலை

அம்பாறை மாவட்டம் கல்முனைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை 28ம்திகதி மாலை இரு சமூகங்களையும் சேர்ந்த பலர் கடத்தப்பட்டுள்ளதாக வெளியான செய்திகளையடுத்து அப்பகுதிகளில் பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன் பின்னர் அப்பகுதியில் ஊடரங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட உயர்மட்டத் தொடர்புகளையடுத்து கடத்தப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்ட பின்னர் நிலைமை நள்ளிரவின் பின்னர் தணிந்தது.

கிழக்கில் கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள இனமுறுகல்களின் மத்தியில் கல்முனையில் வெள்ளிக்கிழமை மாலை திடீரென ஆட்கள் கடத்தப்பட்டது தொடர்பாகச் செய்திகள் வரவே அப்பகுதிகளிலும் பெரும் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டன.

மருதமுனைப் பகுதியில் திருமண வீடொன்றுக்குச் சென்றுவிட்டு நிந்தாவூருக்குத் திரும்பும் வழியில் பாண்டிருப்புப் பகுதியில் வைத்து முஸ்லிம்கள் பலர் தடுத்து வைக்கப்பட்டனர்.

நிந்தாவூரைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளரும் டாக்டரும் அவரது குடும்பத்தவர்களும் வேறு 25 பேரும் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டனர். இதே போன்று நிந்தாவூர் மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றும் கணவன் மனைவியான தாதி உத்தியோகத்தர்கள் உட்பட வேறு சிலர் மருதமுனை திருமணவீட்டிலிருந்து இரு வான்களிலும் கார் ஒன்றிலும் திரும்பிக் கொண்டிருக்கையில் மாலை வழிமறிக்கப்பட்டு பாண்டிருப்பிலுள்ள வீடொன்றில் தடுத்து வைக்கப்பட்டனர்.

வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடிப் பகுதியில் 150 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் முஸ்லிம்களால் கடத்தப்பட்டுள்ளதாகவும் அவர்களை விடுவித்தால் மட்டுமே உங்களை விடுவிப்போம் என கூறி இவர்களைத் தடுத்து வைத்துள்ளனர்.

இரவு ஒன்பது மணியளவில் இவர்கள் அந்த வீட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அங்கு வந்த இளைஞர் ஒருவர் முஸ்லிம்களை நாங்கள் இதயத்தில் தான் வைத்திருக்கிறோம். நீங்கள் தான் எம்மைப் புரிந்து கொண்டு எமது விடயங்களில் ஒத்துழைக்கிறீர்கள் இல்லைஎனக் கூறியுள்ளனர்.

பின்னர் ஒன்பதரை மணிளவில் அங்கு வந்த இளைஞர்கள் உங்களை விடுவிக்கப் போகின்றோம் எனக்கூறி தடுத்து வைக்கப்பட்டிருந்த அனைவரையும் மருதமுனை வரை அழைத்துச் சென்று தாங்களே நிந்தாவூருக்குக் கூட்டிச் செல்லப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்ட போது கல்முனையில் வைத்து அனைவரும் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அங்கு வந்த கண்காணிப்புக்குழுவினரும் இவர்களிடம் நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டனர். இரு தரப்பிலும் கடத்தப்பட்டவர்கள் பரஸ்பரம் விடுவிக்கப்பட்டதாக வந்த தகவல்களையடுத்து நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் பதற்றம் பெருமளவில் தணியவே நிலைமை பெருமளவு வழமைக்குத் திரும்பியது.

இதற்கிடையில் இருதரப்பிலும் பலர் பரஸ்பரம் கடத்தப்பட்டதாக வெளியான செய்திகளையடுத்து அம்பாறை மாவட்ட தமிழ்க்கூட்டமைப்பு எம்.பி. சந்திரநேரு அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு நிலைமை பற்றிக் கூறியதுடன் மேற்படி சம்பவங்களால் பெரும் பதற்றம் தோன்றியுள்ளதாகவும் உடனடியாக ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறும் கேட்டுள்ளார்.

இதையடுத்து அம்பாறை மாவட்டத்தில் உடனடியாக இரவு நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதே நேரம் சந்திரநேரு விடுதலைப்புலிகளுடனும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களுடனும் தொடர்பு கொண்டு இந்தச் சம்பவங்கள் பற்றி விரிவாகத் தெரிவித்துள்ளார் என்றும் அவரது அலுவலகச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

# "வெல்லும் தமிழ்" விழா

எதிர்வரும் ஜூலை மாதம் 14ம்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு கனடா கந்தசாமி கோவில் திருமண அரங்கில் வெல்லும் தமிழ் விழா சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினராக திருமதி பத்மா குகதாசன் அவர்களும் தமிழறிஞர் திரு சண்முகம் குகதாசன் அவர்களும் கலந்து கொள்ளுகின்றனர்.

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் கவியரங்கு. தமிழிசை, நடனம், நாட்டுப்பாடல்கள் மற்றும் பல சுவையான கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. அத்துடன் தமிழக அறிஞர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவும் உள்ளனர்.


இந்நிகழ்வில் உணர்ச்சிக்கவிஞர் காசிஆனந்தன் நூல் வெளியீட்டு விழாவில் தென்றல் தமிழில் வார்த்தைச் சித்தர் வலம்புரி ஜான் தெள்ளுதமிழில் கவிஞர் அறிவுமதி ஆகியோர் ஆற்றிய உரைகள் அடங்கிய ஒளிப்படம் வெளியீடு செய்து வைக்கப்படும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சிக்கு ஆதரவு - ஆர்.அன்ட் எஸ். ஓட்டோ சேல்ஸ் நிறுவனம் - ஸ்காபரோ
தொடர்புகளுக்கு (416) 261 - 9099 (416) 281 - 1165 (416) 447 - 6314

எஸ். பி. இம்போட்டஸ் S.P. Importers Inc.
ஒரே பிளாசாவில் மூன்று பெரும் தாபனங்கள்

| Fresh Vegetable & Grocery | Fresh Fish Market | FURNITURE |
|---|---|---|
| 2863 Lawrence Ave. East | 2853 Lawrence Ave. East | 2861 Lawrence Ave. East |
| Tel: (416) 261-3881 | Tel: (416) 261-4737 | Tel: (416) 266-3077 |
| | Fax: (416) 261-5843 | |

Scarborough, Ontario (Brimley & Lawrence)



## IMMIGRATION SERVICES

- அகதிக் கோரிக்கை
- நிரந்தர வதிவிட உரிமை
- குடிவரவு மேன்முறையீடு
- மனிதாபிமான மனு
- தடை உத்தரவுப் பரிசீலனை
- குடும்ப விவகார வழக்குகள்

அமெரிக்க எல்லைகளில், சிறைகளில் உள்ளவர்களை உடனடியாக விடுவித்தல்

குடிவரவு சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் நாம் உங்களுக்குச் சிறப்பாக உதவ முடியும்

**குடிவரவுச் சேவைகள்**
சாம் நாகேந்திரா
(குடிவரவு ஆலோசகர் / மொழிபெயர்ப்பாளர்)

ROBERT I. BLANSHAY
Barrister & Solicitor
49 St. Nicholas Street
*(Yonge/Wellesley)*
TEL: (416) 413-4955
FAX: (416) 413-1649

SAM NAGENDRA
**TEL: (905) 405-9615**
24 HRS. PAGER: 360-9230
EMAIL: nage@sprint.ca

**LEGAL AID ACCEPTED**



நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

**கவலையை விடுங்கள்**

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற

# Vitaplex

## சம்போ அன்ட் கன்டிஷனர்

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.

தலைமுடி உதிர்தல், சொடுகு, எண்ணைத்தன்மை போன்றவற்றை எளிதில் அகற்றி உங்கள் தலைமயிருக்கு புத்துயிர் அளிக்கின்றது.




குடும்பத்தில் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உபயோகிக்கக்கூடிய ஒரே ஒரு சம்போ அன் கன்டிஷனர்

**Vitaplex Shampoo $9.99**
**Vitaplex Conditioner $9.99**
**Vitaplex Shampoo Plus Conditioner $18.99**
Applicable Taxes Extra

### பாவிக்கும் முறை

தலைமயிரை நன்றாக நனைத்தபின் **Vitaplex** சம்போவை சிறிதளவு கையிலெடுத்து தலையில் இட்டு நன்றாக தேய்த்து 30 வினாடிகளின் பின் நன்றாகக்கழுவவும் பின்னர் **Vitaplex**கன்டிஷனரையும் சம்போ போன்று தலையில் வைத்து முழுகவும்.
இவ்வாறு ஒவ்வொரு நாளும் செய்வதால் சிறந்த பலனை வெகு விரைவில் பெறலாம்.

### பலா பலன்கள்

1. பக்க விளைவற்றது.
2. தலைமயிர் பளபளப்பாகவும், தடிப்பாகவும் வளர உதவும்.
3. மண்டையோட்டில் எவ்வித படிவுகளையும் படியவிடாது.

## கிடைக்குமிடங்கள்

| | | |
|---|---|---|
| **SCARBOROUGH** | | |
| இரா சுப்பர் மார்க்கட் | (Midland & Eglinton) | 416-269-2622 |
| சங்கர் அன் கோ | (Kennedy & Eglinton) | 416-759-5100 |
| சுரபி | (Birchmount & Eglinton) | 416-285-8518 |
| லோட்ஸ் சுப்பர் மார்க்கட் | (Markham & Eglinton) | 416-266-5025 |
| லோட்ஸ் சுப்பர் மார்க்கட் | (New Location) | 416-264-1546 |
| எஸ். பி. இம்போட்டர்ஸ் | (Brimley & Lawrence) | 416-266-3077 |
| நியூ ஸ்பைசி லாண்ட் | (Markham & Sheppard) | 416-292-9769 |
| ஜவ்னா சுப்பர் மார்க்கட் | (Markham & Tuxedo Crt.) | 416-289-8812 |
| யாழ்நகர் ரேடர்ஸ் | (Midland & Ellesmere) | 416-285-0587 |
| யாழ்ரன் மார்க்கட் | (Warden & Finch) | 416-494-9494 |
| டெயிலி நீட்ஸ் | (Pharmacy & Finch) | 416-490-7703 |
| **MARKHAM** | | |
| பிரியாஸ் | (Kennedy & Denison) | 905-944-1229 |
| பிரியாஸ் | (Brimley & Steeles) | 905-415-8501 |
| **BRAMPTON** | | |
| S.T.P. MARKET | (Kennedy / Steeles) | 905-455-3483 |
| **MISSISSAUGA** | | |
| தர்ஷனாஸ் | (Dundas & HWY 10) | 905-270-7576 |
| தர்ஷனாஸ் | (Field Gate & Bloor) | 905-625-8152 |
| **TORONTO** | | |
| துவாரகாஸ் | (Victoria Park & Eglinton) | 416-757-1091 |
| நிகல் குறோசரி | (Victoria Park & St. Clair) | 416-755-6724 |
| றோயல் குறோசரி | (Victoria Park & Danforth) | 416-693-8078 |
| யாழ் சுப்பர் ஸ்ரோஸ் | (Wellesley & Parliament) | 416-923-9806 |
| தனா சுப்பர் மார்க்கட் | (Queen & Jemeson) | 416-534-7770 |
| பாலா பிறதர்ஸ் | (Landsdowne & Bloor) | 416-532-6809 |
| ஏஜிபி | (Landsdowne Subway) | 416-531-3306 |
| **ETOBICOKE** | | |
| சுபீனா சுப்பர் மார்க்கட் | (Keele & Sheppard) | 416-638-9554 |
| ஐயம்ஸ் குறோசரி | (Jane & Finch) | 416-636-0884 |
| உதயாஸ் | (Kipling & Steeles) | 416-740-7971 |
| **MONTREAL** | | |
| மார்சே மாருதி | (155 Jean Talon East) | 514-270-9511 |
| மார்சே எமி | (6455 Victoria Ave.) | 514-731-5368 |
| மார்சே துர்க்கா | (Parc Metro) | 514-276-9262 |
| மார்சே அலெக்ஸ்சாண்டியா | (Cote Desneiges) | 514-737-0612 |
| மார்சே மெயில்ஸ் | (Sauve / St. Laurent) | 514-389-5236 |
| மார்சே A.M.R. | (Cote Vertu / Sauve) | 514-334-6737 |





உங்கள் உடல், உள நலம் பேண

## வைத்திய நிலையம்

**டாக்டர் யசோ தர்மரத்தினம்**
குடும்ப வைத்தியர்
*(யாழ். வைத்தியசாலையில் பலவருட அனுபவம் பெற்றவர்)*

Dr (Mrs) YASHO THARMARATNAM
(MBBS, MD), (CCFP)

## FAMILY DOCTOR




2466 Eglinton Ave. East, Unit 03
Scarborough, ON M1K 5J8
*(Near Kennedy Subway Station)*

**(416) 266-7786**

# சங்கம் வளர்த்த தமிழ்

## 32

மணிமேகலை மணிபல்லவத்தை (யாழ்ப்பாணத்தை) ஆண்ட நாகவம்ச அரசன் வானவனது மகள் பீலிவளையை சோழ அரசன் தொண்டைமான் நெடுமுடிக்கிள்ளி மணம் முடித்ததாகக் கூறுகிறது. பீலிவளை களவொழுக்கத்தில் பிறந்த தனது குழந்தையை கிள்ளி வளவனிடம் சேர்ப்பிக்குமாறு ஒரு செட்டியிடம் கொடுத்து அனுப்ப, அவன் சென்ற கப்பல் புயலில் சிக்கிக் கடலில் மூழ்கி விடுகிறது. அந்தச் செய்தியை தப்பிப் பிழைத்த மாலுமிகள் கிள்ளிவளவனிடம் தெரிவிக்க மன்னன் சோகத்தில் ஆழ்ந்து போகிறான். மணி இழந்த நாகத்தைப் போல மன்னன் கடலிலும் கரையிலும் தனது குழந்தையைத் தேடுகிறான். இதனால் ஆண்டு தோறும் இந்திரனுக்கு எடுக்கப்படும் விழாவைக் கொண்டாட மறந்து போகிறான். இதனால் கோபமுற்ற மணிமேகலா தெய்வம் சோழனின் தலைநகரத்தை கடல் கொள்ளுமாறு சபிக்கிறாள். அவ்வாறே அவனது உறந்தை நகர் கடல் அலைகளால் விழுங்கப்படுகிறது.

ஆனால் குழந்தை தொண்டைக்கொடியால் சுற்றப்பட்டு திரையால் அள்ளுப்பட்டு கரை சேர்ந்தது என மணிமேகலை கூறுகின்றது. இதன் காரணமாக அவர் தொண்டைமான் என்றும் இளந்திரையன் என்றும் அழைக்கப்பட்டான்.

அவன் ஆட்சி புரிந்த பகுதி தொண்டை மண்டலம் எனப்பட்டது. இவனே பெரும் பாணாற்றுப் படையில் போற்றப்படும் தொண்டைமான் இளந்திரையன் ஆவான். மணிபல்லவத்தில் இருந்து போந்தவர் ஆதலின் பல்லவர் தம்மை "போந்தர்" என்றும் "பல்லவர்" என்றும் கூறிக் கொண்டனர். ஆனால் பல்லவரின் தோற்றம் பற்றி வரலாற்று ஆசிரியர்களிடம் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகிறது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வடஇலங்கையை ஆண்ட நாகர் பலம் பெற்று முழு இலங்கையையும் ஆண்டதாகத் தெரிகிறது. அப்படி இலங்கை முழுவதையும் ஆண்ட நாகவம்ச அரசர்களின் பெயரை மகாவம்சம் பட்டியல் இட்டிருக்கிறது.

(1) காலதன்நாகன் - கி.மு. 50 -44) (2) கோரநாகன் - கி.மு.3 கி.பி.9 (3) மகாதிக்க மகாநாகன் - கி.பி. 66-78 (4) இளநாகன் - கி.பி. 95 - 101 (5) மகல்லகநாகன் அல்லது மகல்லநாக - கி.பி. 193 -199 (6) கனிஷ்ட திசா - கி.பி. 223 - 241 (7) குஜ்யநாகன் - கி.பி. 241 - 243 (8) குஞ்சன்நாகன் - கி.பி. 243 - 244 (9) ஸ்ரீநாகன் 1 - கி.பி. 244 - 263 (10) வொகரிக்க திசா - கி.பி.263 - 285 (11) அபயநாகன் - கி.பி. 285 - 293 (12) ஸ்ரீநாகன் 11 - கி.பி. 293 - 295 (13) விஜயன் - கி.பி 295 - 296 (மகாவம்ச ஆசிரியர் விஜயன் வருகையை புத்தரின் பரிநிர்வாணத்தோடு (கி.மு.483) இணைத்து விட்டதால் அவனுக்குப் பின் ஆண்ட அரசர்களின் ஆட்சிக்காலம் வேண்டுமென்ற நீட்டப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக பாண்டுகாபன் ஆட்சி 70 ஆண்டு காலமும் அவனது மகன் மூத்தசிவன் ஆட்சி 60 ஆண்டு காலமும் நீடித்ததாக எழுதப்பட்டுள்ளது)

வடஇலங்கையில் ஒரு நாகவம்ச இராச்சியங்கள் கி.மு. 6ம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 3ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இருந்ததற்கு வலுவான சான்றுகள் உள. அதன் தலைநகரம் ஒன்றில் கதிரமலை (கந்தரோடை) அல்லது மாந்தையாக இருந்திருக்க வேண்டும்.

மகாபாரதம் பஞ்ச பாண்டவர்களில் ஒருவரான அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை மேற்கொண்டதைப் பற்றிச் சொல்கிறது. ஆரம்பத்தில் வியாசர் பாடிய பாரதக்கதை சில ஆயிரம் சுலோகங்களைக் கொண்டதாகவே இருந்தது. பின்னர் பல இடைச்செருக்கல்கள் ஏற்பட்டு தற்போது சுமார் 100,000 சுலோகங்களைக் கொண்ட இதிகாசமாக விரிந்துள்ளது. இருந்தும் வடமொழியில் எழுதப்பட்ட பாரதக்கதை ஒப்பீட்டளவில் மூலக்கதையை ஒத்ததாக இருக்கிறது. பாரதக்கதையில் அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை போவது பற்றிய கிளைக்கதை சொல்லப்படுகிறது. இந்தக்கதையின்படி அர்ச்சுனன் கலிங்கநாட்டைக் கடந்து பல நாடு, நகரங்கள் புனித தலங்களைத் தரிசித்த பின்னர் மணிப்புரத்தை அடைகிறான். அங்கு சித்திரவாகனனின் மகளான சித்திராங்கதையைக் கண்டு காதல் கொண்டு அவளை மணக்கிறான். மணிப்புரத்தை பாண்டிய நாடாகவும் சித்திரவாகனனை ஒரு பாண்டிய மன்னனாகவும் பாரதக்கதையில் சொல்லப்பட்டாலும் மணிப்புரம் நாகநாடென்றும் சித்திரவாகனன் நாகவம்ச அரசன் என்றும் கொள்வதே சரியாக இருக்கும் என இராசநாயகம் முதலியார் தாம் எழுதிய பண்டைய யாழ்ப்பாணம் என்ற நூலில் குறிப்பிடுகிறார். சித்திரவாகனன் என்ற பெயர் கொண்ட பாண்டிய மன்னர் எவரும் பாண்டிநாட்டை ஆட்சி செய்யவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

# நாகவம்சம்

கதிரமலையை (இன்றைய கந்தரோடை) ஆண்ட நாகவம்ச அரசனின் (கிபி 2ம் நூற்றாண்டு) மகளை சோழ அரசனான கிள்ளிவளவன் மணந்ததாக மணிமேகலை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இதேபோல் விஜயன் (கிபி 483 - 445) குவேனியைத் துரத்திவிட்டு பாண்டிய அரசனின் மகளை மணந்தான் என்பதற்குப் பதில் நாகவம்ச அரசன் ஒருவனின் மகளை மணந்தான் என்பதே பொருத்தமாக இருக்கும். காரணம் எந்த அரச பாரம்பரியமும் இல்லாத விஜயனுக்கு பாண்டிய மன்னள் ஒருவர் தனது மகளை திருமணம் செய்து வைக்க முன்வந்திருக்க மாட்டான்.

விஜயன் வாரிசு இன்றி மறைந்த போது ஓராண்டு காலம் அரசர் யாரும் இருக்கவில்லை. அதன்பின் சிகபுரத்தை (கலிங்கம்) ஆண்ட விஜயனின் இளவல் சுமித்தனின் கடைசி மகன் பாண்டுவாசுதேவன் (கிபி 444 - 414) ஆட்சிக்கு வருகிறான். அவன் பின் அவனது மூத்த மகன் அபயன் (கிபி 414 - 394) அரியணை ஏறுகிறான். அபயன் உயிரோடு இருக்கும் போதே அவனது சகோதரி சீத்தாவின் மகன் பாண்டுகாபன் (கிபி 377 - 307) இயக்கர்களின் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றுகிறான். அவன் இறந்தபின் அவனுக்கும் கிரிகந்தசிவனின் மகள் சுவர்ணபாளிக்கும் பிறந்த மூத்தசிவன் (கிபி307 - 247) ஆட்சிக்கு வருகிறான். அறுபது ஆண்டுகள் ஆட்சி செய்த பின்னர் மூத்தசிவன் காலமாகிறான். அதனையடுத்து அவனது இரண்டாவது மகன் தேவநம்பிய தீசன் (கிபி 247 - 207) முடிசூட்டிக் கொள்கிறான்.

மூத்தசிவன் யாரைத் திருமணம் செய்தான் என்பது சொல்லப்படவில்லை. அவன் ஒரு நாகவம்ச அரசியைத் திருமணம் செய்து இருக்க வேண்டும் என இராசநாயகம் அனுமானிக்கிறார். காரணம் அவனது பூட்டன் (மகாநாகனின் பேரன்) கல்யாணி தீசன் கல்யாணிக்கு அரசனாக வருகிறான். எனவே தேவநம்பியதீசன் ஒன்றில் தமிழ் அல்லது நாகவம்ச அரசனாக இருக்க வேண்டும். அவனது தந்தை பெயர் மூத்தசிவன் தமிழ்பெயராக இருப்பது கவனிக்கத்தக்கது. தேவநம்பியதீசனது உடன்பிறப்பின் பெயர்தகாநாகன். மகா



நக்கீரன்

நாகனின் மனைவி பெயர் தெரியவில்லை. அவள் கல்யாணியைச் சேர்ந்த நாக அரசியாக இருக்க வேண்டும். மகாநாகன் கல்யாணியின் அரசானாக முடிசூட்டிக் கொண்டவன்.

அதன் பின்னர் நாகர் கலப்புத் திருமணங்கள் அதிகரித்தது. கஜபாகுவிற்குப் பின்னர் அரியணை ஏறியவர்கள் சுத்தமான நாகவம்ச அரசர்களாவர்.

அவர்களது ஆட்சி மகல்லக நாகன் (கிபி135) தொடங்கி விஜயன் கொலை செய்யப்படும் வரை (கிபி 248) முதல் சொத்தி சேனன் ஆட்சி வரை (கிபி 434) நீடித்தது. அதன் பின்னர் பழைய கலிங்க வம்சத்தில் தோன்றிய தாதுசேனன் ஆட்சிக்கு (கிபி643) வந்தான்.

கிரேக்க புவியியலாளர் தொலமி (கிபி150) எழுதிய நூலில் தென்னிலங்கையில் வாழ்ந்தவர்களை நாகறோய் எனவும் கிழக்கில் வாழ்ந்தவர்களை நாகதினோய் எனவும் அழைக்கிறார்.

எனவே வடக்கே இருந்த இராச்சியம் தொடர்ச்சியாக நீடித்தபோது அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்திய அரசுகளே கலிங்கர். தமிழர்கள் கைகளுக்கு மாறிமாறிச் சென்றன.

தேவநம்பிய தீசன் தொடக்கம் மகல்லகா நாகன் வரை நானூறு ஆண்டு கால வரலாற்றில் வடக்கே இருந்த நாகதீபத்தைப் பற்றி மகாவம்சத்தில் எந்தக் குறிப்பும் இல்லை.

மகாநாகனின் பூட்டனே காவண்ணதீசன் ஆவான். அவன் திருமணம் செய்தது கல்லாணியை ஆண்ட தீசன் என்பவனின் மகள் விகாரமாதேவி ஆவாள். இவர்களுக்குப் பிறந்தவனே மகாவம்சத்தின் கதாநாயகனாகச் சித்தரிக்கப்படும் துட்டகைமுனு ஆவான். தீசனின் மகனது பெயர் சிவமகாராசன். அவனது இராச்சியத்தைக் கடல் கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

இந்தக் காலகட்டத்தில் நாகர், கலிங்கர், தமிழர் அடங்கிய கலப்பினம் தோன்றி வளர்ந்து தீவின் ஆட்சியாளர்களாகவும் வேளாண்குடிகளாகவும் நிலை பெற்றது.

நாகநாதர், நாகம்மா, நாகதம்பிரான், நாகலிங்கம், நாகரத்தினம், நாகமணி போன்ற பெயர்கள் தமிழர்களிடையே காணப்படுவதற்கு இந்தக் கலப்பே காரணமாகும்.

நகர், நகரம் நாகரிகம் என்ற சொல்லில் இருந்து பிறந்தவையாகக் கருதப்படுகிறது. சங்க காலப் புலவர்கள் பலருக்கு நாகர் என்ற பின்னொட்டோடு கூடிய பெயர்கள் இருந்திருக்கிறது. முரஞ்சியூர் முடிநாகனார், மதுரைப் பூதன் இளநாகனார், புறத்திணை நன்னாகனார்., விரிச்சியூர் நன்னாகனார், வெள்ளைக்குடி நாகனார் என்ற பெயர்கள் அவர்களது நாகவச்ம தொடர்பைக் காட்டுகின்றன.

மகாவம்சத்தில் சொல்லப்பட்டுள்ள தகவலின்படி சேனன் குத்திகன் இருவருமே தமிழ் நாட்டில் இருந்து படையெடுத்து வந்து அனுராதபுரத்தைக் கைப்பற்றி ஆண்ட முதல் தமிழ் அரசர்களாவர். இவர்கள் 22 ஆண்டுகள் (கிமு 177 - 155) ஆட்சி செய்தார்கள். குத்திகனை தேவநம்பியதீசன் வழி வந்த அசேலன் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றினான். அதன்பின் சோழநாட்டில் இருந்து படையெடுத்து வந்த எல்லாளன் அசேலனை வென்று 44 ஆண்டுகள் (கிமு 145 - 101) தீவு முழுவதையும் ஆண்டான்.

தேவநம்பிய தீசன் ஆட்சியின்போதே புத்தசமயம் இலங்கையில் கால்கொள்கிறது. மகத நாட்டை ஆண்ட அசோகச் சக்கரவர்த்தியின் பிள்ளைகள் என்று நம்பப்படும் மகிந்தன், சங்கமித்தை இருவருமே வெள்ளரசு மரத்தோடு வந்து அனுராதபுரத்தை ஆண்டு கொண்டிருந்த தேவநம்பிய தீசனைக் கண்டு அவனைப் புத்த சமயத்திற்கு மாற்றுகிறார்கள்.

மக்ாவம்சம் தேவநம்பிய தீசன் பேசிய மொழி என்ன என்பதைச் சொல்லவில்லை. அது சிங்களமாக இருக்க முடியாது. காரணம் சிங்களம் என்ற ஒரு மொழி அப்போது தோன்றவில்லை. தேவநம்பிய தீசன் பேசிய மொழி அன்று. நாகர், இயக்கர், இயம்பர், இராட்சதர் போன்ற திராவிட தொல்குடிகளது பொதுமொழியாகிய எலு மொழியாகும். இந்த மொழியே தமிழ், வடமொழி, பாளி போன்ற மொழிகளோடு கலந்து சிங்கள மொழியாக உருமாறியது. சிங்களமும் தமிழைப் போன்று திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்பது நல்லூர் கந்தசாமி ஞானப்பிரகாசரது முடிவாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் இடப்பெயர்கள் சில சிங்களம் போல் காணப்படுவதற்குக் காரணம் அவற்றின் மூலம் எலுமொழி என்பதே

(வளரும்)

வெகு விரைவில் வாரம் தோறும்

தாய் நாடு
THAI NADHU

# மரண அறிவித்தல்

வசாவிளானைப் பிறப்பிடாகக் கொண்டவரும், திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியை வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி பாலாம்பிகை சின்னராசா அவர்கள் 29.06.2002 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னராசாவின் அருமை மனைவியாரும்

காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும்

காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் பூபாக்கியம், சின்னம்மா, பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்

ஞானாம்பிகை, அம்மாப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான நடராசா, கணபதிப்பிள்ளை, இரத்தினம், இராசம்மா, பொன்னுத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனியும்

சிந்தாதேவி, சற்குணதேவி, சரோஜினிதேவி, செல்வேந்திராதேவி, சர்வேந்திர ராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்

கந்தசாமி, ஆனந்தராஜா, செல்வரட்ணம், சேதுராமன், சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும்

கோகிலவாணி, ரமேஷ் (கனடா) சதீஷ், ரதீஷ், காலஞ்சென்ற தினேஷ், நிருஜா, துஷானி, கௌதமி, சிவநேசன், மீனு ஆகியோரின் ஆசைப் பேத்தியாரும்

வேணுஜனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**தகவல்: சர்வேந்திரராசா, ரமேஷ் (905) 764 - 8750**



திருமதி

பாலாம்பிகை சின்னராஜா

மலர்வு 12.05.1931 உதிர்வு 29.06.2002

# மரண அறிவித்தல்



திருமதி
சிவக்கொழுந்து (சிவம்)
இராஜரட்ணம்

மலர்வு 22.03.1957 உதிர்வு 26.06.2002

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைபுளியங்கண்டு பிள்ளையார் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து (சிவம்) இராஜரட்ணம் அவர்கள் 26.06.2002 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் ராஜரட்ணத்தின் (ரஞ்சன்) அன்பு மனைவியும்

நிஷாந்தன்,சுவிதா, கபிஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும்

காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும்

அருணாசலம் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும்

கந்தையா, சண்முகம் (தபாலதிபர் - யாழ்ப்பாணம்) பொன்னு, வவி, வேவி, ஆகியோரின் இளைய சகோதரியும்

கதிராசிப்பிள்ளை, செல்லத்துரை, செல்லப்பா, திலகவதி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனியும்

பாலமுருகேசு, றோசன், சேகர், கோபி, துளசி ஆகியோரின் அன்பு மாமியாரும்

வசந்தி, பாபு (அமெரிக்கா) அருள், சுமதி (தபாலதிபர் - ஆனைக்கோட்டை) உமாகாந்த் ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 06.07.2002 சனிக்கிழமை *71 Rue DES Rondeavy - 75020 Paris Me Gambetta* இல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

**தொடர்புகளுக்கு 331 45 416705 (பாரிஸ்)**

**தகவல்: வேவி, வசந்தி (416) 299 - 6102 (கனடா)**




-- சோதிடர் தர்மர்

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் | | ராகு புதன்,சனி | சூரியன் வியாழன் செவ்வாய் |
| சந்திரன் | இவ்வார கிரகநிலை | | சுக்கிரன் |
| சந்திரன் | | | |
| | கேது | | |

## மேடம்

தன்காரியம் சித்தியாக முடியும். மனைவி மக்களால் மகிழ்ச்சி கிட்டும். பந்தயம், லாட்டரி போன்ற வற்றில் சிலருக்கு வெற்றி கிட்டும். மேலதிகாரிகளின் ஆதரவு இருந்து வரும். தொழில் ரீதியாக வளர்ச்சி யுண்டாகும். எதிரிகள் வீழ்ச்சிய டைவர். நண்பர்களால் நல்ல பலன் கிட்டும். ஞாயிறு, திங்கள் நல்ல நாட்கள்.

## இடபம்

குடும்பத்தில் சில கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டியிருக்கும். ஆயுதங்களைக் கையாள்பவர்கள் அவதானமாக செயற்படவும். திருமண முயற்சிகள் பலிதமாகும். தடைப்பட்ட திருமணம் நிகழும். மனநிம்மதி தரும் சம்பவங்களும் நிகழும். பதவி உயர்வு போன்ற நன்மைகள் கிட்டும். பணக்கஷ்டம் இருந்து வரும். வீண்அலைச்சலும் உண்டு. புதன், வியாழன் நல்ல நாட்கள்.

## மிதுனம்

மனைவி மக்களால் கஷ்டம் ஏற்படும். உறவினர் நண்பர் உதவி இருந்து வரும். சண்டை சச்சரவு ஏற்படும். புத்திசாலித்தனமாக நடந்து கொள்வது அவசியமாகும். தொழில் முன்னேற்றம் உண்டாகும். உடல்நலம் பாதிப்புக்குள்ளாகும். கடன் தொல்லை தரலாம். எதிரிகளிடம் எச்சரிக்கை தேவை. மனைவியை அனுசரித்துப் போகவும். புதன், வியாழன் நல்ல நாட்கள்.

## கடகம்

செல்வம், கீர்த்தி , கௌரவம் என்பன கிட்டும். பந்தயம் போட்டி களில் வெற்றியுண்டாகும். வழக்கில் நல்லமுடிவு கிட்டும். பிரயாணம் அதிகம்செய்ய வேண்டி யிருக்கும். கெட்ட பெயர் கேட்க வேண்டி வரும். புதிய முயற்சிகள் வெற்றி தராது. விபத்துக்கள் வராமல் நடந்து கொள்ளவும். வெள்ளி, சனி நல்ல நாட்கள்.

## சிம்மம்

நோய் நீங்கும். வாழ்க்கையிலும் வழக்குகளிலும் வெற்றி கிட்டும். செலவு குறையும். எதிர்பாராத வகையில் பயணம் வந்து சேர வாய்ப்புண்டு. சிறு தொல்லைகள் இருப்பினும் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் உண் டாகும். இன்பம் ஊட்டும் வழிகளில் செல்ல மனம் நாடும். பெரியோர் மதிப்பு உயரும். சனி,ஞாயிறு நல்ல நாட்கள்.

## கன்னி

செய்காரியங்களில் இடையூறு இருந்து வரும். தொழிலி டங்களிலும் மகிழ்ச்சியான நிலை இருக்காது. ஏமாற்றம், பொருள் இழப்பு என்பன ஏற்படும். புதிய தொழில் வாய்ப்பு சிலருக்கு கிட்டும். நண்பர் உதவி இருக்கும். சகல சம்பத்துக்களும் கிடைக்கும். கௌரவம் பெருமை உயரும். கணவன், மனைவி உறவு மகிழ்ச் சியாக அமையும். ஞாயிறு, திங்கள் நல்ல நாட்கள்.

## துலாம்

பயம், சோகம் உண்டாகும். முன்னேற்றத்துக்கான அறிகுறிகள் கிட்டும். கல்வியில் விரயம் உண்டாகும். நிலம் வாங்க விற்க பலன் கிட்டும். பிடிவாத குணம் தொல்லை தரும். உறவினர்களால் நன்மை கிட்டும். செய்தொழிலைக் கவனமாகச் செய்துசிறப்புப் பெறக் கூடியதாக இருக்கும். கணவன், மனைவி உறவு மகிழ்ச்சி தரும். புதன், வியாழன் நல்ல நாட்கள்.

## விருச்சிகம்

செல்வ இழப்புக்களாக நேரிடலாம். கண் சம்பந்தமான நோய்கள் வரும். ஆயுதங்களால் தொல்லை விளை யும். ஆடையாபரணம், தனம் கிட் டும். உறவினர் நண்பர் விருந்து தருவர். குடும்ப உறவுகள் மகிழ்ச் சியாக அமையும். வெற்றி கிட்டும். பெரியதாக முன்னேற்றம் உண் டாகும். வெள்ளி, சனி நல்ல நாட்கள்.

## தனுசு

போகசுகங்கள், செல்வாக்கு அதிகரிக்கும். அரசாங்க ஆதரவு கிட்டும். மானக்கேடு ஏற்படலாம். பொருள் விரயம் ஏற்படும். தொழிலில் நட்டம் ஏற்பட இடமு ண்டு. வீட்டிலும் வெளியிலும் ஆதரவு இருக்கும். குடும்ப உறவுகள் சீராகும். அறிமுகம் இல்லாத பெண்களுடனான தொடர் புகளில் அவதானம் தேவை. ஞாயிறு,திங்கள் நல்ல நாட்கள்.

## மகரம்

பிள்ளைகள் சம்பந்தமான மனத் துன்பங்கள் வரலாம். தொழில் தடங்கல்கள் ,அதிகாரிகள் விரோதம் என்பன ஏற்படும். உறவினர்களைப் பகைத்துக் கொள்ளாதிருக்கவும். தேவையில்லாத விடயங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள் ளவும். மனந்தளராமல் இருந்தால் நினைத்ததைச்செய்து முடிக்கலாம். புதிய உறவுகள் ஏற்படும். புதன்,வியாழன் நல்ல நாட்கள்.

## கும்பம்

தாய்வழியிலிருந்து நன்மைகள் கிட்டும். செய்காரியங்கள் திருப்திக ரமாக அமையும். செலவு அதிகமாகும். பிறரை நம்பக்கூடாது. நண்பர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடும். கண், காது இவற்றில் நோயுண்டாகும். வீண் சச்சரவுகள் ஏற்படலாம். குடும்பத்தில் நன்மைகள் விளையும். புதன், வியாழன் நல்ல நாட்கள்.

## மீனம்

வாகனங்கள் மூலம் லாபம்கிட்டும். நண்பர்,மேலதிகாரிகள் ஆதரவு இருந்து வரும். பந்தயம்,லாட்டரி போன்றவற்றில் சிலருக்கு வெற்றி கிட்டும். வெளியூர் பணம் வாய்க்கும். வழக்குகள் வெற்றி தரும். சிறு விபத்துக்கள் ஏற்படலாம். திரவிய நாசம் ஏற்படும். கல்வியில் நல்ல முடிவு கிட்டலாம். உடல் நலம் பாதிக்கும். வெள்ளி,சனி நல்ல நாட்கள்.

உங்கள் குழந்தைகளின் ஜாதகக் குறிப்புக்களை சரியாகக் கணிக்க

தொடர்பு கொள்ளுங்கள்

சோதிடர் தர்மர்

A.Tharumalingam
3 Lacey Green
Coulsdon
CR5 1BL
U.K

TORONTO TRUCK & FORKLIFT SCHOOL

இப்பொழுது உங்களது டிரக் லைசன்சுக்குரிய பயிற்சியையும் வகுப்புக்களையும் தமிழ்மொழி மூலம் பெற்றுக் கொள்ளலாம். ஆங்கிலமொழி அறிவு அவசியமில்லை. தமிழ்மொழி மூலமான பயிற்சியும் அறிவுறுத்தலும் உங்களுக்கு இப்போது நேரடியாகவே கிடைக்கின்றது. ஒன்ராறியோவிலேயே மிகப் பெரியதும் திறமைமிக்கதுமான எமது நிறுவனத்தின் மூலம் உங்கள் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வசதிக்காகப் பல பயிற்சி நிலையங்கள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.




REXDALE .......... (416) 675-7500
SCARBOROUGH .......... (416) 213-2222
BRAMPTON .......... (905) 457-7565
HAMILTON .......... (905) 662-9300
MISSISSAUGA .......... (905) 270-1999
TORONTO .......... (416) 675-4444

ஈழநாடு
EEZHANADU
P.O.BOX 878 STATION 'Q'
TORONTO - ONTARIO
CANADA -M4T 2N7
TEL: (905) 653- 3000
(416) 266 - 9919
(416) 528 - 1867
FAX: (905) 653 - 4031

N.K.S. DRAPERY & BLINDS
CUSTOM MADE
- VERTICAL BLINDS
- VENETIAN BLINDS
- DRAPERIES
- CURTAINS
- SHUTTERS

For FREE Estimates & Installation Call:
KETHA
(CCTCC's Award Winner – 2001)

210 SILVER STAR BLVD # 825
SCARBOROUGH - ONT
M1V 5J9
(905) 944-0218
(416) 321-6420

# தமிழ் – முஸ்லிம் ஒற்றுமையைப் பேண புலிகள் திடசங்கற்பம்

முஸ்லிம்கள் தொடர்பாக எமது தலைவரிடம் இருந்து கண்டிப்பான உத்தரவு கிடைத்துள்ளது. முஸ்லிம்களுடன் இன சௌஜன்னியத்துடன் கண்ணியமாக நடக்க வேண்டும். தலைவருடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அனைவரும் மதித்து செயற்பட வேண்டும் என்று கட்டளை வந்திருக்கின்றது. எனவே எந்தவிதமான தமிழ் - முஸ்லிம் வன்முறைகளுக்கும் நாம் இடமளிக்க மாட்டோம். இவ்வாறு கல்முனையில் நடைபெற்ற சமாதானக் கூட்டத்தில் பேசிய விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துணைப் பொறுப்பாளர் பாவா கூறினார்.

பாவா அங்கு மேலும் பேசியதாவது அன்று ஆயுதங்களுடன் நடமாடிய நாம் உறங்கும் போதும் ஆயுதத்தோடு தான் உறங்கினோம். இன்று எம்மிடம் ஓர் ஆயுதமும் இல்லை. ஆயுதமில்லாமல் தான் இப்பகுதியில் உலா வருகின்றோம். அனைத்தும் மக்களை நம்பியே.

எமது நடவடிக்கைகள் தனியே தமிழ்மக்களுக்கானது என்று யோசிக்காதீர்கள். எமது அனைத்துப் போராட்ட நடவடிக்கைகளும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கானதேயன்றி தமிழர்களுக்கானது மட்டுமல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். அதன் ஓர் அங்கமே பிரபா - ஹக்கீம் ஒப்பந்தம். அதனை எந்த விதத்திலும் பாதிக்க இடமளிக்க மாட்டோம். யாராவது உடைக்க நினைத்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அக்கரைப்பற்றில் கொடியை எரித்த சம்பவத்திற்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு கலைந்து போகக் கூறினேன். எமது அலுவலகத்தில் இருந்து 200 யார் தூரத்தில் வெடிச் சத்தங்கள் கேட்டன. எனினும் நாம் அமைதியாக, பொறுமையாக இருந்து இனஉறவு பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக சிலவற்றைச் சகித்துக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம்.

முஸ்லிம் சகோதரர்களே! உங்கள் பிரச்சனைகளை எம்மிடம் சொல்ல விரும்பினால் எங்கு வேண்டுமானால் வருவேன். நீங்கள் எமது அலுவலகத்திற்கு தான் வரவேண்டும் என்பதில்லை. பள்ளிவாசலுக்கு மக்களை அழைத்துவிட்டு என்னை அழையுங்கள் வருகிறேன். மனம் விட்டுக் கதையுங்கள்.

ஹர்த்தால் குறைக்கப்பட வேண்டும் என்றுகரிகாலன் தெரிவித்துள்ளார் என்றும் பாவா மேலும் தெரிவித்தார்.

# அரசுக்கு யுத்தத்தின் மீது நம்பிக்கை இல்லை

## சென்னையில் ஈழத்தமிழ் அகதிகள் மத்தியில் ஜயலத் உரை

நான் எதிர் கட்சி எம்.பியாக இருந்தபோது இலங்கை இனப்பிரச்சனை பற்றிப் பேசி வந்தமையால் என்னை விடுதலைப்புலிகளின் உளவாளி என்று கூறினர். எனினும் பிரதமர் என் மேல் நம்பிக்கை வைத்து எனக்கு இந்தப் பொறுப்பை அளித்துள்ளார். இலங்கை அரசுக்கு யுத்தத்தின் மீது நம்பிக்கை கிடையாது.

இவ்வாறு அகதிகள் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா தமிழகத்தில் வைத்துத் தெரிவித்துள்ளார். வாலாஜா பாலாறு அணைக்கட்டுப் பகுதியிலுள்ள இலங்கை அகதிகள் முகாமுக்குச் சென்று பார்வையிட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை அகதிகள் மத்தியில் அவர் மேலும் கூறுகையில் எல்லோரும் அமைதியைத் தான் விரும்புகின்றார்கள். இந்த அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு இந்திய அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்கின்றோம். உடன்படிக்கைக்குப் பின்னரும் தாயகம் திரும்பும் இலங்கைத்தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகியோர் சமஅந்தஸ்துடன் நடத்தப்படுவார்கள்.

இலங்கை இனப்பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்க்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்படியாக விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் தேசிய அரசியலில் பங்கேற்க வேண்டும் என இலங்கை அரசு விரும்புகின்றது.

எனது அகதிகள் முகாம் விஜயத்தின் நோக்கம் அகதிகளின் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும் என்பதேயாகும். இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை வலுகட்டாயமாக அழைத்துச் செல்லும் எண்ணம் இல்லை. இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் முகாமை நான் பார்ப்பது இது கடைசி முறையல்ல. பிரச்சனைகளைத் தீர்க்க நான் அடிக்கடி இம்முகாமுக்கு வருவேன். இந்திய, தமிழக அரசு அளிக்கும் கல்விச் சான்றுகளுக்கு இலங்கை அரசு அங்கீகாரம் அளிக்கும். இதன் காரணமாக பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி பாதிக்காது. இது சம்பந்தமாக தமிழக முதல்வருடன் பிரதமர் ரணில் பேச்சு நடத்தியுள்ளார் என்றும் அமைச்சர் அங்கு கூறினார்.

# அரசு – புலிகள் பேச்சுக்கு அனுசரனையாளராக அல்ல மத்தியஸ்தராக நோர்வே முடிவு

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் இழுபறி நிலை தொடர்வதையடுத்து இந்த விவகாரத்தில் மத்தியஸ்தராகப் பணி புரிவதென நோர்வே முடிவு செய்துள்ளது என்று நோர்வே தூதரகப் பேச்சாளர் தோமஸ் தெரிவித்தார்.

இதுவரை காலமும் இந்த விவகாரத்தில் அனுசரணையாளராகப் பணி புரிந்து வரும் நோர்வே நேரடிப் பேச்சவார்த்தைகளை தாய்லாந்தில் விரைவாக ஆரம்பிக்க வசதியாக இரு தரப்புக்களுக்கும் இடையில் மத்தியஸ்தராகப் பணியாற்ற நோர்வே முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா அரசடனும் விடுதலைப்புலிகளுடனும் கலந்துரையாட இருப்பதாகவும் தூதரகப் பேச்சாளர் தோமஸ் தெரிவித்தார்.

# தமிழீழக் கொள்கையில் ம.தி.மு.க மட்டுமே உறுதி என்கிறார் வை.கோ

தமிழீழம் அமைவதுகுறித்து அ.தி.மு.க. ஒன்றும் சொல்லாது. அமைந்தால் மகிழ்ச்சி என்ற நிலையில் தி.மு.க. இருக்கிறது. ஆனால் அமைய வேண்டும் என்பதில் ம.தி.மு.க. உறுதியாக உள்ளது. இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோ தெரிவித்தார். சென்னையில் கடந்த 25ம்திகதி நடைபெற்ற "செஞ்சிக் கோட்டை முதல் செங்கோட்டை வரை செஞ்சியார் முழக்கம்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். எவ்வளவு பிரச்சனைகள் வந்தாலும் தொடர்ந்து குரல் கொடுப்போம் என்றார்.

# மீனவர் மீதான கெடுபிடிகள் நிறுத்தப்பட வேண்டும் என்கிறார் சூசை

நாட்டில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு ஒர சுமூகமான சூழ்நிலை ஏற்பட்டு வரும் இன்றைய சூழ்நிலையில் கடற்தொழிலையே நம்பி வாழ்க்கை நடத்தும் எமத மீனவர்களின் வலைகளை வெட்டியும் அவர்களின் தொழிலுக்கு கட்டுப்பாடுகளை விதித்தும் கடற்படையினர் மேற்கொண்டு வரும் அடாவடித்தனங்களை உடனடியாக நிறுத்த வேண்டும். இவ்வாறு கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ரொன்ட் புரு கோவிட்டிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று கிளிநொச்சியில் சந்தித்து உரையாடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த சூசை புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கடற்பரப்பில் கடற்படை மேற்கொள்ளும் அடாவடித்தனங்களையும் எடுத்துரைத்தார். இச்சந்திப்பு ஒருமணி நேரம் நடந்தது

# இலங்கை மாணவர்களுக்கு நோர்வே புகழாரம்

நோர்வேயிலுள்ள இலங்கை மாணவர்கள் அந்நாட்டு மாணவர்களை விட உயர்கல்வியில் பிரகாசிக்கின்றார்கள் என்று நோர்வே புள்ளி விபரப் பணியகம் தெரிவித்துள்ளது.

நோர்வேயில் 19 வயதுக்கும் 24 வயதிற்கும் இடைப்பட்ட நோர்வேக்காரர்கள் தொகையில் 26 சத வீதமானவர்கள் உயர்கல்விக்குத் தகுதி பெறுகின்றார்கள். ஆனால் அதே வயதிற்குட்பட்ட இலங்கை மாணவர்கள் 48.7 சத வீதமானவர்கள் உயர்கல்விக்குத் தகுதி பெறுகின்றார்கள்.

ஜேர்மன் மாணவர்கள் 37.8 சதவீதமும், வியட்னாமியர்கள் 37.1 சத வீதமும், இந்தியர்கள் 33 சத வீதமும் உயர்கல்விக்குத் தகுதி பெறுகின்றார்கள் என்று மேற்படி புள்ளி விபரப்பணியகம் அறிவித்துள்ளது.

நீங்கள் வாகன விபத்தில் உங்கள் தவறால் அல்லது மற்றவர் தவறால் பாதிக்கப்பட்டீர்களா?

SIDNEY FINANCIAL AND ACCIDENT BENEFIT SERVICES
SIDNEY K. SITHIRAVADIVEL B.A. (Hons)
(416) 745-2794 (416) 745-0010
FAX: (416) 745-9228
2885 JANE STREET, UNIT # 2, NORTH YORK

அப்படியாயின் அவ் விபத்தால் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய இழப்பீடுகளான
- நிகழ்கால / எதிர்காலச் சம்பள இழப்பீடுகள்
- உங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான கொடுப்பனவுகள்
- வீட்டைப் பராமரிப்பதற்கான கொடுப்பனவுகள்
- வணிக இழப்பீடுகள்
- கல்வி இழப்பீடுகள்
- மறுதொழில் பயிற்சித்தல்
- சிறப்பு மருத்துவ வசதிகள்

மற்றும் விபத்துப் பற்றிய சட்ட உரிமைகளையும் ஆலோசனைகளையும் தமிழில் பெற்றுக் கொள்வதற்கு நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்

இவற்றுடன் உங்கள்
- INCOME TAX
- BUSINESS ACCOUNTING
- BUSINESS G.S.T, P.S.T.
- PAYROLL
- PERSONAL LOAN & BUSINESS LOAN
- BANKRUPTCY
- PARALEGAL SERVICES (Immigration)

- வருமான வரி
- வியாபாரக் கணக்குகள்
- சம்பளக் கணிப்பீடு
- தனியார், வர்த்தகக் கடன்கள்
- வங்குரோத்து நிலையடைதல்
- குடிவரவு, குடியகல்வு ஆலோசனைகள்